காப்பெற் வீதி
பக்கம் 15

32 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 225 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 25, புதன் 09.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# இலங்கை வந்த ரமபோஷ குழு பல தரப்புகளுடன் நேற்று பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 9
இலங்கை வந்த தென்னாபிரிக்க சிறப்புப் பிரதிநிதி சிறில் ரமபோஷ தலைமையிலான குழுவினர் நேற்று சூறாவளிப் பயணம் மேற்கொண்டு பலதரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினர். நேற்றுக் காலை கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துக் கலந்துரையாடிய ரமபோஷ குழுவினர், நண்பகல் யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்பின்னர் அவர்கள் நேற்றைய தினமே கொழும்பு பயணமாகினர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பு காலை 7.15 மணியிலிருந்து 8.45 மணி

22 ஆம் பக்கம் பார்க்க

- இனப்பிரச்சினையை தீர்ப்பது குறித்து ஆராய்வதாக தமிழ் கூட்டமைப்பிடம் உறுதி.
- வடக்கின் தற்போதைய நிலைமை குறித்து வடக்கு முதலமைச்சரிடம் கேட்டறிந்தனர்.

## அநாவசிய கருத்துகளால் மனவருத்தமடைகின்றோம்

### ரமபோஷ குழுவினர் கூறுகின்றனர்

கொழும்பு, ஜூலை 9
"இலங்கை அரசின் அழைப்புக்கிணங்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விருப்பத்துக்கு அமையவும்தான் நாம் இலங்கை வந்தோம். ஆனால், எமது பயணத்தை இலங்கை அரசின் பங்காளிக் கட்சிகள் கண்டபடி விமர்சிக்கின்றன என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. அதனைப் பார்த்து நாம் மனவருத்தமடைகிறோம். இதனை இலங்கை அரசதரப்பிடம் நேற்று நடத்திய சந்திப்பின்போது கூறியுள்ளோம்." - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளனர் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கு அனுசரணை வழங்கும் வகையில் தென்னாபிரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள சிறில் ரமபோஷ தலைமையிலான குழுவினர்.
நேற்றுக் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"நாம் இலங்கைக்குத் தீங்கு விளைவிக்க இங்கு வரவில்லை. இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவேண்டும். இங்கு நல்லிணக்கம் - சமாதானம் ஏற்பட வேண்டும். அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதே தென்னாபிரிக்க அரசின் நோக்கம் என்றும் ரமபோஷ தலைமையிலான குழுவினர் தெரிவித்தனர்."- என்று தெரிவித்தார்.
"தென்னாபிரிக்காவின் நல்லிணக்க முயற்சிகளை தாம் வரவேற்கின்றோம். அதற்குக் கூட்டமைப்பின் முழு ஆதரவு இருக்கும். தென்னாபிரிக்காவின் கடந்தகால பட்டறிவு இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உறுதுணையாக இருக்கும்"- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-சி)



நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த தென்னாபிரிக்க சிறப்புப் பிரதிநிதி சிறில் ரமபோஷி பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்றார்.

## அல்-ஜசீரா ஊடகவியலாளர் விசாரணை

கொழும்பு, ஜூலை 9
அல்-ஜசீரா இணையத்தள ஊடகவியலாளர் டினோக் கொலம்பகே, இலங்கை குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கொழும்பில் நேற்றுமுன்தினம் நான்கு மணிநேரம் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அளுத்கம வன்முறைகள் குறித்து அவர் அறிக்கையிட்டமை தொடர்பிலேயே விசாரணை மேற்கொள்ளப்பட்டன என்று, அவரது சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

23 ஆம் பக்கம் பார்க்க

## மன்னிப்பு கேட்க வேண்டுமாம் பாப்பரசர்



கொழும்பு, ஜூலை 9
உலகம் முழுவதும் பரந்து வாழும் கோடிக்கணக்கான கத்தோலிக்கர்களின் மதத் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ்,

22 ஆம் பக்கம் பார்க்க

## எமது உறவுகளைக் காயங்களுடன் இராணுவத்திடமே ஒப்படைத்தோம்

### அவர்கள் எங்கே? என ஆணைக்குழுவிடம் உறவினர்கள் கண்ணீருடன் கேள்வி

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதிநாள் அமர்வு நேற்று கரைதுறைப்பற்றில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம், ஜூலை 9
"காயங்களுடன் எங்கள் உறவுகளை இராணுவத்தினரிடம் ஓமந்தையிலும், வட்டுவாகலிலும் வைத்து கையளித்தோம். அவர்கள் பஸ்ஸில் ஏற்றிச் செல்லப்பட்டதை நாம் நேரில் கண்டோம். 5 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் எங்கள் உறவுகள் தொடர்பில் இதுவரையில் யாரும் எந்தப் பதிலும் சொல்லவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது? அவர்களை எப்படியாவது மீட்டுத் தாருங்கள்"- இவ்வாறு தெரிவித்தனர் ஆணைக்குழு முன்னிலையில் நேற்

23 ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவர் பற்றாக்குறை விவரங்களை தாருங்கள்

### இந்திய துணைத் தூதரகம் கேட்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடக்கு, கிழக்கில் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்றது என்று வடக்கு மாகாண சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை அடுத்து, எந்தெந்தத் துறைகளில் எத்தனை மருத்துவர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது என்பது தொடர்பில் விவரங்களைத் தருமாறு கோரியுள்ளது இந்தியத் துணைத் தூதரகம்.

23 ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழு அறிக்கை பகிரங்கப்படுத்தப்படாது

யாழ்ப்பாணம், ஜூலை 9
"ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்படாது. அந்த அறிக்கை ஜனாதிபதிக்கு மாத்திரமே தெரியப்படுத்தப்படும். அந்த அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பில் பகிரங்கப்படுத்த முடியாது"- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட, காணாமற் போனோர் தொடர்பில்

22 ஆம் பக்கம் பார்க்க

இராஜதந்திர அசட்டுத்தனத்தால் பாகிஸ்தானோடும் சிக்கல்

பக்கம் 14

## 13 இற்கு அப்பால் தீர்வுக்கு தயாரெனில் தெரிவுக்குழுவில் பங்கேற்கும் ஐ.தே.க.

### ஜோசப் மைக்கல் பெரேரா கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 9
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத்திட்டத்துக்கு அரசு தயாராகுமானால் தெரிவுக் குழுவில் ஐக்கிய தேசியக் கட்சி பங்கேற்கும் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் மைக்கல் பெரேரர் தெரிவித்தார்.



அத்தோடு, அதிகாரப்பகிர்வு விடயத்தில் அரசிடம் ஒரு தெளிவான முடிவு இல்லாதமையினால் தெரிவுக்குழுவில் பங்கேற்பதில் எந்தவித பயனுமில்லை என்றும் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள அரசிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு 'மிஸ்ட் கோல்' ஒன்றேனும் வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி

23ஆம் பக்கம் பார்க்க

உதயன் 09.07.2014

# அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான அச்சுறுத்தல் குறித்து ஐ.நா. கவனம்

நியூயோர்க். ஜூலை 9

அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கு இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள எச்சரிக்கை குறித்து கவனம் கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.




அரச சார்பற்ற தொண்டு தமது ஒழுங்குகளுக்கு அப்பால் சென்று செயற்படக்கூடாது என்று பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. அது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் செயலாளரின் பேச்சாளர் பர்ஹான் ஹக்கிடம் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது;

"குறித்த எச்சரிக்கை தொடர்பில் கவனமாக ஆராய்கின்றோம். அதன்பின்னரே அது குறித்து ஐ.நாவின் நிலைப்பாடு வெளியிடப்படும்" - என்று தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி பட்டறைகளை நடத்துதல் உட்பட்ட செயல்கள் மூலம் தன்னார்வு நிறுவனங்கள் தமது ஒழுங்குகளை மீறுவதாகத் தெரிவித்திருந்த பாதுகாப்பு அமைச்சு, அவ்வாறு செயற்படும்பட்சத்தின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது. (ற)

## தலாய் லாமாவின் கருத்து கண்டிக்கப்பட வேண்டியது

### தேசத்தை பாதுகாக்கும் தேசிய இயக்கம் கூறுகின்றது

கொழும்பு, ஜூலை 9

திபெத்தின் ஆன்மிகத் தலைவர் தலாய் லாமாவின் கருத்து கண்டிக்கப்பட வேண்டியது என்று தெரிவித்துள்ளார் தேசத்தை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் அல்லே குணவன்ச தேரர்.

இலங்கை, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துவதைப் பௌத்தர்கள் நிறுத்த வேண்டும் என்று திபெத்தின் ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா கருத்துத் தெரிவித்திருந்தார். அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே குணவன்ச தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

"இலங்கை வாழ் முஸ்லிம்கள் சிங்கள பௌத்தர்களால் ஒடுக்கப்படுகின்றனர் என்று தலாய் லாமா குற்றஞ்சுமத்தியுள்ளார். உண்மையான தகவல்கள் தெரியாமல் இவ்வாறான கருத்துக்களை வெளியிடக் கூடாது. தலாய் லாமாவின் இந்தக் குற்றச்சாட்டு உள்நாட்டில் இனங்களுக்கு இடையிலான நல்லுறவை பாதிக்கும்.

பௌத்த தலைவரான தலாய் லாமாவை பிழையாக வழி நடத்தி இந்த கருத்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொய்யான தகவல்களின் அடிப்படையில் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படக் கூடிய வகையில் சர்வதேச ரீதியில் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை வாழ் சிங்கள பௌத்தர்கள், மத ரீதியான கொள்கைகள் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்த செயற்படுகின்றனர். இந்த விடயங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு, தூதுவராலயங்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## கைதான இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 9

இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விரைவில் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் லால்.டி. சில்வா,

"தற்போது சுமார் 37 இந்திய மீனவர்கள், இலங்கை சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன"- என்று தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்த மீனவர்கள் கடந்த இரண்டு வாரங்களில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்குச் சொந்தமான 39 படகுகள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. (ற)



புத்தளம் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று மாதம்பை கூட்டுறவு கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. புத்தளம் மாவட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

## உயிருக்கு அச்சுறுத்தல்; விஜித தேரர் கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 9

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் ஜாதிக பல சேனா அமைப்பின் தலைவர் வட்டரக்கே விஜித தேரர்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்: "என்றாவது ஒரு நாள் உண்மை ஜெயிக்கும். கடந்த 13 நாள்களாக சோறும் சம்பலும் சாப்பிட்டு சிறைச்சாலையில் பாதுகாப்பாக இருந்தேன். கடந்த ஓராண்டு காலமாக எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஜூன் மாதத்தில் இந்த பாதுகாப்பு மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டது"- என்று அவர் கூறியுள்ளார்.

தம்மைத் தாமே தாக்கிக் கொண்டு பொலிஸாரிடம் பொய்யான முறைப்பாட்டைச் செய்தார் என்று தெரிவித்து வட்டரக்கே விஜித தேரருக்கு எதிராக பாணந்துறை நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. கடந்த சில நாள்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த விஜித தேரர் நேற்று முன்தினம் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (ற)

## பாலிதவின் பதவி விலகல் கடிதத்தை ஏற்கமறுத்தார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 9

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின் பாலித தேவப்பெருமவின் பதவி விலகல் கடிதத்தை, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்க மறுத்துள்ளார்.



அளுத்கமை சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைதுசெய்யாவிட்டால் பொலிஸ் மா அதிபர் பதவி விலகவேண்டும். இல்லாவிட்டால் தான் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவேன் என்று பாலி அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், நேற்று செவ்வாய்கிழமை அவர் தனது பதவி விலகல் கடிதத்தை ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தார். ஆயினும் ரணில் விக்கிரமசிங்க அதை ஏற்க மறுத்துள்ளார். (ற)

## 300க்கும் அதிகமான ஆவணங்களுடன் சாரதி கைது

கொழும்பு, ஜூலை 9

300க்கும் அதிகமான ஆவணங்களுடன் கம்பளை மாரியவத்த பிரதேசத்தில் வைத்து சாரதியொருவரை நேற்றுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சாரதியிடம் இருந்து பிறப்பு சான்றிதழ்கள், மரண சான்றிதழ்கள், வாகன புகை பரிசோதனை சான்றிதழ்கள், தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் உள்ளடங்கலாக 300க்கும் அதிகமான ஆவணங்கள்கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆசனத்தின் கீழ் பகுதியில் 100க்கும் அதிகமான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததுடன் குறித்த ஆவணங்கள் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மேலதிகவிசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## யாழ். பயணித்த பஸ் புத்தளத்தில் விபத்து

### பதினொரு பேர் காயம்



கொழும்பு, ஜூலை 9

புத்தளம், முந்தல் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர். நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ் லொறியொன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிலாபம் மற்றும் முந்தல் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பஸ்சில் பயணித்தவர்களே விபத்தில் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்துக்குள்ளான பஸ்ஸை பின்னால் பயணித்த மற்றுமொரு பஸ்ஸும் மோதியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை முந்தல் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ற)

## ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பில் கே.பியை விசாரிக்ககோரும் வழக்கு

### இந்திய மத்திய அரசுக்கு நீதிமன்று காலக்கெடு

சென்னை, ஜூலை 9

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை விசாரிக்க வேண்டும் என்று கோரும் வழக்கில் பதிலளிப்பதற்கு இந்திய மத்திய அரசுக்கு நீதிமன்றம் 4 வார கால அவகாசம் வழங்கியுள்ளது.

முன்னாள் சி.பி.ஐ. அதிகாரியான ஜெபமணி மோகன்ராஜ் சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவை பரிசீலனைக்கு உட்படுத்தியபோதே நீதிமன்றம் மேற்கண்டவாறு கால அவகாசம் விதித்துள்ளது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், "முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், அவரது நெருங்கிய நண்பரும், விடுதலைப் புலி இயக்கத்தை சேர்ந்தவருமான கே.பி என்றழைக்கப்படும்குமரன் பத்மநாதன், பொட்டு அம்மான் உட்பட பலரை சி.பி.ஐ. பல்நோக்கு புலனாய்வு பிரிவு பொலிஸார் தேடி வந்தனர்.

இந்த நிலையில், இலங்கையில் நடந்த போரில் பிரபாகரன் கொல்லப்பட்டார். கே.பி. என்ற கே.பத்மநாதன் 2009 ஆம் ஆண்டு மலேசியாவில் வைத்து இலங்கை இராணுவம் கைது செய்தது.

ராஜீவ் காந்தி கொலையில் பத்மநாதன்தான், நிதி உதவி வழங்கும் பொருளாளராக செயற்பட்டுள்ளார். இந்தக் கொலையில் நடந்த சர்வதேச தகவல் அனைத்தும்அவருக்கு தெரியும். தற்போது இலங்கையில் உள்ள கே. பத்மநாதனை, சி.பி.ஐ. பல்நோக்கு புலனாய்வுப் பிரிவு பொலிஸார் இந்தியாவுக்கு அழைத்து வந்து, ராஜீவ் காந்தி கொலையின் உண்மை நிலை குறித்து விசாரிக்க வேண்டும் என்று கடந்த 2013 ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி பிரதமரின் தனிச் செயலாளர், மத்திய உள்துறை செயலாளர், சி.பி.ஐ. இயக்குநர் ஆகியோருக்கு மனு அனுப்பினேன். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை"- என்று கூறப்பட்டுள்ளது. (ற)

பக்கங்கள்: முப்பத்திரண்டு

09 JUL 2014

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 25 புதன்கிழமை (09.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 225

# சர்வதேச முயற்சிகளுக்கு நாம் எப்போதும் ஆதரவு தருவோம்

## தென்னாபிரிக்க உப ஜனாதிபதி ரமபோஷ வடக்கு முதல்வரிடம் உறுதியாகத் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 09

மேற்குலகமும் இந்தியாவும் தமிழ்மக்களுக்குச் சார்பாக முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்பட மாட்டோம். பல்லின சமூகத்தைக் கொண்ட எங்கள் நாட்டில் எட்டப்பட்ட நல்லிணக்கத்தைப்போன்று இலங்கையிலும் இன முறுகலைத் தவிர்த்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே எமது விருப்பமும் நோக்கமும் இவ்வாறு தென்னாபிரிக்க உப ஜனாதிபதியும் இலங்கைக்கான விசேட பிரதி நிதியுமான சிறில் ரமபோஷ தம்மிடம் தெரிவித்தார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (22 ஆம் பக்கம் பார்க்க)

## மகனைத் தேடிவந்த தாய்க்கு வீட்டுத் தோட்டத்துக்கு உதவி

### பரிந்துரைசெய்தது ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூலை 09

மகனைக் காணவில்லை என்று சாட்சியமளிக்க வந்த பெண்மணிக்கு, விவசாயம் செய்வதற்குரிய தொழில் உபகரணங்களை வழங்குவதற்கு பரிந்துரை செய்வதாக ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

செங்கமலம் என்ற தாய் தனது 17 வயதான மகன் சதீஸ் கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி முதல் காணாமற் போய்விட்டார் என்று ஆணைக்குழு முன்பாக சாட்சியமளித்தார். (22 ஆம் பக்கம் பார்க்க)

## நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலய தாக்குதலின் 19ஆம் ஆண்டு நினைவு தினம்இன்று

யாழ்ப்பாணம், ஜூலை, 09

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலின் 19ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று நடைபெறவுள்ளது.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் ஆலய பங்குத்தந்தை (23 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை ஈ.பி.டி.பியின் பிடியில் இருந்தபோது கணவர் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூ லை 09

அரியாலையில் வைத்து கடந்த 2006 ஆம் ஆண்டு எனது கணவர் வெள்ளைவானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டார். அந்தப் பிரதேசத்தை அப்போத ஈ.பி.டி.பியினரே கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்று முல்லைத்தீவில் பெண்ணொருவர் நேற்றுச் சாட்சியமளித்தார்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இந்த அமர்விலேயே அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

சசிகரன் கலைச்செல்வி என்ற அந்தப் பெண் சாட்சியமளிக்கையில், 2006 ஆம் ஆண்டு அரியாலைப் பிரதேசத்தில் வசித்து வந்தோம். 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி, வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோர் எனது கணவரைக் கடத்திச் சென்றனர் என்று தெரிவித்தார். (22 ஆம் பக்கம் பார்க்க)

## மகாநாயக்க தேரர்களை சந்திக்கிறது பொதுபலசேனா

கொழும்பு, ஜூலை, 09

அளுத்கம,பேருவளை சம்பவங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் வகையில் பொதுபலசேனா அமைப்பினர் அடுத்த வாரம் மகாநாயக்க தேரர்களை சந்திக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுபலசேனாவினர் தெரிவிக்கையில்;

'அஸ்கிரிய, மல்வத்த உட்பட அனைத்து மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து அளுத்கம, பேருவளை சம்பவங்களின் பின்னணி மற்றும் அதன் உண்மையான நிலவரங்கள் தொடர்பாகவும் நாட்டிற்குள் இயங்கி வரும் பல்வேறுபட்ட அடிப்படைவாத அமைப்புக்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தவுள்ளோம்.

அத்தோடு, பௌத்த குருமார் மற் (23 ஆம் பக்கம் பார்க்க)



காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதிநாள் அமர்வு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இடம்பெற்ற போது தாயொருவர் சாட்சியமளிக்கிறார். (ஐ-5)

## துப்பாக்கியால் சுடப்பட்டே றெக்ஷயன் கொல்லப்பட்டார்

### நீதிமன்று நேற்று முடிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 9

துப்பாக்கியால் சுடப்பட்டு றெக்ஷயன் கொல்லப்பட்டார் என்று ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று முடிவுரை செய்துள்ளது.

மேலதிக நடவடிக்கைகளைத் தொடருமாறு வழக்குத் தொடுநர்களானகுற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாருக்கு நீதிமன்று அறிவித்துள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

றெக்ஷயனது கொலைக்குற்றச் சாட்டில் தொடர்புபட்ட கமல் தொடர்பான தமது தரப்பு விசாரணைகள் அனைத்தும் நிறைவடைந்து விட்டன என்று குற்றப் புலனாய்வுப் பொலிஸார் நீதிமன்றில் கடந்த தவணை தெரிவித்தனர். அதனையடுத்து (22 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லப்பட்டை வைத்திருந்தோருக்கு அபராதம்

ஹட்டன், ஜூலை, 09

வல்லப்பட்டை ஜெல் வைத்திருந்தனர் என்று நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து ஹற்றன் மாவட்ட நீதிமன்ற நீதிவான் அமில ஆரிய சேன தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் கண்டி, பொகவந்தலாவை, மாத்தளை, மட்டக்களப்பு, உக்குவளை, வெலிமடை, மடுல்கல, கந்தப்பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எட்டுப் பேரை நோர்வூட் பொலிஸார் வல்லப்பட்டை ஜெல்லுடன் கைது செய்தனர். அவர்கள் பயணித்த கெப் ரக வாகனத் (22 ஆம் பக்கம் பார்க்க)

## அழைக்கப்பட்டோரில் 101 பேர் வரவில்லை

### நான்கு நாள்களில் 387 புதிய முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 09

முல்லைத்தீவு மாவட்டத்தில் 230 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்த போதும் 129 பேரே சாட்சியமளித்துள்ளனர். அத்துடன் 387 பேர் புதிய பதிவுகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவித்த ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம, திரு மணத்துக்கு அழைப்புக் கொடுத்தால் எல்லோரும் பங்கெடுப்பதில்லை. அதேபோலத்தான் நாம் அழைப்பு விடுத்திருந்தும் பலர் பங்கெடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அழைக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தமது சில காரணங்களுக்காக வராமல்விட்டிருக்கக்கூடும். ஆணைக் குழுவின் அமர்வில் குறைந்தளவானோர் சாட்சியமளித்தமை தொடர்பில் நான் விசாரணை செய்தேன்.

சிலர் வெளிநாடு சென்றுள்ளனர், சிலர் வைத்தியசாலைக்குச் சென்றுள்ளனர், சிலர் தொழிலுக்குச் சென்றுள்ளனர், வேறு சிலர் தங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காகவே சாட்சியமளிக்கவரவில்லை. என்று எனக்கு தெரியவந்தது. இவ்வாறு சாட்சியமளிக்க வருகை தராதவர்கள் ஆணைக்குழுவும் (22 ஆம் பக்கம் பார்க்க)

முதற்தடவையாக உங்கள் திசைகாட்டியின்
விசா வெல்லப்படும் என்கின்ற உறுதிப்பாட்டுடன்
செங்கன் விசா - 2 வருடம் - 4 வருடம்
கல்வித்தகைமை எதுவும் தேவையே இல்லை.
சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி உட்பட
26 நாடுகளுக்கு படிக்க உழைக்க
அரிய வாய்ப்பு
திட்டத்தில் இணைந்து 5 தினங்களில்
தூதரகங்களில் விண்ணப்பதாரி
நேரில் விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம்.
முடிவுநாள் : 11.07.2014
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(49599)(10.6)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 9
வடமாகாண கலாசார திணைக்களத்தின் அனுசரணையுடன் கலாமன்றங்களின் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் கலை இலக்கிய மன்றங்களுக்கான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
இந்தக் கருத்தரங்கில் கலை இலக்கிய குறுந்திரைப்பட மன்றங்களின் தலைவர் , செயலாளர் , பொருளாளர் உட்பட உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடியதாக உரிய நேரத்தில் சமுகம் தரும்படி நல்லூர் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஒ-7)

♦♦♦

யாழ்ப்பாணம், ஜூலை 9
சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் ஏழாவது நிகழ்வாக 'புத்தகமாகக் கலை' என்னும் தலைப்பில் வொஷிங்டன் பல்கலைக்கழகத்தின் தென்னாசியக் கலைகளுக்கான உதவிப் பேராசிரியர் சோனல் குல்லர் கருத்துரை வழங்கவுள்ளார்.
இந்த நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணிவரை 199, கோயில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது. (க)

## பழைய மாணவர் சங்கத்தினால் விழா

சங்கானை, ஜூலை 9
சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.
ப.விஜயகுமார் தலைமையில் பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வில் சங்கானைப் பிரதேச முன்னணிக் கலைஞர்கள் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளது.
முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொள்கின்றார். ஆசியுரையை யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரி பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய நிகழ்த்தவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் தி.வேல்நம்பி மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (க-29)

## கல்வியியற் கல்லூரியில் பயின்ற 282 பேருக்கு நியமனங்கள்

வடமாகாண தேசிய கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமா கல்வியை முடித்து வெளியேறும் ஆசிரியர்கள் 282 பேருக்கு கொழும்பில் வைத்து நேற்று நியமனங்கள் வழங்கப்பட்டன. கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிவைத்தார். இவர்கள் அனைவரும் வடக்கில் உள்ள பாடசாலைகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். 190 பேருக்கு மாகாணப் பாடசாலைகளிலும், 92 பேருக்கு தேசியப் பாடசாலைகளிலும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
மாகாணப் பாடசாலைகளில் நியமனம் பெற்ற ஆசிரியர்களில் 44 பேர் வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கும், 17 பேர் வவுனியா தெற்கு செட்டிகுளம் கோட்டத்துக்கும், 37 பேர் மடுக் கோட்டத்துக்கும், 27 பேர் துணுக்காய் கல்வி வலயத்துக்கும், 45 பேர் முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளுக்கும், மன்னார் கல்வி வலயத்துக்கு 6 பேரும், கிளிநொச்சிக்கு 17 பேரும், தீவகம் மற்றும் கடல் சார்ந்த பாடசாலைகளுக்கு 2 பேரும், வடமராட்சியிலுள்ள மருதங்கேணி கல்வி வலயத்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார். (க)

## பாடசாலைப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 9
கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் கடந்த மாதம் 19ஆம் திகதி முதல் கோண்டாவில் இந்துக் கல்லூரியாகப் பெயர் மாற்றப்பட்டுள்ளது என வடக்கு மாகாண கலை பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே இந்தப் பாடசாலை க.பொ.த. உயர்தரத்தில் கணித, விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புக்களைக் கொண்ட 1ஏபி பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு வகுப்புகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### கண்ணீர் அஞ்சலி



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியை வசிப்பிடமாகவும்
கொண்ட
திருமதி இ.லக்ஸ்மாலாவின்
அன்புக் கணவர்

**கந்தன் இராஜரட்ணம் (அப்பன்)**

அவர்கள் 01.07.2014 அன்று அகாலமரணமடைந்து விட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.07.2014) வியாழக்கிழமை பி.ப. ஒருமணிக்கு ஜேர்மனியில் நடைபெறும் என்பதனை அறியத்தருகிறோம்.

நாவலடி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
077 711 0065 (சி/14935) (4.6.3)

பிரிவால் துயருறும்
மாமி (பூமணி), மச்சான் (கு.பாஸ்கரன்),
மச்சாள்மார்கள்.

**வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு**

சுன்னாகம் இலங்கை வங்கி வீதியில் இரண்டு பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 841 2509 (49690) (12.3.6)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (Brown Road) நல்ல அமைதியான சூழலில் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
(49691)(12.3.6) தொடர்பு: 072 959 6597

**கிரபிக்ஸ் • அனிமேஷன் • மல்டிமீடியா**

விரிவான இலவச கருத்தரங்கு
12 வருடம் அனுபவம்மிக்க விரிவுரையாளர்(CSC India)
13th July (ஞாயிறு)
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
CSC-ASIAN COMPUTER EDUCATION
யாழ்.நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677

### மரண அறிவித்தல்

**சோமசுந்தரம் துரைச்சாமி**
(இளைப்பாறிய ஆசிரியர்)



கிராம்புவில் மேற்கு, கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் துரைச்சாமி 06.07.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - அம்மாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், யாழினி, நரேந்திரன், அரவிந்தன், பாபு ஆகியோரின் தந்தையும், யசோதரன், ரஞ்சனா, சுகந்தி ஆகியோரின் மாமனாரும், சினோஜ், சயன், திவிஷா, கவின் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான கணேசன், பாலசிங்கம், கந்தசாமி, முத்துக்குமாரு ஆகியோரின் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2014) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கிராம்புவில் மேற்கு,
கல்வயல், சாவகச்சேரி. (49595) (12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 432 0309

# மரண அறிவித்தல்



## சின்னட்டியன் பசுபதி

(முன்னாள் முகாமையாளர் ஊரெழு நாவலம்பதி ஞானவைரவர் ஆலயம்)

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டியன் பசுபதி நேற்று (08.07.2014) செவ்வாய்க்கிழமை காலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டியன் - சடைச்சி தம்பதியரின் புத்திரனும், அச்செழுவில் வசித்து காலஞ்சென்றவர்களான சிதம்பரி - நாகி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மாணிக்கத்தின் ஆருயிர்க்கணவரும், இராசேந்திரம் J.P.(கோப்பாய் மத்தியஸ்தர்சபை உறுப்பினர்) சிவமணி, மகேந்திரம், தெய்வேந்திரம் (நர்மதா றான்ஸ்போர்ட்), புவனேந்திரம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சந்திரன் மற்றும் குணேந்திரன் (சுவிஸ்),சந்திராதேவி, சறோஜாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயாநிதி, தருமதுரை (லகின்சன் ரவல்ஸ்), சிவனேஸ்வரி, யோகமலர், கனகேஸ்வரி (ஜேர்மனி), மலர்ராணி, வனிதா (சுவிஸ்), சிவராசா, இராசையா (தேவிரவல்ஸ்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, பொன்னம்மா, பாறி, சிதம்பரம், சின்னத்தம்பி, இளையகுட்டி மற்றும் அரியமணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சின்னாச்சி, கணபதி, குட்டியன், கிருஷ்ணர், ஆச்சிக்குட்டி, இலட்சுமி, ஐயாத்துரை, குட்டிப்பிள்ளை, மீனாட்சி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான நாகர், வயிரவன் ஆகியோரின் சகலனும், சுகந்தி, சுபாஜினி (ஆசிரியர், நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி), குமுதினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), மேனகா(அபிவிருத்தி உத்தியோகத்தர்), தாரணி (ஆசிரியர், பரந்தன் இந்து மகாவித்தியாலயம்), இமயகரன் (ஆசிரியர் , கிளிநொச்சி முருகானந்தா கல்லூரி), நிரோஜன் (சுவிஸ்), பவித்திரா (மாணவி மூன்றாம் வருடம் முகாமைத்துவம் யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற தர்மேஸ்வரி மற்றும் சுதாகரன் (ஜேர்மனி), சுதர்சன் (லண்டன்), சுதா, சுமன், மதிகரன் (கட்டார்), மிரிகா (வளர்பிறை பாலர் பாடசாலை ஆசிரியர்) சரிதா, காலஞ்சென்றவர்களான ஜசிதா, சுரேகா, உஷாளினி மற்றும் நர்மதா, நதீஸ் (உத்தியோகத்தர் JSAC), றிசான், நந்திதா, ஜேர்மனியிலுள்ளவர்களான பகீரதன், லக்சிகா, சஞ்சுதன், சாரங்கா மற்றும் கீதன், ஜனதன் (பிரான்ஸ்), சுகந்தன் (கனடா), ஆரணி (சுவிஸ்), நஜிதா, ரதீஸ், றொபிசன், நிருசா (மாணவி - உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), கௌசினி (மருந்துக்கலவையாளர் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை), சாளினி, அஸ்வினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி A/L மாணவிகள்), தமிழினி, ரூபிகா, லௌஜன் (மாணவன் - வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் ஆசைப் பேரனும், லகின்சன், தசாங்கன், சீதாளன், சீதாங்கன், சுவேதா, அஸ்விதா, ஆரூஜன், சுவித்தி, சுபானா, லவிஸ், ஜன்சிகா, சுஜானிகா, துசாரா, அஜிஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணிக்கு தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் விலங்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. 077 673 5994/077 695 1503 (49689) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்

# கூட்டுறவு நிறுவனங்களில் கூட்டுறவுக் கொடிகள்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 9
சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சகல கூட்டுறவு நிறுவனங்களிலும் கூட்டுறவு கொடியை பறக்க விடவேண்டும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கேட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை 5 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்த சர்வதேச கூட்டுறவாளர் தினம் ஒரு மாத காலத்துக்கு இடம்பெறும்.

இந்தக் காலப்பகுதியில் கூட்டுறவில் விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் முகமாக கூட்டுறவாளர்கள் பொது வேலைத்திட்டப் பணியில் ஈடுபட வேண்டும். கூட்டுறவுச் சங்க வியாபார நிலையங்களைத் துப்புரவு செய்தும், அழகுபடுத்தியும் நுகர்வோரைக் கவரக்கூடிய வகையில் பொருள்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அத்துடன் கூட்டுறவுச் சங்க வளாகங்கள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றை சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதற்கு கூட்டுறவாளர்கள் முன்வரவேண்டும். கூட்டுறவின் மகிமையை மக்களுக்கு ஏற்படுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கையில் கூட்டுறவாளர்கள் இந்தத் தினத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (க-17)

# கைதடிப் பகுதி லயன்ஸ் கழக தலைவராக பதவியேற்பு

கைதடி லயன்ஸ் கழகத்தின் தலைவராக தொழிலதிபர் துரை மகேந்திரம் நேற்றுமுன்தினம் பதவியேற்றார். யாழ்.பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவத்துறை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை லயன்ஸ் கழகங்களின் துணை ஆளுநர் லயன் மருத்துவர் கே.தியாகராஜா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வறுமைக்கோட்டுக்குட்பட்ட பார்வை குறைந்த 3 பேருக்கு இந்த விழாவையொட்டி கண் பரிசோதிக்கப்பட்டு உடனடியாகவே பெறுமதி வாய்ந்த மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் இலங்கையைச் சேர்ந்த லயன்ஸ் கழகங்களின் தலைவர்கள், வர்த்தகர்கள், சன சமூக நிலையப்பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-288)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அரசறிவியல் பாட விரிவுரையாளர்
தேவராஜா திருமுருகராஜன் J.P
(திருமுருகன், ஆசிரியர்– யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)
அவர்கள் கடந்த 17.06.2014 யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி A.A ஆனந்தராஜா முன்னிலையில்
அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமணம் செய்துகொண்டார்.
இவரின் கல்விப்பணி மற்றும் சமூகப்பணி என்றென்றும் தொடர இறையாசி வேண்டி மனதார வாழ்த்துகின்றோம்.
Best Wishes
யாழ்.,பேராதனை வெளிவாரிப்பட்டப்படிப்பு மாணவர்கள்
யா/பட்டப்படிப்புக்கள் கல்லூரி - யாழ்ப்பாணம்.
ஐடியல் கல்லூரி - மானிப்பாய்



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்கலகரமான ஜய வருடம் ஆனித்திங்கள் 27ஆம் நாள் (11.07.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் 11.30 மணிவரையுள்ள மூலநட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும், சிங்க லக்னமும், சதுர்த்தசி திதியும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,



எமது செல்வப் புதல்வன்
திருநிறைசெல்வன்
சசிதரன்
அவர்களுக்கும்

எமது செல்வப் புதல்வி
திருநிறைசெல்வி
பிருந்தா
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு சரஸ்வதி மண்டபத்தில் (இல.37, சேர்.பொன்.இராமநாதன் வீதி, ராஜா கிறீம் ஹவுஸ், நாச்சிமார் கோயில் முன்பாக, யாழ்ப்பாணம்) திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு.திருமதி.சிவசுப்பிரமணியம் குடும்பத்தினர்
இல.24/4, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி.மகேஸ்வரி நடராசா
சகோதரிகள் : கோகிலா நடராசா
ஸ்ரீகாந்தநாதன் குடும்பம்,
குணசிங்கம் குடும்பம்,
கமலக்கண்ணன் குடும்பம்,
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

(இருவீட்டார் அழைப்பு)

(49681)(7.6.3)


# அரச பதவி வெற்றிடங்கள் - ஒரே பார்வையில்

| பதவி | திணைக்களம் | கல்வித் தகைமை | வயது எல்லை | விண்ணப்ப முடிவு திகதி | தேர்வு முறை |
|---|---|---|---|---|---|
| சட்ட உத்தியோகத்தர் | துறைமுகங்கள் நெடுஞ்சாலைகள் கப்பற்றுறை அமைச்சு | சட்டம் பற்றிய பட்டம் | 21 - 45 வருடங்கள் | 2014.07.28 | கட்டமைக் கப்பட்ட நேர் முகத் தேர்வு |
| உதவி விடுதி மேற்பார்வையாளர் மற்றும் உதவி மாணவர் விடுதிப் பொறுப்பாளர் | கல்வி அமைச்சு | க.பொ.த சாதாரண தரச் சித்தியுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒருபாடம் | 18-30 வருடங்கள் | 2014.07.25 | போட்டிப் பரீட்சை |
| படம் வரைஞர் பயிற்சிக்கு ஆள் சேர்ப்பு | கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | க.பொ.த.உயர் தர விஞ்ஞானம் | 18-30 வருடங்கள் | 2014.07.14 | போட்டிப் பரீட்சை |
| கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தரம் 3 ஆள் சேர்ப்பு | கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | க.பொ.த.உயர்தர விஞ்ஞான மற்றும் தொழிற்றகைமை (NVQ 6 மட்டம்) | 18-30 வருடங்கள் | 2014.07.14 | போட்டிப் பரீட்சை |
| ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் பதவி | கால்நடை மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | க.பொ.த.உயர்தர விஞ்ஞான மற்றும் தொழிற்றகைமை (NVQ 6 மட்டம்) | 18-30 வருடங்கள் | 2014.07.14 | போட்டிப் பரீட்சை |

மேலதிக விவரங்களுக்கு 2014.06.27 ஆம் திகதிய வர்த்தமானியை பார்வையிடுங்கள்.

# மின் கம்பத்துடன் மோ.சைக்கிள் மோதி இளைஞர் படுகாயம்

ஓமந்தை, ஜூலை 9
வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வவுனியா கூமாங்குளப்பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஓமந்தையில் இருந்து கடந்த சனிக்கிழமை கூமாங்குளப் பகுதிக்குச் சென்ற வேளை இந்த இளைஞர் விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தார். வீதியோரத்தில் கிடந்த கல்லில் மோட்டார் சைக்கிள் ஏறி அது திடீரென திரும்பி மின்கம்பத்தில் மோதியது. அதன்போதே இந்த விபரீதம் ஏற்பட்டது. உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் வசிப்பவரான கந்தசாமி சேயோன் (வயது-27) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார். (ஒ-402)

# கண்காட்சி

நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் கண்காட்சி இன்று புதன்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா கலந்து கொள்வார். (க)


மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983ஆம் ஆண்டு அத்தம் 79 கி.பாவம் கொழும்பு பங்கு வர்த்தக நிலையத்தில் எக்கவுண்டனாக தொழில் பார்க்கும் மணமகனுக்கு அழகிய தொழில் பார்க்கும் மணமகள் தேவை.
தொடர்பு: 077 230 4550 (49665) (7.6.3)



தேவை

தனிநபர் ஆண் ஒருவருக்கான Room மாதாந்த வாடகைக்குத் தேவை.
(யாழ் மாநகர சபை எல்லைக்குள்)
தொடர்பு இல :
077 136 4555 (49686) (7.6.3)


# புதிய குருவாக அருட்பொழிவு

யாழ்.மாவட்ட மறைமாவட்ட திருவுளச் சபையைச் சேர்ந்த அருட்சகோதரன் கொட்வின் கமிலஸ் (சனா) எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் யாழ்.ஆயர் மேதகு இ.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் புதிய குருவாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளார். புதிய குருவின் முதல் நன்றித் திருப்பலி எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்குஇளவாலை போயிட்டி புனித லூர்து அன்னையின் ஆலயத்தில் நடைபெறும் என்று திருவுளச் சபையின் யாழ்.மாவட்ட அதிபர் வண.பிதா அ.சகாயநாதன் அடிகளார் தெரிவித்தார். (ஒ-51)


பொதுக்கூட்ட அறிவித்தல்

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ வதிரிபீட விநாயகர் ஆலயம்
விடயம்: மகா சபைக்கூட்டம்
திகதி : 27.07.2014 ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.30 மணி
இடம் : ஆலய மணிமண்டபம்
நோக்கம்: புதிய நிர்வாகம் தெரிவு செய்தல்
மகாசபை அங்கத்தவர்கள் மாத்திரம் தவறாது சமுகம் தரவும்.
-ஆலய நிர்வாகம்.
(49663)(4.6.3)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations
செல்வி
மகேஸ்வரன் ஸாளினி
வடக்கு மாகாணத்தின் 12 கல்வி வலயப் பாடசாலைகளின் 2014 நடைபெற்று முடிந்த மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டியில் 17 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் ஈட்டியெறிதல் போட்டியில் (இரண்டாம் இடம்) வெள்ளிப் பதக்கம் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த மாணவியைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்
கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை
சிவபுரம், பூநகரி.
Best Wishes
(49481)(7.6.3)



# யாழ்ப்பாணம் - மல்லாகம்

# ஸ்ரீ பழம்பிள்ளையார் தேவஸ்தானம்

# புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக

# சிறப்பு மலர் 09.07.2014

**விநாயகப்பெருமான் அடியார்களே!**

கைலாசபதி மஹாமேரு பர்வதங்களாலும், ஸப்த ஸாகரங்களாலும், மஹா நதிகளாலும் தசதிக் பாலகர்களாலும் சூழப்பெற்றதும் முப்பத்து முக்கோடி தேவர்களால் பூஜிக்கப் பெற்றதும், பரதகண்டத்தின் தென்பால் மோகரிக்கின்ற அலைகளையுடைய சமுத்திரங்களால், சூழப்பெற்றதுமான இலங்கைத் திருநாட்டின் பெருமைகளை எடுத்தோதும் தெக்ஷண கைலாச மான்மியத்தால் "தெக்ஷிண கைலாசம்" எனச் சிறப்புப் பெற்றதும் அவதார புருஷர்களால் திக்கு நோக்கி தேவார - திருப்புகழால் வியந்து ஓதப்பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம் ஆகிய சிவ குக ஸ்தலங்களையும், மாவைக் கந்தன், செல்வச்சந்நிதி, தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி, அளகொல்லை பிள்ளையார், நல்லூர்க் கந்தன், நயினை நாகபூஷணி உட்பட பல சிறப்புமிக்க ஆலயங்களை தன்னகத்தே கொண்ட வடமாகாணம்- யாழ்ப்பாணத்தில் மல்லாகம் எனும் பதியில் பன்நெடுங்காலமாக எழுந்தருளி "பழம்பிள்ளையார்" என்ற சிறப்போடு மந்திர கல்பித ரத்ன சிம்மாசனத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ பழம்பதி விநாயகப் பெருமானுக்கும், ஸ்தூல லிங்க ஸ்தூபி இராஜகோபுர பரிவாரங்களுக்கும், நிகழும் மங்கலகரமான ஜய வருடம் ஆனி மாதம் 25ஆம் நாள் இன்று [09.07.2014] புதன்கிழமை, துவாதசித் திதியும், அனுஷ நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 9.00 மணி 40 நிமிஷம் முதல் 10 மணி 40 நிமிஷம் வரையுள்ள சிங்கலக்ன சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற இறை அருள் கூட்டியுள்ளது. அத்தருணம் அடியார்கள் அனைவரும் ஆசார சீலராக ஆலயம் வந்து கிரியைகளில் கலந்து இறைஅருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

## பரிபூரண திருவருள் கிட்டட்டும்

தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவனாகிய விநாயகன் பன்னெடுங்காலமாக மல்லாகம் பழம்பதியில் கோயில் கொண்டு அடியவர்களின் அல்லல் களைந்து அருள்பாலித்து வரும் பழம்பதி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகிறது.

தேவஸ்தான ஆதீன கர்த்தா சிவஸ்ரீ முத்தையா குருக்கள் நாகேந்திர சர்மா மற்றும் உபயகாரர்கள், அடியார்கள் அனைவருக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் பரிபூரணமான திருவருள் கிடைக்க பிரார்த்தித்து எமது பூரண அருளாசிகளை வழங்குவதில் மனநிறைவு கொள்கிறோம்.

சுபம்

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்
(மஹா கும்பாபிஷேக பிரதமகுரு)
சபரிமலை சாஸ்தா பீடம்
கொழும்பு

## தீராத துயர் களைந்திடும் விநாயகன்

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி ஆலய பரம்பரை தர்மகர்த்தாவாகவும், பிரதம குருவாகவும் பணி புரிந்துவரும் முத்தையாக் குருக்கள் நாகேந்திர சர்மா ஆகிய நான் என் தந்தையாருடன் சிறுவயது முதல் இவ்வாலயத்தில் சேவையாற்றி வருகின்றேன் போர்த்துக்கீசர் காலத்தில் இற்றைக்கு 300, வருடங்களுக்கு முன்பு தற்போது ஆலயத்திற்கு முன்பாக உள்ள அரச மரத்தடியில் இவ் விநாயகர், சிலை கண்டு எடுக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டு அன்று முதல் இன்று வரை இவ்வூர் மக்களின் தீராத துயர்களைத் தீர்த்து அருள்பாலித்து வருகின்றார். இவர் அடியார்களுக்கு கனவில் காட்சி புரிந்தும் மற்றும் வெவ்வேறு தோற்றங்களில் ஆபத்பாந்தவனாய்த் தோன்றி பல அற்புதங்களை நிகழ்த்தியமை கண்கூடாகக் கண்டு கொள்ளக்கூடியதாக இருந்து வருகின்றது. அப்படியெல்லாம் தன் திருவருளை நிகழ்த்திவரும் எங்கள் விநாயகப்பெருமானுக்கு இன்று சாந்திப் பெருவிழா நடைபெறுவதையிட்டுப் பேருவகையடைகின்றேன். அடியேனுடைய நல்லாசியையும் அடியவர்களுக்கு வழங்கி விநாயகப்பெருமான் பாதம் வழுத்தி நிற்கின்றேன்.

ஆனைமுகன் ஆறுமுகன் அர்ச்சிக்க பொன்னம்பலவன்
ஆனந்த வாணி புகழ் நாடு.
ஆதீன கர்த்தா

## கிராமத்தின் உன்னத வழிபாட்டுத் தலம்

ஈழத் திருநாட்டிலே யாழ் மாவட்டத்தின் வலிவடக்குப் பிரதேசத்தில் அமையப் பெற்ற மல்லாகம் கிராமத்தின் மத்தியில் அமையப் பெற்று அருளாட்சி புரியும் பழம்பதி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இக்கிராமத்தில் உன்னத வழிபாட்டுத் தலமாக விளங்கும் இவ் ஆலயம் இவ்வூர் மக்களின் பெரும் முயற்சியினால் புனருத்தாரணம் செய்யப்பட்டு ஆலயத்திற்கு அணிகலனாக அமையும் விசேடங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு புதுப்பொலிவுடன் கும்பாபிஷேகம் காண்பது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் அருட்கடாட்சத்தையும் தருகிறது. அவ் வகையில் ஆலய புனருத்தாரண திருப் பணி எனும் பெரு முயற்சியில் பங்கு கொண்ட அனைவருக்கும் விக்ன விநாயகனின் திருவருள் கிட்ட பெருமானின் பாதம் பணிந்து வேண்டுகின்றோம்.

தேவஸ்தான பரிபாலன சபை

## தமிழர்களின் இடர் நீங்கட்டும்



வலிகாமம் வடக்கு மண்ணின் பழம்பெரும் ஆலயங்களில் ஒன்றான மல்லாகம் கிராமத்தில் அருளாட்சி செய்து வருகின்ற அருள்மிகு பழம்பதி விநாயகர் ஆலயம் ஏறத்தாழ 300 ஆண்டு காலவரலாற்றைக் கொண்டதாக விளங்குகின்றது.

விநாயகரின் அருளால் ஆலயத்தினை புனருத்தாரணம் செய்து வேலைகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். மல்லாகம் கிராம மக்களுக்கு மட்டுமல்லாது அயல் கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கும் குலதெய்வமாகி விநாயகர் அனுக்கிரகம் வழங்கி வருகிறார். தொன்மைக்கும் வரலாற்றுச் சிறப்பிற்கும் கண்ணியமாக விளங்கும் மல்லாகம் பழம்பதி விநாயகரின் நல்லருளால் உலகெங்கும் பரந்து வாழ்கின்ற ஈழத் தமிழர்களின் இடர்கள் நீங்கி நிம்மதியான வாழ்வு கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகரை வேண்டுகிறேன்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன் துறை, மல்லாகம்.

## ஆசியுரை

அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகனாக அகார உகார மகாரமாகிய ஓங்காரத்தின் வடிவமாகிய மல்லாகம் பழம்பதி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளதை இட்டு மனநிறைவு கொள்ளுகிறோம். ஆலயத்தின் திருப்பணிகளை ராஜ கோபுரத்தின் திருப்பணியை செவ்வனே நிறைவேற்றிய உபயகாரர்களாகிய டாக்டர் பத்மநாதன், சபாநாதன் குடும்பத்தினருக்கும் கும்பாபிஷேகத்தை பிரதம குருவாக இருந்து நடத்துகின்ற சர்வதேச இந்துமத குருபீடாதிபதி "சபரிமலைக் குருமணி" ஆன்மீக அருள்ஜோதி ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P அவர்களுக்கும் சர்வசாதக சக்கரவர்த்தி சாதகசிம்மம் அருள்ஜோதி-ஸ்கந்த-சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் அவர்களுக்கும் சாதக கலாபமணி பிரம்மஸ்ரீ நித்யசுதானந்த சர்மா அவர்களுக்கும் யாகசம்ரக்ஷகர் பிரம்மஸ்ரீ சதா யோகேஸ்வரசர்மா அவர்களுக்கும் எல்லாம் வல்ல பழம்பதி பிள்ளையார் அருள் பாலிப்பார்.

ஆதீன இளவரசு நாகேந்திரசனாதனசர்மா

உதயா
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

அனோஜன்
றேடர்ஸ்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

ESWARY
TIMBER Depot
K.K.S.Road, Mallakam.
Regd No.TD186/V

BHARATH STORES
K.K.S.Road,
Mallakam.

R.T.R.
ICE CREAM CORNER
K.K.S.Rd, Mallakam.

ரிப்ரொப் உணவகம்
கே.கே.எஸ்.றோட்,
மல்லாகம்.

SOTHY STUDIO
K.K.S.Road,
Mallakam.

சயன் உணவகம்
மல்லாகம் சந்தி, மல்லாகம்.
உரிமையாளர் : ரவி

COMPUTER CORNER
K.K.S.Road, Mallakam,
Prop.Srikanthavarnan
Tel:021 205 9044

A.N.பல்பொருள்
வாணிபம்
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

THAVAMJA
Engineering Works,
Court's Road, Mallakam.

SUBAMANGALA
K.K.S.Road,
Mallakam.

பழம்பதி
நியூ செலக்சன்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

பரணிகா
மல்ரி சென்ரர்
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.

ARATAY
Digital Broad Service,
Mallakam,
TP: 071 936 0694

தருஷன் பான்சி
கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்.

மதன் பந்தல் சேவை
மல்லாகம் கிழக்கு,
மல்லாகம்.
TP: 077 910 3445

கஜகரன்
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

ரஞ்சனாஸ் புடைவையகம்
புடைவை தினிசுகளின் சங்கமம்,
இல.4 A, மத்தியசந்தை,
சுன்னாகம்.

தீபன் பந்தல் சேவை
கட்டுவன் வீதி,
மல்லாகம்.
077 977 3513.

பிள்ளையார் கும்பாபிஷேக
உபகாரர்கள்
Dr.செல்லத்துரை பத்மநாதன் குடும்பம்
(மல்லாகம்)
இராஜகோபுர கும்பாபிஷேக
உபயம் : சட்டத்தரணி
சபாநாதன் குடும்பம் (மல்லாகம்)

KANNAN
BOOK SHOP
K.K.S.Road, Mallakam.

LEDCHUMANAN 'A'
Hard Ware
K.K.S.Road,
Mallakam.

பழம்பதி
இந்து இளைஞர் சங்கம்
மல்லாகம்

# ஜப்பானில் பெரும் சூறாவளி

## 200 கி.மீ. வேகத்தில் காற்றும் கனமழையும்

ரோக்கியோ, ஜூலை 9

ஜப்பானின் தென்பகுதித் தீவுகளை நியோகுரி சூறாவளி தாக்கிவரும் நிலையில், ஐந்து லட்சத்துக்கும் அதிகமானோரை வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடையுமாறு அந்நாட்டின் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஒகினாவா தீவை மணிக்கு இருநூறு கிலோமீற்றருக்கும் அதிகமான வேகத்தில் வீசும் புயல் தாக்கி வருகிறது. கூடவே அங்கு கன மழையும் பெய்துவருகிறது.

இந்த தீவின் கரையோரப் பகுதிகளை 14 மீற்றர்கள் வரை உயரமான கடல் அலைகள் தாக்கலாம் என வானிலை ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது.



கடும் காற்றுக்கு மத்தியில் பாதுகாப்புத் தேடும் மக்கள்

இந்த டைபூன் சூறாவளி வலுவிழந்து வருகின்றபோதிலும் கடுமையான மழை பெய்து வருவதால், இனியும்கூட திடீரென வெள்ளப் பெருக்குகளும் நிலச்சரிவுகளும் ஏற்படலாம்.

இந்தப் பகுதியில் விமானப் பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கடல் பாதைகள் மூடப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான வீடுகள் மின் இணைப்பை இழந்துள்ளன. ஒகினாவா தீவில் உள்ள தமது இராணுவ தளத்திலிருந்து சில விமானங்களை உதவிப் பணிகளில் ஈடுபட அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. (த)



மகாத்மா காந்தி

## பிரிட்டன் நாடாளுமன்றின் சதுக்கத்தில் காந்தி சிலை

லண்டன், ஜூலை 9

பிரிட்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் மகாத்மா காந்தி சிலை ஒன்றை அமைக்கும் திட்டத்தைப் பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது.

இந்தக் காந்தி நினைவிடம் அடுத்த ஆண்டு திறந்துவைக்கப்படும் என்று பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக்கும் நிதியமைச்சர் ஜோர்ஜ் ஆஸ்போர்னும் டில்லியில் நேற்று அறிவித்தனர்.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சரும் நிதியமைச்சரும் வர்த்தக தூதுக் குழுவொன்றுக்கு தலைமை தாங்கி இந்தியா சென்றுள்ளனர்.

இந்தியாவுடனான வணிக உறவுகளை மேலும் பலப்படுத்துவதே இந்தப் பயணத்தின் நோக்கம். 'உலகின் மிகப் பெரிய ஜனநாயகத்தின் தந்தையான மகாத்மா காந்தியின் உருவச் சிலை நாடாளுமன்றங்களின் தாய் என்று வர்ணிக்கப்படும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் முன்றிலில் அமைவது பொருத்தமானது' என்று ஆஸ்போர்ன் கூறினார்.

பிரிட்டன் நாடாளுமன்ற சதுக்கத்தில் வின்ஸ்டன் சேர்ச்சில் மற்றும் நெல்சன் மண்டேலா உள்ளிட்ட முன்னாள் பிரிட்டிஷ் மற்றும் வெளிநாட்டு அரச தலைவர்களின் உருவச் சிலைகள் அமைந்துள்ளன. உலகின் இரண்டாவது அதிக சனத்தொகைகொண்ட இந்தியாவுடன் பிரிட்டன் உறவுகளை வலுப்படுத்தி வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ள விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)


## மன்னிப்பு கோரினார் பாப்பரசர்



பாப்பரசர்

ரோம், ஜூலை 9

மத குருக்களினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானவர்களைப் பாப்பரசர் பிரான்ஸிஸ் சந்தித்துப் பேசியுள்ளார். இவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான குற்றங்கள் மற்றும் பாவச் செயல்கள் தொடர்பில் கடவுளின் முன்னிலையில் தமது துயரத்தைத் தெரிவித்ததுடன் மன்னிப்பும் கோரினார். பாலியல் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களுடன் பாப்பரசர் திருப்பலிப் பூசையிலும் கலந்து கொண்டதாக வத்திக்கான் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாப்பரசர் பிரான்ஸிஸ் கத்தோலிக்க திருச்சபையின் தலைவராக பதவியேற்றதை அடுத்து, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு இலக்கானவர்களைச் சந்தித்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். (த)



ஸ்பெய்னில் புகழ்பெற்ற எருது விரட்டு திருவிழாவான சான் பெர்மின் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. ஸ்பெய்ன் நாட்டில் சான் பெர்மின் திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. இத்திருவிழாவின் ஒரு பகுதியாக ஏராளமான காளைகள் வீதியில் விரட்டப்படும். அப்போது, வீதியில் திரண்டிருக்கும் மக்கள் அக்காளைகளை எதிர்கொள்வர். காளைகளின் முரட்டுப் பாய்ச்சலுக்கு அகப்படாமல் ஓடி ஒதுங்குவர். இந்தத் திருவிழாவைக் காண உலகம் முழுவதும் இருந்து லட்சக்கணக்கானோர் கூடுவர். இத்திருவிழா கடந்த 6ஆம் திகதி தொடங்கியது. எதிர்வரும் 14ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (த)

# போனில் சார்ஜ் இல்லையா? விமானத்திலும் இடமில்லை

## அமெரிக்கா அதிரடி நடவடிக்கை

நியூயோர்க், ஜூலை 09

தீவிரவாத அச்சுறுத்தல் காரணமாக அமெரிக்க விமான நிலை யங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி சார்ஜ் செய்யப்படாத செல்போன், லப்ரொப்கள் வைத்திருக்கும் பயணிகள் விமானத்தில் பயணம் செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விமான நிலையங்களை குறிவைத்து அல்காய்தா ஆதரவு தீவிரவாதிகள் மீண்டும் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியிருப்பதாக உளவுத் துறை எச்சரித்துள்ளது.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு நேரடி விமான சேவைகளை இயக்கும் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் விமான நிலையங்களில் தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் அனைத்து விமான நிலையங்களிலும் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பு தாக்குதல் அச்சுறுத்தல் காரணமாக சார்ஜ் செய்யப்படாத செல்போன்கள், லப்ரொப்களுடன் பொது மக்கள் விமானப் பயணம் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. இவைதவிர அனைத்து இலத்திரனியல் சாதனங்களையும் பாதுகாப்புப் படையினர் அங்குலம் அங்குலமாகச் சோதனையிட்டு வருகின்றனர்.



கோப்புப் படம்

காலணிகளில் குண்டுகளை மறைத்து எடுத்து வரலாம் என்ற சந்தேகத்தின்பேரில் பயணிகளின் காலணிகளும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இது குறித்து அமெரிக்க போக்குவரத்து பாதுகாப்பு நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலத்திரனியல் சாதனங்கள் மூலம் வெடிகுண்டு தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக ரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவை அனைத்தும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படும்.

இதே போல் பயணிகளின் காலணிகளும் சோதனையிடப்படும். இந்த கூடுதல் சோதனைகளுக்கு பயணிகள் அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (த)

# மெக்சிக்கோவில் பெரும் நிலநடுக்கம்

மெக்சிக்கோ சிற்றி, ஜூலை 9

மெக்சிக்கோவின் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட பெரிய நிலநடுக்கம் காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.

மெக்சிகோவின் எல்லைப் பகுதியிலுள்ள சான்மார்கோஸ் நகரில் 7.1 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன் காரணமாக சில கட்டடங்கள் இடிந்து விழுந்ததில் மூவர் உரியிழந்துள்ளதாக முதற் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. நிலநடுக்கம் ஏற்பட்டபோது கவுதமாலா நாட்டின் மேற்கு பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

அதிகாலை சரியாக 6.23 மணிக்கு உணரப்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 7.1 ஆக பதிவாகியிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

எனினும் சுனாமி அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதே பகுதியில் கடந்த 2012 ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்துக்கு 48 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (த)





ஈராக்கில் இடம்பெறும் மோதல்களிடையே சிக்கியிருந்த 117 இந்தியர்கள் நேற்று நாடு திரும்பினர். இவர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டு விமானத்தில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நேற்று அதிகாலை புதுடில்லி விமான நிலையத்தை வந்தடைந்த அவர்களை உறவினர்கள் அழைத்துச் சென்றனர். (கு)

# இந்தியாவின் 'புல்லட் ரயில்' கனவு விரைவில் நிறைவேறும்

### சதானந்த கௌடா கூறுகிறார்

புதுடில்லி, ஜுலை 9

இந்தியாவின் 'புல்லட் ரயில்' கனவு நிறைவேறும் காலம் வந்துவிட்டதாக 2014- 2015 ரயில்வே பட்ஜெட்டைத் தாக்கல் செய்த ரயில்வே அமைச்சர் சதானந்த கௌடா தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது:-

ஏற்கனவே மும்பை - அகமதாபாத் மார்க்கத்தில் புல்லட் ரயில் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் பல்முறை விரிவாக ஆராயப்பட்டுள்ளன. எனவே அந்த மார்க்கத்தில் முதலில் புல்லட் ரயில் இயக்கலாம் என்பது ரயில்வே அமைச்சகத்தின் யோசனை. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், ரயில்வேத் துறை பல திட்டங்களை நிறைவேற்ற முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. அந்த வகையில், பெரு நகரங்களையும் - வளர்ச்சி மையங்களையும் இணைக்கும் வகையில் அதிவேக ரயில்கள் இயக்கப்படும். அதிவேக ரயில்களுக்கான 'வைர நாற்கர' திட்டம் செயற்படுத்தப்படும். இந்தத் திட்டத்தை செயல்படுத்த ரூபா 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

புல்லட் ரயில்களுக்கு முற்றிலும் புதுமையான ரயில் இருப்புப்பாதை கட்டுமானம் தேவைப்படுகிறது.

ஆனால், ஏற்கனவே இருக்கும் எக்ஸ் பிரஸ் ரயில்களின் வேகத்தை அதிகரிக்க தற்போதுள்ள வலையமைப்பில் சிறு மாற்றங்கள் செய்தாலே போதுமானது.

எனவே, குறிப்பிட்ட சில மார்க்கங்களை தேர்ந்தெடுத்துள்ளோம்.

அந்த மார்க்கத்தில் செல்லும் ரயில்கள் வேகத்தை மணிக்கு 160 கி.மீ இருந்து 200 கி.மீ வரை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது -என்றார். (கு)

# கச்சதீவு பிரச்சினையில் பா.ஜ.க. காங்கிரஸைப் பின்பற்றக்கூடாது

### முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் பேட்டி

சென்னை, ஜுலை 9

கச்சதீவு பிரச்சினையில் காங்கிரஸ் ஆட்சியில் எடுக்கப்பட்ட நிலையே தொடரும் என்று பா.ஜ.க. கூறுமானால் ஏனைய பிரச்சினைகளிலும் காங்கிரஸை பா.ஜ.க. பின்பற்றுமா என்பதை விளக்கவேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர்ஜி.கே.வாசன்கேள்வி எழுப்பியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியினர் இல்லத் திருமண விழாக்களில் பங்கேற்பதற்காக கடந்த திங்கட்கிழமை மதுரை சென்ற அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

பா.ஜ.க. ஆட்சி பொறுப்பேற்ற பின் பெற்றோல், டீசல் விலை மட்டுமன்றி ரயில் கட்டணமும் உயர்ந்துவிட்டது. காஸ் விலையும் உயரும் என்று கூறப்படுகிறது. ஆக இந்த அரசு ஏழை மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக இல்லை. ரயில் கட்டண உயர்வைக் கண்டித்து காங்கிரஸ் சார்பில் டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதால், கட்டண உயர்வு ரத்தாகும் என்று நம்புகிறேன். ரயில்வே பட்ஜெட், பொது பட்ஜெட் ஆகியன மக்கள் உணர்வுகளை, எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைய வேண்டும் என்பதுதான் காங்கிரஸின் நிலைப்பாடு.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். இதற்கு ஒரே தீர்வு கச்சதீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வதுதான். கச்சதீவு பிரச்சினையில் முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் எடுக்கப்பட்ட நிலையே தொடரும்என்றுபா.ஜ.க. கூறுமானால், ஏனைய பிரச்சினைகளிலும் காங்கிரஸை பா.ஜ.க. பின்பற்றுமா என்பதை விளக்க வேண்டும். சென்னை கட்டட விபத்து கவலையளிக்கிறது. கட்டுமானப் பணிகளை அரசு தீவிரமாகக் கண்காணிக்க வேண்டியது அவசியம் என்றார்.



ஜி.கே.வாசன்

காங்கிரஸ் கட்சியில் கோஷ்டி மோதல் மீண்டும் தலையெடுத்துள்ளதே என்று நிருபர்கள் கேட்டதற்கு, கட்சி ஒரு தலைமையின் கீழ்தான் செயற்பட்டு வருகிறது.

அகில இந்திய அளவில் காங்கிரஸ் மாநில அமைப்புகளின் செயற்பாடுகள் குறித்து முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே. அந்தோனி தலைமையிலான குழு ஆய்வு செய்து வருகிறது. அந்த அறிக்கையில் உண்மை நிலை வெளிவரும். அந்த அறிக்கையின் அடிப்படையில் மாநில காங்கிரஸ் அமைப்புக்களைப் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்றார். (கு)

## அந்நிய முதலீடு 2,000 கோடி டொலர்கள்

புதுடில்லி, ஜுலை 9

2014ஆம் ஆண்டின் முதல் பாதியில் அந்நிய முதலீட்டாளர்கள் 2,000 கோடி டொலர்களை இந்திய சந்தையில் முதலீடு செய்திருக்கிறார்கள். நிலையான அரசு அமைந்தது மற்றும் புதிய சீர்திருத்தங்கள் நடக்கும் என்ற எதிர்பார்ப்பு என்பவை காரணமாகவே இந்த முதலீடு கிடைத்தது.

கடந்த ஜனவரி முதல் ஜுன் மாதம் வரையிலான அரையாண்டில் பங்குச்சந்தையில் 1,960 கோடி டொலர் முதலீடும், கடன் சந்தையில் 1,042 கோடி டொலர் முதலீடும் செய்யப்பட்டுள்ளன. மொத்தமாக இந்திய சந்தைக்கு 2,042 கோடி டொலர் இந்த ஆறு மாதத்தில் கிட்டியுள்ளது. (கு)

## திருமாவளவன் மீது பெண் முறைப்பாடு

சென்னை, ஜுலை 9

கோவையில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மீது இளம்பெண் ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கோவை ஒண்டிப்புதூர் பகுதியைச் சேர்ந்த கவிதா (வயது-35) என்ற பெண் டி.ஜி.பி. அலுவலகத்தில்நேற்றுமுன்தினம்முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளார். அந்த முறைப்பாட்டில், எனக்குச் சொந்தமான 56 சென்ட் நிலம் கோவை கணபதி நகரில் இருந்தது. இந்த நிலத்தை வேறு ஒருவருக்கு விற்பனைசெய்யஇருந்த நிலையில், அந்த இடத்தை விடுதலைச்சிறுத்தை செய்தித் தொடர்பாளர் வன்னியரசு அபகரிக்க முயன்று வருகிறார்.

மேலும், இது திருமாவளவன் தூண்டுதலிலேயே நடக்கிறது. இது தொடர்பாக வன்னியரசு கோவையில் வைத்து என்னை மிரட்டினார்.

இது குறித்து கோவை பொலிசில் முறைப்பாடு அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என் றும், நீங்கள் இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும்தெரிவித்துள்ளார்.(கு)

# 7 மாநிலங்களுக்கு புதிய ஆளுநர்கள்

### ஜனாதிபதிக்கு விரைவில் பட்டியல்

புதுடில்லி, ஜுலை 9

ஏழு மாநிலங்களுக்கான புதிய ஆளுநர்கள் விரைவில் நியமிக் கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய ஆளுநர்களின் பெயர்ப் பட்டியலை எந்த நேரமும் மத்திய உள்துறை அமைச்சகம் குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை செய்யலாம் எனக் கூறப்படுகிறது.


கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் நியமிக்கப்பட்ட மாநில ஆளுநர்களை மாற்ற, நரேந்தர மோடி தலைமையிலான அரசு பதவி ஏற்றவுடன் முடிவு செய்தது.

இதைத் தொடர்ந்து பத்துக்கும் மேற்பட்ட மாநில ஆளுநர்களை மத்திய உள்துறை அமைச்சகத்தின் செயலாளர் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பதவி விலகுமாறு கேட்டுக் கொண்டார்.

இதன் பேரில் உத்தரப் பிரதேச ஆளுநர் பன்வாரி லால் ஜோஷி, சத்தீஸ்கரின் சேகர் தத் ம்றறும் நாகாலாந்தின் அஸ்வினி குமார் ஆகியோர் தங்களது பதவியில் இருந்து விலகினர். கர்நாடகா வின் ஹன்ஸ்ராஜ் பரத்வாஜ் மற்றும் திரிபுராவின் தேவானந்த் கொன்வார் ஆகியோரின் பதவிக்காலம் முடிவடைந்தது.

இதையடுத்து மேற்கு வங்கத்தின் எம்.கே.நாராயணன் மற்றும் கோவாவின் பி.வி.வான்சூ ஆகிய ஆளுநர்களும் தங்கள் பதவியில் இருந்து விலகினர். கடந்த ஆட்சியின்போது அகஸ்டா வெஸ்ட்லேண்ட் நிறுவனத்துடன் ஹெலி வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்ததில் ஊழல் நடந்தது தொடர்பான வழக்கில் சாட்சிகளாக இவர்கள் இருவரிடமும் சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. இதையடுத்து இருவரும் பதவிவிலகியமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த ஏழு மாநிலங்களுக்கும் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களை புதிய ஆளுநர்களாக மத்திய அரசு எந்நேரத்திலும் அறிவிக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. (கு)



நேற்று நாடாளுமன்றத்தில் ரயில்வே பட்ஜெட்டைத் தாக்கல் செய்த அமைச்சர் சதானந்த கௌடா

# ரயில் நிலையங்களில் வைபை வசதி அறிமுகம்

புதுடில்லி, ஜுலை 9

ஏ1 மற்றும் ஏ பிரிவு ரயில் நிலையங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரயில்களில் வைபை (Wifi) இணைய வசதி அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த அறிவிப்பை, நாடாளுமன்றத்தில் நேற்று ரயில்வே பட்ஜெட்டைத் தாக்கல் செய்த ரயில்வே அமைச்சர் சதானந்த கௌடா வெளியிட்டார்.

மேலும், தபால் நிலையங்கள், கையடக்கத் தொலைபேசிகள் மூலம் ரிக்கெற் முன்பதிவு செய் வது விரிவுபடுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன், இணைய வழியாக பிளாட்போர்ம் மற்றும் முன்பதிவு அல்லாத ரிக்கெற்றுகளை பெறவும் வழிவகுக்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் அறிவித்தார்.

பயணிகள் தொலைபேசி, எஸ்.எம்.எஸ். மூலமாக உணவு தேவை குறித்து தகவல் அனுப்ப வழிவகை செய்யப்படும் என்றும், அவர் தெரிவித்தார். (கு)




## சீனாவில் ஷிராந்தி

கொழும்பு,ஜூலை 9
நாட்டின் முதற் பெண்மணியான ஷிராந்தி ராஜபக்ஷ சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார்.
ஜனாதிபதியின் பாரியாரான ஷிராந்தி, அகில சீனப் பெண்கள் பேரவையின் அழைப்புக்கு அமைய, சீன மகளிர் பேரவையின் மாநாடு ஒன்றில் பங்கேற்க அங்கு சென்றுள்ளார்.
சீனா சென்றடைந்த ஷிராந்தியை பெண்கள் பேரவையின் செயலாளர் ஜியாவோ யாங் மற்றும் சீனாவுக்கான இலங்கை தூதுவர் ரஞ்சித் உயன்கொட ஆகியோர் வரவேற்றுள்ளனர். (ஓ)

# தெங்கு உற்பத்தி நாடுகளின் 156 பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநாடு கொழும்பில்

கொழும்பு,ஜூலை 9
தெங்கு அபிவிருத்தி அமைச்சு- ஆசிய பசுபிக் தெங்கு உற்பத்தி நாடுகளுடன் இணைந்து ஏற்பாடு செய்த 46 ஆவது உலக தென்னை, கொக்கோடெக் மாநாடு மற்றும் கண்காட்சி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் ஆரம்பமானது.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமான இந்த மாநாட்டில் 27 நாடுகளைச் சேர்ந்த 156 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.
மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார் சின்னம் வழங்கிக் கௌரவித்தார்.
தெங்கு ஆராய்ச்சியாளர்கள் - முதலீட்டாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கலந்து கொள்ளும் இந்த மாநாட் டின் முதல் நான்கு தினங்க ளும் தெங்கு அபிவிருத்தி- உற்பத்தி- பாதுகாப்பு என்பன தொடர்பான பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.
7 ஆம் திகதி திங்கள் தொடக்கம் 11 ஆம் திகதி வரை ஐந்து நாள்கள் பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் சிறந்த நிரந்தரத் தன்மை வாய்ந்த தெங்கு உற்பத்திக்கான கொள்கை திட்டமிடல் மற்றும் தொழில் நுட்பம் என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. (ஓ)



உலக தென்னை மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் பஸிலுக்குத் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார நினைவுச் சின்னம் வழங்குகிறார்.

**7 ஆம் திகதி திங்கள் தொடக்கம் 11 ஆம் திகதி வரை ஐந்து நாள்கள் மாநாடு பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகிறது.**

## 385 நிறுவனங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 9
அரசுக்கு வருமான வரிகட்டாமல் ஏமாற்றிவந்த 385 நிறுவனங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இந்த 385 நிறுவனங்களில் 360 நிறுவனங்கள் பாரிய அளவிலான வர்த்தகங்களில் ஈடுபட்டுள்ளவை எனத் தேசிய இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திருமதி மல்லிகா சமரசேகர தெரிவித்துள்ளார்.
வருமான வரிகட்டாமல் இழுத்தடித்துவந்த 364 நிறுவனங்களுக் கும், தனி நபர்களுக்கும் எதிராக இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாகவும் அவர்களுள் 191 பேரின் வங்கிக் கணக்குகளும் ஆதனங்களும் முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)

## 32 மணி நேரத்தில் மட்டும் 3 ரயில்கள் தடம்புரள்வு



கொழும்பு,ஜூலை 9
32 மணித்தியாலங்கள் இடைவெளியில் மூன்று ரயில்கள் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியிருப்பதாக ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது. கடந்த சனிக்கிழமை (5ஆம் திகதி) மாலை 6.15 மணியளவில் மாத்தறையிலிருந்து மருதானை நோக்கிச் சென்ற ரயில் பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தில் தண்டவாளத்தை விட்டு விலகியது.
அது நடந்த 17 மணித்தியாலங்களில் 6ஆம் திகதி காலை 11.40 மணியளவில் கொழும்பிலிருந்து பளை நோக்கிச் சென்ற தேசத்துக்கு மகுடம் ரயில் பரசன்கஸ்வெவ ரயில் நிலையத்தில் தண்டவாளத்தை விட்டு விலகியுள்ளது. பம்பலப்பிட்டி விபத்து நடப்பதற்கு முன் கடந்த 5ஆம் திகதி அதிகாலை 3.15 மணியளவில் கொழும்பு - திருகோணமலை இரவுத் தபால் ரயில் கெக்கிராவைக்கும் பளுகஸ் வெவைக்கும் இடையில் யானையொன்று மோதுண்டதால் தண்டவாளத்தை விட்டு விலகியது. - (ஓ)

## 50 கோடி ரூபா பெறுமதியான காலாவதியான மருந்துகள் இரத்மலானையில் கண்டுபிடிப்பு

### களஞ்சியசாலை முத்திரையிட்டு மூடப்பட்டது

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின்போது இரத்மலானையிலுள்ள மருந்துக் களஞ்சியசாலையொன்றில் இருந்த 50 கோடி ரூபா பெறுமதியான காலாவதியான மருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.
அதனைத்தொடர்ந்து கல்கிஸை மேலதிக நீதிவான் திருமதி பிரபர்ஷா ரணசிங் கவின் உத்தரவின்பேரில் அந்த மருந்துக் களஞ்சியசாலை முத்திரையிட்டு (சீல் வைத்து) மூடப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட நிறுவன பொறுப்பதிகாரியை இந்த மாதம் 31ஆம் திகதி கல்கிஸை நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.
இந்தத் திடீர் சோதனையின் போது சுமார் 50 கோடி ரூபா பெறுமதியான மருந்துகள், முகக் கிரீம்கள், போஷாக்கு மாத்திரைகள் உட்பட பல பொருள்கள் காலாவதியான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (ஓ)

## மகாநாயக்கர்களை அடுத்த வாரம் சந்திக்கின்றனர் பலசேனாவினர்

கொழும்பு,ஜூலை 9
பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தலைமையிலான அந்த அமைப்பின் உறுப்பினர்கள் அடுத்த வாரம் மகாநாயக்க தேரர்களைச் சந்திக்கவுள்ளனர்.
அளுத்கம, பேருவளை சம்பவங்கள் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்காகவே மகாநாயக்க தேரர்களை சந்திக்கவுள்ளதாக பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக பொதுபல சேனா அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது:-




அங்கிரிய, மல்வத்தை உட்பட அனைத்து மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து அளுத்கம, பேருவளை சம்பவங்களின் பின்னணி மற்றும் அதன் உண்மையான நிலவரங்கள் தொடர்பாகவும் நாட்டுக்குள் இயங்கி வரும் பல்வேறுபட்ட அடிப்படைவாத அமைப்புக்களின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தவுள்ளோம்.
பௌத்த குருமார் மற்றும் சிங்கள பௌத்த மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை வெளிப்படுத்தும் அமைப்புக்கள் எதிர்நோக்கும் சவால்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் இதன் போது எடுத்துக் கூறவுள்ளோம்.
மகா நாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் பொதுபலசேனா தெரிவித்துள்ளது. (ஓ)

## பேராதனை பல்கலை மாணவன் ஹெரோயினுடன் கைது

கொழும்பு,ஜூலை 9
பேராதனை பல்கலைக்கழகத்தின் இணை சுகாதார விஞ்ஞானபீடத்தின் இறுதியாண்டு மாணவனொருவர் சுமார் ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் வெலிகம, மிதிகம மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகில் கடந்த சனிக்கிழமை மாத்தறை பொலிஸ் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னக்கோனுக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து குறிப்பிட்ட மணிக்கூண்டுக் கோபுரத்தின் அருகில் சிவில் உடையில் காத்திருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர். (ஓ)

## செய்தியாளர்களுக்கு கருத்தரங்குகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் நடத்தத் தடை

### பாதுகாப்பு அமைச்சு சுற்றறிக்கை மூலம் அறிவிப்பு

கொழும்பு,ஜூலை 9
இலங்கையிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் செய்தியாளர்களுக்கான பயிற்சி நெறிகளையோ, அல்லது கருத்தரங்குகளையோ நடத்தக் கூடாதென்று பாதுகாப்பு அமைச்சு சுற்றறிக்கையொன்றின் மூலம் அறிவித்திருக்கின்றது.
சில அரசசார்பற்ற நிறுவனங்கள், ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள் என்ப வற்றை நடத்துவதாகத் தகவல் கிடைத்திருப்பதாகவும், இது அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட செயற்பாடுகளல்ல என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
எனவே அதிகாரமளிக்கப்படாத இந்த நடவடிக்கைகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளரும், பதிவாளருமாகிய டி.எம்.எஸ். திசாநாயக்க அறிவுறுத்தியிருக்கின்றார்.
பாதுகாப்பு அமைச்சின் இந்த நடவடிக்கையானது, அதிர்ச்சியளிப்பதாக அமைந்திருப்பதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.
அரசசார்பற்ற நிறுவனங்கள் செய்தியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமானால், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நாட்டில் எத்தனையோ சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன.
இந்த நிலையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது கொண்டுவரப்பட்டுள்ள இந்தக் கட்டுப்பாடானது, நாட் டின் ஊடக சுதந்திரத்திற்கு விழுந்துள்ள மோசமான அடியாகவே கருதவேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்த மாதம் முதலாம் திகதியிடப்பட்டு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்தச் சுற்றறிக்கை திங்களன்று தங்களுக்குக் கிடைத்திருப்பதாக அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்திருக்கின்றனர். (ஓ)



மாயவனூரையும், புலக்காட்டையும் இணைக்கும் பாலத்தின் தற்போதைய நிலை

# ஆபத்தான நிலையில் உள்ள அன்பு பாலம்

முல்லைத்தீவு, ஜூலை 9
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சியின் மாயவனூரையும் இராமநாதபுரத்தின் புலக்காட்டையும் இணைக்கும் வகையில் புழுதியாற்றுக்கு மேலாகத் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள அன்பு பாலம் உயிர்களைக் காவுகொள்ளும் வகையில் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றது.
கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள இந்தப் பாலத்தை தினமும் ஆயிரக்கணக்கான மக்களும், ஏராளமான மாணவர்களும் பயன்படுத்தி வருகின்றனர். மழை காலங்களில் புழுதியாறு பெருக்கெடுத்துப் பாயும்போது மக்கள் அச்சத்துடன் இந்தப் பாலத்தினூடாகச் செல்வதைக் காண முடிகின்றது. (க-18)

## மீனவர்களுக்கு இடர்பாடுகள்

முல்லைத்தீவு, ஜூலை 9
மன்னார்ப்பிரதேசத்தில் சிறு தொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
கடலின் ஆழமற்ற பகுதியில் கம்பிக் கூடுகள், மீன்பிடிக்கும் கூடுகள் என்பவற்றைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வீச்சு வலை மூலம் தொழிலை மேற்கொள்பவர்களின் மீன்பிடி வலைகள் கிழிந்து சேதமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இதனால் சிறு தொழில்களை மேற்கொள்ளும் மீனவர்கள் நட்டத்தையும் எதிர்கொண்டு வருகின்றனர்.
எனவே இந்த மீனவர்களின் நிலையைக் கருத்தில் கொண்டு கம்பிக் கூடுகள் மூலமாகத் தொழில் செய்வோர் தமது தொழிலை ஆழ்கடல் பகுதியில் மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-415)

# கள்ளுத் தவறணையில் வயோதிபர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஜூலை 9
வவுனியா ஹொரவப்பொத்தான வீதியிலுள்ள கள்ளுத் தவறணை ஒன்றில் கள் அருந்திக்கொண்டிருந்த சமயம் வயோதிபர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
தவறணையில் கள் அருந்திக் கொண்டிருந்த என். நாராயணசாமி (வயது -56) என்பவர் சம்பவ இடத்திலேயே கீழே வீழ்ந்து உயிரிழந்தார் என நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இவரது உடல் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.
இறப்பு விசாரணைகளை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர், மாரடைப்புக் காரணமாகவே மரணம் சம்பவித்தது என்று தெரிவித்தார். மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (க-412)

# குளத்துக்குரிய காணியை அபகரிக்க வேண்டாம்

## சாளம்பைக்குளம் மக்கள் மனு கையளிப்பு

வவுனியா, ஜூலை 9
வவுனியா சோபாள புளியங்குளக் காணி அபகரிக்கப்பட்டதைத் தடுத்து நிறுத்துமாறு வவுனியா பிரதேச செயலருக்கு சாளம்பைக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.
மேற்படி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
சாளம்பைக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள மிகவும் பழைமை வாய்ந்த சோபாள புளியங்குளம் குளக்காணியில் தற்சமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் என்ற விளம்பரப் பலகை போடப்பட்டு முன்பக்கத்தில் கம்பி வேலியும் போடப்பட்டுள்ளது.
சுமார் 150 ஏக்கர் நிலத்துக்கு நீர்பாய்ச்சும் குளமாகவும் மக்களின் ஆடு, மாடுகளின் மேய்ச்சல் நிலமாகவும் கோடை காலங்களில் பெரும்பாலான மக்கள் குளிப்பதற்குப் பயன்படுத்தும் இடமாகவும் உள்ள குளக் காணியை அபகரித்தமையானது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. இது தொடர்பாக ஏற்கனவே இரண்டு தடவைகள் எழுத்துமூலமாக உயர் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும்கூட, ஏழை விவசாயிகளான எமது நிலைமைகளைக் கவனத்தில் கொள்ளாமையானது மிகவும் மன வேதனை அளிக்கிறது.
ஆகவே மேற்கூறப்பட்ட காரணங்களைக் கவனத்தில் எடுத்து ஏழை மக்களின் வாழ்வாதாரத்தின் முன்னேற்றம் கருதி மேற்படி குளத்தின் அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவித்துத் தருமாறு இந்தக் கிராம மக்கள் சார்பாக வேண்டிக்கொள்கின்றோம் என்றுள்ளது.
இந்தக் கடிதத்தின் பிரதிகள் வவுனியா மாவட்ட அரச அதிபர் உட்படப் பலருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-402)

**சோபாள புளியங்குளம் குளக்காணியில் தற்சமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் என்ற விளம்பரப் பலகை போடப்பட்டு முன்பக்கத்தில் கம்பி வேலியும் போடப்பட்டுள்ளது.**





வவுனியா பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராசா தலைமையில் வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது இடமிருந்து வலமாக அதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், ஹூனைஸ்பாரூக், அமைச்சர்கள் ரிசாத் பதியுதீன், வவுனியா பிரதேச செயலர் கா. உதயராசா, நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாரூக் ஆகியோரும் ஏனைய பிரமுகர்களையும் காண முடிகின்றது. (க-402)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கொடுப்பனவுகள்

முல்லைத்தீவு, ஜூலை 9
கமத்தொழில் காப்புறுதிச் சபையில் 2013- 2014 பெரும்போக நெற்பயிர்ச் செய்கைக்கு காப்புறுதி செய்த பயனாளிகளுக்கு நெற்பயிர்ச் செய்கை பாதிப்புக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் பூநகரிப் பிரதேச செயலகத்தில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வழங்கப்படவுள்ளன.
பூநகரிப் பகுதியைச் சேர்ந்த 120 விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கைப் பாதிப்புக்கான இழப்பீட்டைப் பெறவுள்ளனர்.
கமத்தொழில் காப்புறுதிச் சபையின் தலைவர் ஆரியத் திலக தசநாயக்க, காப்புறுதிச் சபையின் பணிப்பாளர் நாயகம் பந்துல வீரசிங்க ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு இழப்பீட்டுக்கான கொடுப்பனவுகளை விவசாயிகளுக்கு வழங்கவுள்ளனர். (க-11)

## தூக்கில் தொங்கிய மாணவன்

முல்லைத்தீவு, ஜூலை 9
கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகா வித்தியாலய மாணவர் ஒருவர் பற்றைக் காட்டினுள் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வன்னேரிக்குளம் சோலைப் பகுதியைச் சேர்ந்த மகாலிங்கம் சஜிதன் (வயது- 17) என்ற மாணவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் காணாமற்போயிருந்த இவரை வீட்டாரும் அயலவர்களும் தேடியபோது நேற்றுமுன்தினம் காலை அவரது வீட்டுக்கு அருகிலுள்ள பற்றைப் பகுதியிலிருந்து தூக்கில் தொங்கிய நிலையில் இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.
உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (க-18)

## வவுனியாவில் கலைஞர்களின் ஒன்றுகூடல்

கலைஞர்களின் ஒன்றுகூடல் வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் வவுனியா உதவிப் பிரதேச செயலர் திருமதி சாரதாஞ்சலி கர்ணன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.
இதில் 30க்கும் அதிகமான கலைஞர்கள் கலந்து கொண்டனர். இறைவணக்கம், வரவேற்புரை, கலைஞர் அறிமுகம், தலைமையுரை என்பவற்றைத் தொடர்ந்து கலைஞர்களின் கருத்துரைகள் இடம்பெற்றன. சிறப்பு நிகழ்வாக சுழற்சி முறையில் சகல கலைஞர்களுக்கும் அவர்களது திறமையை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வு குறித்து கலைஞர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-
நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் கலைஞர்கள் வாய்விட்டுப் பேசவும், பாடல்களைப் பாடவும் இந்த ஒன்றுகூடல் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததாகக் குறிப்பிட்டனர். (க-402)

# சாரதிகளின் கவனக்குறைவினாலும் விபத்துகள் ஏற்படுகின்றன

## வவுனியா பொது மருத்துவமனைப் பணிப்பாளர் கருத்து

வவுனியா, ஜூலை9
வவுனியாவில் சாரதிகளின் கவனக்குறைவினால் அதிகளவான விபத்துக்கள் பதிவாகி வருவதாக வவுனியா பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் கு. அகிலேந்திரன் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;
வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலமாக விபத்துக்கள் அதிகரித்து வருகின்றமை தொடர்பாக மருத்துவமனையின் பதிவுகளின் மூலமாக அவதானிக்கப்பட்டுள்ளது.
இத்தகைய விபத்துக்களில் அதிகமானவை சாரதிகளின் கவனக்குறைவினாலேயே ஏற்படுகின்றன. குறிப்பாகக் கடந்த 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை நொச்சிமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தமைக்கு அதிக வேகத்தில் வாகனம் செலுத்தப்பட்டமையே காரணமென தெரியவந்துள்ளது.



இதேவேளை ஓமந்தை விளக்கு வைத்தகுளம் பகுதியில் மிக மோசமான முறையில் தனியார் பஸ் ஒன்று தடம்புரண்டதில் ஒருவர் பலியானதுடன் 23 பேர் காயமடைந்துள்ளனர். இதற்கும் வாகனம் அதிவேக மாகச் செலுத்தப்பட்டமையே காரணமென தெரியவந்துள்ளது.
இவை மட்டுமன்றி எமது மருத்துவமனையின் விபத்துக்கள் பிரிவில் தினமும் பலர் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களில் அதிகமானவர்கள் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்கியவர்களாவர்.
சாரதிகள் வாகனம் செலுத்தும் போது வீதிச் சமிக்ஞைகளில் கவனம் செலுத்த வேண்டும். போக்குவரத்துப் பொலிஸார் நிற்கும் இடங்களில் மாத்திரம் சீராக வாகனம் செலுத்துவது போன்ற பாசாங்கைக் காட்டினால் போதாது ஏனைய இடங்களிலும் வாகனங்களை அவதானமாகச் செலுத்த வேண்டும்.
வாகனம் செலுத்தும்போது கையடக்கத் தொலைபேசிகளில் உரையாடுவது, பாடல்களை அதிக சத்தத்துடன் ஒலிக்க விடுவது ஆகிய விடயங்களில் பொலிஸார் கூடுதலாகக் கவனம் செலுத்தினால் விபத்துக்களைத் தடுக்கலாம்.
மேலும் பொலிஸாரிடமிருந்து தப்புவதற்காக மட்டுமே தலைக்கவசம் அணிவது என்பதை விடுத்து, நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்குத் தரமான தலைக்கவசத்தை அணிந்து கொள்ள வேண்டும் - என்றார். (க-402)



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து அண்மையில் பாடசாலை சுற்றுச்சூழலை சுத்தம் செய்தனர். (வ-108)

## சந்தைகளின் குறைபாட்டை நீக்க நடவடிக்கை

### வலி.தென்மேற்கு பிரதேச சபை தீர்மானம்

வலி.தென்மேற்கு, ஜூலை 9

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் குறைபாடுகளுடன் இயங்கும் பொதுச் சந்தைகளில் சில பொதுமக்களது வசதி கருதி திருத்தி அமைக்கப்படவுள்ளன. இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையில் 7 பொதுச் சந்தைகள் இயங்கி வருகின்ற போதிலும், பெரும்பாலான சந்தைகள் வசதியீனங்கள் மத்தியில் இயங்குவதால் பொதுமக்கள் பெரும் சிரமங்களுக் குள்ளாகின்றனர்.

நீண்ட காலமாக நிலவிவரும் பல்வேறு குறைபாடுகள் குறித்து பிரதேச சபைக்குச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து அவசரமாக மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகளைச் மேற்கொள்ள பிரதேச சபையின் பொதுச்சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதையடுத்து காக்கைதீவு சந்தை, சாவற்கட்டு சந்தை ஆகியவற்றின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மானிப்பாய் மத்திய சந்தை, இளவாலை பொதுச் சந்தை ஆகிய சந்தைகளில் சைக்கிள் பாதுகாப்பு தரிப்பு நிலையம் அமைப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-115)

## நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் களைப்பாற நிழல்கூரை

### யாழ்.போதனா மருத்துவமனையில்



கொழும்புத்துறை, ஜூலை 9

யாழ்.போதனா வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் உள்ளே செல்ல அனுமதிக்கப்படும் நேரம்வரை தரித்திருப்பதற்காக நிழல்கூரை அமைக்கப்பட்டு வருகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதியின் முன்பாக பார்வையாளர்கள் செல்லும் நுழைவாயிலின் அருகேயுள்ள நடைபாதையில் இந்த நீண்ட நிழல் கூரை அமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த பகுதியூடாகச் செல்லும் பார்வையாளர்கள் நீண்ட நாள்களாக கொதிக்கும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் காலை, மதியம், மாலை நேரங்களில் கால்கடுக்கக் காத்திருந்து பல இன்னல்களை எதிர்நோக்கி வந்தனர்.

இது தொடர்பாக பல கோரிக்கைகள், விமர்சனங்கள் பொதுமக்களால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது பார்வையாளர்கள் தங்கிச் செல்வதற்கு வசதியாக நிழல்கூரை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-135-17)

# வெங்காய விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை

அச்சுவேலி, ஜூலை 9

யாழ்ப்பாண வெங்காயத்தின் விலை கணிசமான அளவு வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் உற்பத்திக்கான செலவை ஈடு செய்யக்கூடிய அளவுக்கு வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



யாழ்.மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக வெங்காயச் செய்கையில் மரபு வழியாக வெங்காயக் குமிழ் மூலம் நடுகை செய்யப்பட்ட வெங்காயம் தற்போது பரவலாக அறுவடை செய்யப்படுகின்றது. தம்புள்ள மத்திய சந்தை மற்றும் கொழும்புச் சந்தை என்பனவற்றில் வெங்காயத்தின் விலை கிலோ ஒன்று 50-60 ரூபாவாக குறைவடைந்துள்ளது.

இந்த வருடம் சிறுபோக வெங்காயப் பயிர் குறிப்பிடத்தக்க அளவுக்கு நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகாமல் கணிசமான அளவு விளைச்சலை கொடுத்துள்ள போதிலும், அறுவடை செய்யப்படும் வெங்காயத்தின் விலை வீழ்ச்சி அடைந்திருப்பதால் உற்பத்திச் செலவை ஈடு செய்யக்கூடிய அளவுக்கு வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் இரண்டு வகையான வெங்காயப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. மரபு வழி குமிழ் வெங்காய நடுகை மூலமும் மற்றையது உண்மை வெங்காய விதை மூலம் நாற்று மேடை அமைத்து பெறப்படும் நாற்று மூலமும் வெங்காயம் செய்கை பண்ணப்பட்டது.

உண்மை வெங்காய விதை மூலம் செய்கை பண்ணப்பட்ட பயிர் வளர்ந்த நிலையில் உள்ளது. அறுவடை செய்யப்படவில்லை. தற்போது அறுவடை செய்யப்படுவது வெங்காய குமிழ் மூலம் நடுகை செய்யப்பட்ட வெங்காயமே.

50 கிலோ விதை வெங்காயம் ரூபா 6 ஆயிரம் முதல் 7 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டு நடுகை செய்யப்பட்ட நிலையில் வெங்காயத்தின் விற்பனை விலை வீழ்ச்சி கண்டிருப்பது விவசாயிகளை கவலைக்கு உள்ளாக்கி உள்ளது.

உண்மை வெங்காய விதையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கையின் உற்பத்திச் செலவு குறைவாக இருப்பதால் அந்த வகை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களிலும் பார்க்க மரவுவழி வெங்காய குமிழ் நடுகை மூலம் பயிர்ச் செய்கை மேற்கொண்டவர்கள் பெரும் பாதிப்புக்கும் பொருளாதார இழப்புக்கும் உள்ளாகி இருப்பதாக விசனம் தெரிவிக்கின்றனர். (வ-11)

## கோழியால் சச்சரவு; பெண் ஆஸ்பத்திரியில்



கோப்புப்படம்

தென்மராட்சி, ஜூலை 9

பகல் வேளையில் பக்கத்து வீட்டுக் கோழி வளவுக்குள் வந்ததால் ஆத்திரமடைந்த பெண் இரவு கற்களால் வீசி பக்கத்து வீட்டுக்காரரை தாக்கியுள்ளார். இந்தத் தாக்குதலில் இளம் பெண் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி300வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்றது. காயமடைந்த யுவதி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடையில் உணவருந்தியவரை உரிய முறையில் கவனிக்காததால் ஆத்திரமடைந்த நபர் கடைச் சிப்பந்தியை தாக்கினார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நகர்ப் பகுதி உணவகம் ஒன்றில் இடம்பெற்றது.

தாக்குதலுக்கு இலக்கான நபர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த இரு சம்பவங்கள் குறித்தும் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ஒ-9)

## வீதி விளக்குகள் அமைக்கும் பணி நிதி போதாமையால் பிற்போடல்

வலி.தென்மேற்கு, ஜூலை 9

மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து வலி.தென்மேற்கு பிரதேசத்தில் வீதி விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கையை தவிசாளர் எடுத்த போதிலும் உறுப்பினர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நிதிப்பற்றாக்குறை காரணமாக இந்தத் திட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் எஸ். சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வீதிகளில் பொருத்தப்பட்டிருந்த பெரும்பாலான மின் விளக்குகள் பல மாதங்களாக ஒளிராமல் இருப்பது குறித்து சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள் மின் விளக்குகள் எரியாத போதிலும் மின்சார சபைக்கு மாதம் தோறும் மூவாயிரம் ரூபாவுக்கு மேல் பிரதேச சபையால் மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருவதாகவும், மக்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய நிதி வீண்விரயமாவதால் ஒளிராமல்இருக்கும் மின்குமிழ்களுக்குப் பதிலாக புதிய மின்குமிழ்களை உடனடியாகப் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தவிசாளரைக் கேட்டிருந்தனர்.

உறுப்பினர்களினதும் பொதுமக்களினதும் கோரிக்கையைத் தொடர்ந்து வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் முதற்கட்டமாக பிரிவொன்றுக்குப் 10 மின்குமிழ்கள் வீதம் பொருத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட தவிசாளர் நிதிக் குழுக் கூட்டத்திலும் இந்தத் திட்டம் குறித்து ஆராய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

இது குறித்து ஆராய்ந்த நிதிக் குழு உறுப்பினர்கள், பொதுச் சபையின் அங்கீகாரத்துக்காக பொதுக் கூட்டத்துக்குச் சமர்ப்பித்திருந்தனர். இது குறித்து ஆராய்ந்த பொதுச் சபை உறுப்பினர்கள், மின்குமிழ்கள் பொருத்துவதற்கு நிதி ஒதுக்கப்படாததாலும் மின்குமிழ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியிருப்பதினாலும் இத்திட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைப்பது என்று பரிந்துரைத்ததையடுத்து இத்திட்டம் பிற்போடப்பட்டுள்ளது. (வ-115)

## பழைமையான வைரவர் ஆலயம் மாவிட்டபுரத்தில்



யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். தெல்லிப்பழை மாவிட்டபுரம் வீமன்காமம் பகுதியில் இருந்து 700 மீற்றர் தூரத்தில் கருங்கல்லால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான வைரவர் ஆலயம் ஒன்று சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்தக் கோயில் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளதுடன், சுமார் 54 அடி உயரக் கோபுரத்தையும் கொண்டுள்ளது. இந்தக் கோயில் குறித்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார் என்றும் தற் போது இந்தக் கோயிலைச் சுற்றிலும் காடு வளர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-106)

உதயன்
09.07.2014

# இலங்கை,யாழ்ப்பாணம்–சிவன்கோயி

# திருவருள்மிகு செந்தில் மு



## புனருத்தாரண அஷ்டபந்தன ஷட்கோண குண்டபக்ஷ ம

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞா

ஸ்ரீ தக்ஷிண கைலாயமெனப் போற்றப்படுவதும் புராதன சிவாலயங்களை தன்னகத்தே கொண்டதும் இந்து மகா சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இலங்காபுரியின் வடபால் மேற்றிசையில், கலைகலாசாரம் கல்விமான்கள் நிறைந்து சிறந்தோங்கும் வட்டுக்கோட்டை மேற்கு, சிவன் கோயிலடிக் கிராமத்தின் வெப்பட்டி ஒல்லையம்பதியில் அமைந்த புராதன தலமான அருள்மிகு முருகையா எனும் நாமங்கொண்ட (ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் ஆலயத்தில் இருந்து 1765ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்த ஞானவேற் பெருமான்) முருகையாப் பெருமானாருக்கு ஸ்வதி ஸ்ரீ நிகழும் மங்கலகரமான ஜயவருடம் ஆனித்திங்கள் 25ஆம் நாள் இன்று (09.07.2014) புதன்கிழமை பூர்வ பக்ஷ துவாதசியும் அமிர்தசித்த யோகமும் அனுஷ நட்க்ஷத்திரமும் அ... முதல் 10.38 வரையுள்ள சிங்கலக்ன சுபமுகூர்த்த வேளையி... பெருமானாருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பா... பெருஞ்சாந்தி விழா நடைபெற எம் பெருமானார் திருவருள் ... அத்தருணமும் அதன் முன் பின் நிகழும் இத் தெய்வீக பெருஞ்... தனையில் கலந்து அறிந்தும் அறியாமலும் செய்த வினைகளைப்... பலன்களையும், நற்பேறுகளையும், பெற்று உய்யும் பொரு... அழைக்கின்றோம்.

### சர்வ போதகாசிரியரின் வாழ்த்துச் செய்தி



கலை கலாசாரம் கல்விமான்களுடன் பல வளங்களும் நிறைந்து சிறந்தோங்கும் வட்டு மேற்கு வட்டுக் கோட்டை கிராமத்தில் எழுந்தருளியுள்ள திருவருள்மிகு செந்தில் முருகையனுக்கு இன்றைய நன்னாளில் திவ்வியமான மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் முன்நிற் கின்றது. இத்தெய்வீக பெரும்சாந்தி வழிபாட்டாராதனைகளில் அனைத்து அடியார்களும் கலந்து புண்ணிய பலன்களைப் பெற வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ சித்தாந்த பண்டிதர்,
சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்,
மருதடி விநாயகர் திருக்கோயில், சாவகச்சேரி.

### முத்தமிழ்க் குருமணியின் அருளாசி

ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் ஆலயத்தில் இருந்து 1765ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்த ஞானவேற் பெருமான் ஆகிய முருகையா தற்போது வட்டு மேற்கு வட்டுக்கோட்டையில் மிகக் கம்பீரமான முறை யில் எழுந்தருளியுள்ளார். அருள் மழை பொழியும் கண்கண்ட தெய்வமான முருகப் பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் திகழும் சுபதினத்தில் சகல நலன்களும் இஷ்ட சித்திகளும் கிடைக்கவும் பூரணமான ஆனந்த வாழ்வு பெறவேண்டியும் பிரார்த்திக்கின்றேன்.

முத்தமிழ் குருமார்
சிவஸ்ரீ.ந.சர்வேஸ்வரக்குருக்கள், சுன்னாகம்.

### உடலும் உள்ளமும் தூய்மை பெறட்டும்

சிவபூமி எனச் சித்தர்களால் சிறப்பிக்கப்படும் ஈழமணித் திருநாட்டின் வடபால் விளங்கும் வலிகாமம் மேற்குப் பிரதேசம், சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரி யங்களை நிறைவாகக் கொண்டதாகும். இப்பிரதேசப் பண்பாட்டின் நிலைக்களமாக ஆலயங்கள் விளங்குகின்றன. அந்தவகையில் எமது பிரதேசத்தின் வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள செந்தில் முருகையா ஆலயத்தில் இன்று நடைபெறுகின்ற கும்பாபி ஷேகக் கிரியை சிறப்பானது. இந்நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு மிகுந்த மனநிறைவடைகின்றேன்.

கற்பனைக் கடந்த சோதியாக கருணையே உருவமாக எங்கும் நிறைந்து விளங்குகின்ற இறைவனின் திருவருளை சாதாரண மனிதனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக எம்முன்னோர்கள் ஆலயங்களை அமைத்தனர். உடலும் உள்ளமும் தூய்மை பெற வழிபாடுகள் இயற்றினர். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என முன்னோர்கள் கூறிவைத்தனர். இப்பரம்பொருளின் ஓர் உயர்ந்த வடிவமாக முருகக்கடவுள் விளங்குகின்றார். தமிழ் மக்களின் தனித்துவமான தெய்வமாக விளங்குகின்ற வேலவன் வட்டு மேற்கில் செந்தில் முருகையாவாக எழுந்தருளியி ருப்பது சிறப்பானது.

வட்டு மேற்கு மக்களின் கூட்டு முயற்சியாக, கூட்டுப் பொறுப்பாக நடைபெறும் முருகப் பெருமானுடைய கும்பாபிஷேகக் கிரியை எல்லாம் பூரணமாக் நிறைவேறி அவரின் அருள் வெள்ளம் அனைவருக்கும் நிறைவாகக் கிடைக்க வேண்டும் என வாழ்த்துவதுடன், இவ்ஆன்மீகப் பணிக்காகப் பாடுபட்ட ஆலய பரிபாலன சபையினர், சிவாச்சாரியார்கள், வழிபடுவோர் அனைவரையும் பாராட்டுவதோடு, அவர்களின் பணி மேன்மேலும் வளர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அ.சோதிநாதன், பிரதேச செயலர்,வலி.மேற்கு.

இவ்வுலகி...
பெருங்கடலை...
யாத ஒன்றாகு...
நிலைகளுக்கே...
காட்சி தருகின்...
இக் கலியுகத்தி...
கந்தப்பெருமா...
கலியுக ...
...ாட்டி வ...
படைவீடுகளும்...
ஆறு. அடிய ...
நாட்களே. இ...
கந்தப்பெருமா...
பெறலாம்.
அந்த வகை...
தலத்தில் எழு...
செந்தில் முரு...
நடைபெறும் ...
நூதன துவிதள...
அடியார்களும் ...
பிரார்த்திக்கின்...

அரா...

## பிரதிஸ்டா குருமார் விவரம்

**சர்வபோதக சிவாச்சாரியார்கள்**

முத்தமிழ் குருமணி சதமகோற்சவ சிவாச்சாரியார்
பிரமஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்(சுன்னாகம்)

சைவ சித்தாந்த பண்டிதர் தேசமானிய கலாநிதி
பிரமஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் (சாவகச்சேரி)

**பிரதிஸ்டா பிரதமகுரு**

சிவாகம கிரியாதிலகம், சிவாகம கிரியாதத்துவநிதி, வேதாகம கிரியா கலாபமணி, வைதீகசாகரம்
சிவஸ்ரீ ச.மு.பாஸ்கரக்குருக்கள் (ரவிக்குருக்கள்-அராலி மத்தி சித்தி விநாயகர் தேவஸ்தானம்)

கிரியா பூசணம்,
சிவஸ்ரீ சு.முரளீதரக் குருக்கள் அரியாலை
ஆகம கலாசூரி
சிவஸ்ரீ க.சுஜிந்தக் குருக்கள், புளியங்கூடல்

**ஏனைய சிவாச்சாரியார்கள்**

ஐயப்ப உபாசகர்
சிவஸ்ரீ சோ.சண்முகராசாக்குருக்கள் (அரியாலை)
வித்தியா பூசணம்
சிவஸ்ரீ ம.பாலச்சந்திரக் குருக்கள் (யாழ்ப்பாணம்)

வேதாகம திலகம்
சிவஸ்ரீ
கை.கிஸ்ணகுமாரக்குருக்கள், சங்கானை
கிரியா பூசணம்
சிவஸ்ரீ
தி.சர்வேஸ்வரக் குருக்கள் அராலி

கிரியா ஜோதி
சிவஸ்ரீ ச.ஸ்ரீ காந்தக் குருக்கள்
சுன்னாகம்.

**சர்வ சாதக சிவாச்சாரியார்கள்**
**யாக சாம்ரட்ஷகர்கள்:**
பிரமஸ்ரீ வை.சுஜிந்திர சர்மா -சித்தன்கேணி
பிரமஸ்ரீ ப.விமலநாதன் - வவுனியா
பிரமஸ்ரீ க.சிவனேஸ்வரசர்மா -சரவணை

**ஆகம கிரியாவாகரம்**
சிவஸ்ரீ வ.உமாசுதக் குருக்கள்-மயிலணி.

வ...

- இராஜகோபுர உபயகாரர்கள், அமிர்தலிங்க

# காயிலடி, வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டை
# முருகையா திருக்கோயில்



## ஷ மஹா யாகநூதன துவிதள இராஜகோபுர பிரதிஷ்டா
## காபன சிறப்புமலர் – 09.07.2014

த்திரமும் அமைவுறும் காலை 8.38
ந்த வேளையில் முருகையாப்
மகா கும்பாபிஷேகம் எனப்படும்
திருவருள் கைகூடியுள்ளது.
விக பெருஞ்சாந்தி வழிபாட்டாரா
வினைகளைப் போக்கிப் புண்ணிய
ய்யும் பொருட்டு அன்புடன்

**கிரியா கால விபரம்:**

ஆனித்திங்கள்25ஆம் நாள் இன்று (09.07.2014) புதன்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் விநாயக ஆராதனை, யாகபூசை, அக்கினி பூசை, பூரணாகுதி, உட சார சமர்ப்பணம், மகாபூரணாகுதி, பலிகள் தானாதிகள், தீபாராதனை, சர்வாஞ்சலி, சமர்ப்பணம், மஹாகும்பாபிஷேகம், கற்ப பாவனாபிஷேகம், எஜமான் அபிஷேகம், தசதர்சனம், சிவாச்சாரிய சம்பாவனை,அருளாசி உரைகள், மஹாபிஷேகம், விஷேட பூசை, வழிபாடுகள், விபூதிப் பிரசாதம் வழங்கல், மாகேஸ்வரபூசை.
மாலை 6.00 மணிமுதல் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசை இடம்பெற்று, எம்பெருமான் முருகையா வள்ளி தேவசேனா சமேதராய் திருவீதியுலா வருங்காட்சி இடம்பெறும்.

### உதித்தனன் உலகமுய்ய



இவ்வுலகிலே மனிதராகப் பிறவியெய்திய நாம் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடைத்தேற இறைவழிபாடு இன்றியமையாத ஒன்றாகும். தன்னை வழிபடும் உயிர்களின் பரிபக்குவ நிலைகளுக்கேற்ப இறைவனும் பலவித திருக்கோலங்களில் காட்சி தருகின்றான். துஷ்ட - நிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்ய இக் கலியுகத்திலே கண்கண்ட தெய்வமாக கருணைக் கடலான கந்தப்பெருமான் விளங்குகின்றார்.

கலியுக வரதனாகக் காட்சிதரும் ஷண்முகப்பெருமானை பாலூட்டி வளர்த்த கார்த்திகைப் பெண்டிர் அறுவராவர். முருகப்பெருமானின் படைவீடுகளும் ஆறு அவருக்குரிய சக்தி வாய்ந்த மந்திரத்திலுள்ள அக்ஷ்சரங் களும் ஆறு. அடிய வர்களின் வேண்டுதல் தீர்க்கும் விரதமான கந்தஷஷ்டியும் ஆறு நாட்களே. இயந்திரமும் ஆறு கோணங்களினால் அமைந்தது. இத்தகைய கந்தப்பெருமான் முன்னிலையில் சென்று வணங்கினால் நாம் இஷ்ட சித்திகளைப் பெறலாம்.

அந்த வகையில் வட்டுமேற்கு வட்டுக்கோட்டை கிராமத்தில் அமைந்த புராதன தலத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு முருகையா எனும் நாமங் கொண்ட செந்தில் முருகையாப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இன்று நடைபெறும் புனருத்தாரண அஷ்டபந்தன ஷட்கோண குண்ட பக்ஷ மஹாயாக நூதன துவிதள பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் அனைத்து அடியார்களும் சகல மங்கலங்களையும் பெற்று ஷேமமாக வாழ வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

'ஸர்வே ஜனாகா சுகினோ பவந்து'

சிவஸ்ரீ.ச.மு.பாஸ்கரக்குருக்கள்,
அராலி மத்தி சித்திவிநாயக்ர் தேவஸ்தானம்,வட்டுக்கோட்டை.

### ஆசியுரை



வட்டூர் பிரதேசத்தில் ஆதி கடவுளாக இந்தக்கோயில் திகழ்வது கீர்த்திக்குரியதாகும். இங்கு வீற்றிருந்து அருள்பாலிக்கும் அருள்மிகு செந்தில் முருகையா ஸ்வாமி இந்தியாவின் திருச்செந்தூர் ஆலயத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டதாக வரலாறு அமைகின்றது. செந்தில் ஆண்டவர் என்றால் குழந்தைப் பாக்கியம் தருபவர் எனப் பொருள்படுகின்றது. எப்போதும் சிரித்துக் கொண்டு குழந்தை வடிவில் இருப்பவர் செந்தில் ஆண்டவர் சுவாமியாவார். அது மட்டுமல்லாது பெரிய பெரிய மகான்கள், ரிஷிகளுக்கு உபதேசம் செய்யப்பட்டதால் கல்விக்குரிய இடமாக திருச்செந்தூர் போற்றப்படுகின்றது. அதே சிறப்பு வட்டுக்கோட்டை பகுதிக்கும் உண்டு என்பதும் செந்தில் ஆண்டவர் சுவாமியின் மகிமையே சைவத்தையும் தமிழையும் இரு கண்கள் எனப்போற்றி அவற்றை மேம்படச் செய்பவர்கள் வட்டூர் மக்கள். இன்று நடைபெறுகின்ற கும்பாபிஷேகப் பெருவிழா சிறப்புறுவதற்கு இந்துக் குருமார்கள் சார்பாக எனது ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள்.
தலைவர்,சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
யாழ்ப்பாணம்.

**பெருஞ்சாந்தி முழுக்கைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெறும்**
தென்னிந்தியாவுக்குச் சென்று திருச்செந்தூர் முருகனைத் தரிசிக்கும் பேறு கிட்டாதவர்களுக்கு, நம் நாட்டிலிருந்தே தென்னிந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு வட்டூரில் பிரதிஷ்டை செய்யப்பட்ட திருச்செந்தூர் ஆண்டவனை இக்குடமுழுக்கிற்கு வருகை தந்து தரிசிப்பதன் மூலம் எம் பெருமானின் திருவருள்பேறு கிடைக்கப்பெற்று உய்ந்திட நல்லதொரு வாய்ப்பாக அமையும்

**மங்கல வாத்தியம்:**
வட்டூர் தவில் வித்து சிரோன்மணி
ந.கணேசமூர்த்தி குழுவினர்

**ஒலி, ஒளி அமைப்பு:**
ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒலி
அமைப்பின் சிகரம்
நித்திய சவுண் சேவிஸ்

**மின்னிணைப்பு:**
மின்னிணைப்பு வித்துவ மாமமன்னன்
தெ.ரவீந்திரன் குழுவினர்.

**ஆலய கட்டட அமைப்பு:**
ஆலய கட்டட நிர்மாண பேரரசு
சு.மாணிக்கவாசகர் -அராலியூர்
ஆலய கட்டட நிர்மாண சிகாமணி
ந.சிவமணி -கலைநகர்

**விக்கிரக அமைப்பு :**
சிலா விக்கிரகம் -
ஏ.வீரபத்திரன்(மாமல்லபுரம் சிற்பமாமேதை)
தாமிரவிக்கிரகம்-
தென்னிய சிற்பக் கல்லூரி ஓய்வுபெற்ற சிரேஷ்ட
விரிவுரையாளர் P.லோகநாதன் D.M.Sc.

**கோபுர அமைப்பு:**
கோபுர கட்டட நிர்மாண சிகாமணி
த.தவவீரசிங்கம் அராலியூர்

**வர்ணவேலை:**
வர்ணக்கலை அரசன்
விஸ்வரத்தினம் ரவீந்திரராஜா (இந்திரன்)
மூளாய் வீதி, காளிகோயிலடி.

**பூமாலை அலங்காரம்:**
திருமதி க.நகுலேஸ்வரி (காலையடி)

**லிங்கம், குலரத்தினம் குடும்பத்தினர்கள்.**

**அருள்மிகு முருகையா தேவஸ்தானம்
சிவன்கோயிலடி, வட்டு.மேற்கு,
வட்டுக்கோட்டை.**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சர்வதேச சட்டங்களை ஆஸி. மதிக்கவேண்டும்

கடந்த சில தினங்களாக ஊடகங்களின் பிரதான தலைப்புச் செய்திகளில் ஒன்று தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில் ரமபோஷவின் இலங்கை விஜயம். மற்றையது ஆஸ்திரேலியா சென்ற இலங்கை அகதிகள் சம்பந்தப்பட்டது. அகதிகளுடன் சென்ற படகுகளில் ஒன்று ஆஸ்திரேலியாவுக்குச் சமீபமாகவுள்ள கொக்கோஸ் தீவுப் பகுதியில் இடைமறிக்கப்பட்டு அதிலிருந்த 37 சிங்களவர்கள் 4 தமிழர்கள் உட்பட்ட 41பேரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர் என்ற செய்தியால் இந்த விவகாரம் இலங் கையிலும் ஆஸ்திரேலியாவிலும் மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டுள்ளது. மட்டக்களப்புத் துறைமுகத்துக்கு அப்பால் கடலில் வைத்து இலங்கைக் கடற்படை அதிகாரிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப் பட்டு விட்டனர் என்று ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிசன் தெரிவித்துள்ளார். அதேசமயம் 153 தமிழ் அகதிகளை ஏற்றிச்சென்ற இரண்டாவது படகின் கதி குறித்து சாதித்த மௌனத்தை ஊட கங்களினதும், சிவில் அமைப்புக்களதும் தொடர் கேள்விகளை அடுத்து ஆஸி அரசு நேற்றுக் கலைத்தது. இவர்கள் அனைவரும் தற்போது ஆஸ்திரேலிய கடற்படைக் கலத்தில் தடுத்து வைக்கப்பட்டி ருக்கிறார் கள் என்று முதன் முறையாக ஆஸி அரசு ஒப்புக் கொண்டுள்ளது. ஆஸ்திரேலியாவுக்கு வரும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் (அகதிகள்) விடயத்தில் ஆஸ்திரேலிய அரசு சமீபகாலமாகக் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வந்தமை அனைவரும் அறிந்ததே. சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா வருவோருக்கு ஆஸ்திரேலியக் குடியுரிமை வழங்கப்படமாட்டாது – அவர்கள் ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்க முடியாது என்று ஆஸ்திரேலிய அரசு சமீபகாலமாக ஊடகங்கள் வாயிலாகவும் வெகுஜன தொடர் புச்சாதனங்கள் ஊடாகவும் பிரசாரம் செய்து வருகின்றது. அப்படி இருந்தும் இலங்கையில் இருந்து குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் இருந்து ஆஸ்திரேலியா செல்வது முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. இலங்கையிலுள்ள தமது சொத்துகளை விற்று உயிராபத்துள்ள நீண்ட கடல் பயணம் மூலம் இவர்கள் ஆஸ்திரேலியாவுக்குச் செல்கின்றனர். ஆஸ்திரேலியாவை அடைவோர் நவுறுஸ், கொக்கோஸ் தீவுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். கடலில் மடக்கிப் பிடிக்கப்படுவோரிடம் ஆஸ்திரேலிய சுங்கப் படகில் வைத்து நான்கு கேள்விகள் மட்டுமே கேட்கப்படுகின்றன. அவர்களின் பதிலில் திருப்தி ஏற்படாதவிடத்து அவர்களை வேறு கப்பலில் ஏற்றி அவர்களின் சொந்த நாட்டுக்கே அழைத்துச்சென்று அந்த நாட்டு அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே ஆஸ்திரேலியாவின் புதிய திட்டம். இதன் பிரகாரமே 41 இலங்கையர்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். புதுச்சேரியில் இருந்து புறப்பட்டுச் சென்ற 153 இலங்கைத் தமிழர்களுக்கும் இதேகதிதான் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

உத்தியோகபூர்வமாக நாட்டைவிட்டு வெளியேறாமல் சட்டவிரோதமாகச் செல்வது இலங்கைச் சட்டத்தின்படி தவறானதாகும். ஆகவே இவர்கள் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவது சாத்தியமாகும். தடுத்து வைக்கப்படும் இடத்தில் அவர்கள் தவறாக நடத்தப்படுவதாகவும் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் மனித உரிமை அமைப்பு கள் கவலை வெளியிட்டுள்ளன. அதனால் தான் இதனை பரந்தளவிலான பிரச்சினை என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் விவரிக்கிறது.

ஒருவரின் விருப்பத்துக்கு மாறாக அகதி ஒருவர் வெளியேற்றப்படவோ அல்லது திருப்பி அனுப்பப்படவோ கூடாது என்றும், வாழ்வதற்கோ அல்லது சுதந்திரமாக இருப்பதற்கோ அச்சுறுத்தலான எந்த இடத்துக்கும் அகதி ஒருவர் திருப்பி அனுப்பப்படக்கூடாது என்றும் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவொரு நாட்டிலிருந்து அவர்கள் வெளியேறினார்களோ அதே நாட்டுக்கு அவர்களை அவர்களது சம்மதம் இன்றித் திருப்பி அனுப்பக்கூடாது என்றும் அகதி சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் உடன்பாடுகளிலும் ஆஸ்திரேலியா கையெழுத்திட்டுள்ளது. ஆகவே இவற்றை மதித்து ஆஸ்திரேலிய அரசு நடக்கவேண்டும். யுத்தத்தினால் அழிந்த வடக்குக் கிழக்குப் பகுதிகளை அபிவிருத்தி செய்வதும் தமிழர்களின் குடிப்பரம்பலைத் தக்கவைப் பதும் முக்கியமானதாகக் கருதப்படும் இவ்வேளையில் தமிழ் மக்கள் நாட்டிலிருந்து வெளியேறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. எனினும் இப்படி வருவோரை ஆஸ்திரேலிய அரசு மனிதாபிமானமாக நடத்துவது அவசியமாகும். சர்வதேச சட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படவேண்டும்.

# இராஜதந்திர அசட்டுத்தனங்களால் இப்போது பாகிஸ்தானோடும் சிக்கல்

* திருமலையில் சீனாவுக்கு இராணுவ சேவைத்தளம்.
* ராஜீவ்-ஜே.ஆர்.உடன்பாட்டுக்கு மாறான செயல்.
* ரணிலுக்கு யு.எஸ்.பண உதவியாம்.
* ராஜபக்ஷ திடுக்கிடும் அறிவித்தல்.

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
கோகுலன்

“வரப்போகிற தேர்தலில் நான் நிச்சயம் வெற்றி பெறுவேன்” என்று கூறினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தமக்கு எதிராகப் போட்டியிடக் கூடும் என்று கருதப்படும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மனதில் வைத்துக்கொண்டே அவர் இப்படிக் கூறினார். கடந்த வாரம் நடந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமைச்சர்கள் மத்தியில் பேசும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

நுகேகொடையில் ஒரு விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ரணில் தேர்தலில் போட்டியிடுவதற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் அதனைத் தாம் தருவதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளன. அந்தப் பணம் அமெரிக்கா விடமிருந்து கிடைத்துள்ளது என்று தெரிவித்தார் அவர்.

அமெரிக்கத் தூதுவர் மிச்செல் சிசன் தான் இந்தப் பணம் வருவதற்கு உதவி செய்துள்ளவர் என்று கூறிய ராஜபக்ஷ தூதுவர் சிசனை அழைத்து இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக ஆட்சேபனை தெரிவிக்குமாறு வெளியுறவு அமைச்சர் பீரிஸிடம் கூறினார். இந்தக் காரியத்துக்காக இரண்டு பில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் அதை மறுத்திருப்பதுடன் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் அவ் வாறு பணம் கொடுக்கப்படவில்லை என்று கூறினார்கள்.

அமெரிக்காவுக்கு எதிராக இந்தக் குற்றம் சாட்டப்படுவதற்கு யு.எஸ்.எய்ட் (அமெரிக்க உதவி) என்ற நிறுவனம் பத்திரிகையில் விளம்பரம் ஒன்றை பிரசுரித்திருந்தமையே மூலகாரணம். இந்த நிறுவனம் நல உதவி நிகழ்வுகளுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனமாகும். வாக்காளர் கல்வி தொடர்பான நிகழ்ச்சி நிரலுக்காக பல நிறுவனங்கள் மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த நிகழ்ச்சி விலக்கிக் கொள்ளப்பட்டுவிடாது இருந்தாலும் கடந்த காலங்களில் போலவே வருங்காலங்களிலும் வாக்களிப்பு தொடர்பான கண்காணிப்பு அமைப்புகளுக்கு தொடர்ந்து நிதி வழங்கப்படும் என்று தெரிகின்றது.

ராஜபக்ஷவின் கருத்துப் பற்றி ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோது: நுகேகொடையில் நாலந்தராமய புத்த விகாரை நிகழ்வின்போது தாமும் கலந்து கொண்டதாகவும், தேர்தல் விவகாரம் எதற்கும் நிதி வழங்குவது பற்றி ஆலோசிக்கப்படவில்லையென்றும் இது அர்த்தமற்ற கருத்து என்றும் கூறினார். பொதுபலசேனாவுக்கு அரசு ஆதரவு வழங்குவது மற்றும் வட்டரக்க விஜித தேரருக்கு நேர்ந்த கதி ஆகிய விடயங்களே விவாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

### ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னோடி

முன்னைய மாகாண சபைத் தேர்தல்களைப் போலல்லாமல் ஊவா மாகாண சபைத் தேர்தல் பின்னர் வரப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னோடியாக இருக்கப் போகின்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செல்வாக்கு இழந்துவரும் நிலையில் ஐ.தே.கவும் சரியாகக் கால் ஊன்றியிருப்பதாகத் தெரியவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இன்றைய நிலை எப்படியிருக்கிறது என்பதை இது எடுத்துக்காட்டுவதாய் இருக்கும் என்பது போக ஐ.தே.கட்சி தனது வாக்காளர் வங்கியின் இருப்புக் குறைந்துள்ளதா அல்லது அதிகரித்துள்ளதா என்பதை அறிந்து கொள்ளவும் இது உதவும். உள்நாட்டுப் பிரச்சினைகளில் மட்டுமல்ல சில வெளிநாட்டுப் பிரச்சினைகளையும் அரசு எதிர்கொள்ளும் நிலையில் உள்ளது.

தென்னாபிரிக்க பதில் அதிபர் சிறில் ரமபோஷ திங்கட்கிழமை கொழும்பில் வந்து இறங்கியிருந்தார். ரமபோஷவும் அவரது பரிவாரங்களும் யாழ்ப்பாணத்துக்கும் சென்று வடமாகாண முதலமைச்சரை சந்திக்கவிருக்கிறார்கள். அரசு மற்றும் எதிர்க்கட்சியினருடனும் ஆலோசனைகளில் கலந்த பின் அவர் சொந்த நாட்டுக்கே திரும்பிச் செல்வார் என்று தெரிகின்றது.

இனப் பிரச்சினை தொடர்பான தென்னாபிரிக்க குழுவினரின் முன் முயற்சியானது படிப்படியாகவே முன்னெடுக்கப்படவிருக்கின்றது. அப்படியான நிலையில் இப்பொழுது அரசமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கலாம். வரும் வெள்ளிக்கிழமை புதுடில்லி செல்லவிருக்கும் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்த விடயங்களை இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம் விளக்குவார் என்று தெரிகின்றது. தென்னாபிரிக்க முன் முயற்சி மட்டுமன்றி மீனவர் மற்றும் பிரச்சி னைகள் குறித்தும் இந்திய அமைச்சருடன் பீரிஸ் விவாதிப்பார்.

### திருகோணமலையில் சீன விமான சேவை நிறுவனம்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் இப்பொழுது தோன்றியிருப்பதாக அறியப்படும் ஒரு முக்கிய விடயம் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பிரச்சினை கிளப்புவார் என்று தெரிகின்றது.

திருகோணமலையில் விமானங்கள் பராமரிப்பு நிலையமொன்றை நிறுவ சீனாவின் தேசிய வான்வெளி - தொழில்நுட்ப இறக்குமதி - ஏற்றுமதி கூட்டுத்தாபனத்துக்கு அனுமதியளிப்பதென்று கடந்த மே மாதம் 29 ஆம் திகதி இலங்கை அரசு தீர்மானம் எடுத்திருப்பது தொடர்பானதாகும் இந்தப் பிரச்சினை. இதற்கான முதலீடு 40.3 மில்லியன் அமெரிக்க டொலர் (5.15 பில்லியன் ரூபாய்க்கும் அதிகம்) என்று தெரிகின்றது. அண்மையில் 18 உறுப்பினர்களைக் கொண்ட சீன பொறியியல் நிபுணர்கள் குழு இலங்கைக்கு வந்து சென்றதையடுத்து ஏற்பட்ட நிலையாகும் இது. இலங்கை விமானப் படையிலுள்ள சகல சீன தயாரிப்பு விமானங்களுக்கும் சேவைகளை வழங்குவதற்காகும் இந்த நிலையம். விமான பயிற்சி நிலையத்துக்கு அருகில் இது நிறுவப்பட விருக்கின்றது. வரிச் சலுகைகள் மற்றும் செலவினக் கழிவுகள் வழங்கவும் சீனா சம்மதித்திருக்கிறது. திருகோணமலையில் இராணுவ வசதிகளை அளிப்பதானது 1987 இல் இலங்கை - இந்தியாவுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மீறுவதாகும் என்று புதுடில்லியிலுள்ள ராஜதந்திரிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். அந்த ஒப்பந்தத்தின் சில பகுதிகள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் , இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களில் காணப்படுகின்றன. அந்தக் கடிதங்களின்படி திருகோணமலை உட்பட இலங்கை துறைமுகங்கள் இந்திய நலன்களுக்கு பாதகமாக இருக்கலாம் என்று காணப்பட்டால் அனுமதிக்கப்படலாகாது என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் தெரிவித்திருந்ததாவது; நமது இரு நாடுகளுக்கும் இடையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவரும் நட்புறவைக் கருத்தில் கொண்டும் இந்தப் பாரம்பரிய நட்புறவைப் பேணி வளர்க்க வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்ததும், எமது இரு நாட்டு நிலப்பரப்புக்களை எமது நாடுகளின் ஒற்றுமை, ஆள்புல கௌரவம் மற்றும் பாதுகாப்புக்குப் பாதகமான செயற்பாடுகளுக்கு பயன்பட அனுமதிப்பதில்லை என்பதை மீண்டும் உறுதி செய்து கொள்வது அவசியம் என்று குறிப்பிட்டிருந்தார்.

வெளிநாடுகள் இலங்கையில் இருந்து ஒலிபரப்புகளை மேற்கொள்வது பொது மக்களுக்கான சேவையாக இருக்க வேண்டுமேயல்லாது இராணுவ மற்றும் புலனாய்வுகளுக்காக இருத்தலாகாது என்றும் வற்புறுத்தியிருந்த இந்தியப் பிரதமர், இந்தியாவில் பயங்கரவாத பயிற்சி பெறுவதில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் பிரிவினையை வலியுறுத்துகிற இலங்கையர்கள் வெளியேற்றப்படுவார்கள். இலங்கைப் படைகளுக்கு பயிற்சி வசதிகள் அளிப்பதுடன் இலங்கைப் படைகளுக்கு இராணுவத் தளபாடங்கள் வழங்கப்படுவதற்கும் ஒப்புக் கொண்டிருந்தார்.

இந்தக் கடிதத்தில் கண்டிருந்த விடயங்களை ஏற்றுக்கொண்ட இலங்கை ஜனாதிபதி அவைகளை உறுதியும் செய்து பதில் அனுப்பியும் இருந்தார். சீன நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை குறித்து வெளியுறவு அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டதா என்பது தெரியவில்லை. ஆனால் அமைச்சரவையில் ஓர் உறுப்பினர் என்ற முறையில் மே 29 ஆம் திகதி அது குறித்த தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டமை குறித்து அவர் அறியாமல் இருக்க முடியாது. இன்னொரு விடயம் இப்பொழுது தலை தூக்கியிருப்பது பாகிஸ்தான் சம்பந்தப்பட்டது.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் தென்னிந்திய தளங்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய நிலைமை இருப்பதாகப் புதிய இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லிக்குச் சென்றி ருந்தபோது பிரச்சினை கிளம்பியிருந்த ததையடுத்து இலங்கையில் விசா முடிந்த பிறகும் தங்கியிருக்கும் நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை அரசு முடுக்கி விட்டிருந்தது. இப்பொழுது சுமார் 1500 பேர் காவலில் உள்ளனர் ஒரு சிலர் மட்டுமே நாடு கடத்தப்பட்டுள்ளனர். இப்பொழுது இந்திய அதிகாரிகளின் காவலில் உள்ள இலங்கையர் ஒருவர் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்திருந்ததைத் தொடர்ந்து இந்த நிலைமை உருவாகியது. இதற்கிடையில் இலங்கையில் அடைக்கலம் கோரியிருப்பவர்களை நாடு கடத்தக்கூடாதென அடைக்கலம் கோருபவர்களுக்கான இலங்கையிலுள்ள ஐ.நா. உயர் ஆணையாளர் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளார். மற்றும் காவலில் வைக் கப்பட்டுள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கும்படியும் அவர் கேட்டுள்ளார். அதே சமயம் பாகிஸ்தானுக்கு நாடு கடத்தப்படுகிறவர்களுக்கு எதிராக நாட்டின் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி விட்டதாக வழக்குகள் தொடர அந்த நாட்டு அரசு ஆலோசித்து வருவதாகவும் தெரிகின்றது.

இவைகளுக்கிடையில் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் உயர் அதிகாரி ஒருவரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு வெளியுறவு அமைச்சு கேட்டிருப்பதாகவும் செய்தி வந்துள்ளது. ஆனால் குறித்த அதிகாரியின் பணி காலம் முடிந்துவிட்டதாகவும் அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் வந்து உள்ளதாகவும் பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் கூறினார்கள். இருந்தாலும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் காஸிம் குரேஷி அவசரமாக நாடு திரும்பியிருப்பதிலிருந்து இவ்விடயத் தில் ஏதோ சிக்கல் இருப்பதாக உணரச்செய்கிறது.

இலங்கை தொடர்பான ‘பொறுப்புக்கூறல் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச ஐ.நா.விசாரணைகள் ஆரம்பமாக இருக்கும் தருணத்தில் பக்கத்து நாடுகளான இந்தியா- பாகிஸ்தானோடும் சிக்கல்கள் தோன்றியிருப்பது கவனத்துக்குரியவை.


■ ராஜகுமாரன்



# எமனாக மாறியுள்ள காப்பெற் வீதிகள்

தினமும் அதிகரித்துச் செல்லும் வீதி விபத்துக்களைப் பார்க்கும்போது காப்பெற் வீதிகள் எமக்குத் தேவை தானா என்ற கேள்வி எழுகின்றது. முன்னைய மேடு பள்ளங்கள் நிறைந்த மோசமான வீதிகளில் தற்போது இடம்பெறுவதைப் போன்று விபத்துக்கள் ஏற்பட்டதில்லை. இதற்கு வாகனங்கள் குறைந்த வேகத்தில் சென்றமையே முக்கிய காரணமாகும். சாரதிகள் விரும்பினாலும் கடும் வேகத்தில் செல்வதற்கு அப்போது முடியவில்லை. மோசமான நிலையிலுள்ள வீதிகள் அதற்குத் தடைவிதித்தன.

ஆனால் இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. காப்பெற் வீதிகளில் குறைந்த வேகத்தில் வாகனங்களைச் செலுத்திச் செல்வது தமது பெருமைக்கு இழிவைத் தருமென இப்போதுள்ளவர்கள் நினைக்கின்றனர் போலும். இதனால் ஜெட் வேகத்தில் தமது வாகனங்களைப் பறக்க விடுகின்றனர். இவர்கள் எதிரிலோ அல்லது அருகிலோ வருபவர்களைப் பற்றி துளியும் கவலைப்படுவதில்லை. முட்டி மோதிக் கீழே விழுந்த பின்னரும் இவர்களுக்கு ஞானம் பிறக்கின்றதா என்பது தெரியவில்லை. மருத்துவமனைகளின் விபத்துப் பிரிவிலுள்ள விடுதிகளுக்குச் சென்று பார்க்கும்போது இந்த உலகமே ஒரு கணம் எமக்கு வெறுத்துப் போய் விடுகின்றது. அந்த அளவுக்கு அங்கு சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் நிலை எமது மனங்களைப் பாதித்து விடுகின்றது.



உண்மையைச் சொல்லப்போனால் விபத்துக்கள் எம்மைத் தேடி வருவதில்லை. நாமே அவற்றைத் தேடிச் செல்கின்றோம். நாம் எங்காவது நடந்து செல்லும்போது காலில் கல் மோதிக் காயம் ஏற்பட்டு விட்டால் கல் அடித்து விட்டது என்றுதான் கூறுகின்றோம். எங்காவது கல் எம்மைத் தேடி வந்து காயம் ஏற்படுத்தியதை எவராவது கண்டிருக்கின்றார்களா? ஆனால் சிவனே என நிலத்தில் புதையுண்டு தலையை நீட்டிக் கொண்டிருக்கும், கல்லை நாம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வைக்கின்றோம். தற்போது அமைக்கப்பட்டுவரும் காப்பெற் வீதிகளில் பாதசாரிகள் கடந்து செல்வதற்கென மஞ்சள் கோட்டுப் பகுதியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் வாகனங்கள் மிதமான வேகத்தில் செல்ல வேண்டுமென்பதுடன் யாராவது அந்தக் கோட்டுப் பகுதியில் சென்றால் வாகனங்களை நிறுத்தி வைக்க வேண்டுமென்பதும் விதியாகும். ஆனால் வாகனச் சாரதிகள் இதனைப் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. மஞ்சள் கோட்டைக் கண்டதும் புதிய உத்வேகம் பிறந்தவர்களைப்போன்று வாகனச் சாரதிகள் வாகனங்களைப் பறக்க விடுகின்றனர். இதனால் மஞ்சள் கோட்டுப் பகுதியில் பல விபத்துகள் ஏற்பட்டுள்ளன. இதனால் அந்தக் கோடுகளால் என்ன பயனென மக்கள் கேள்வி எழுப்பும் அளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

முன்னரெல்லாம் கட்டை வண்டிகளில் மக்கள் பயணங்களை மேற்கொண்டனர். அவசரம் எதுவுமின்றி ஆசுவாசமாகப் பயணத்தை மேற்கொள்ளக் கூடியதொரு நிலையும் அன்று காணப்பட்டது. மேடு பள்ளங்களில் அந்தக் கட்டை வண்டிகள் விழுந்து எழுந்து செல்வது அவற்றினுள் அமர்ந்து பயணங்களை மேற்கொள்பவர்களைத் தாலாட்டுவது போலவே சுகமானதொரு அனுபவத்தைக் கொடுப்பது வழமையாகும். அன்றைய கட்டை வண்டிகள் செல்வதற்கு காப்பெற் வீதிகள் தேவைப்படவில்லை. வெறும் மண் வீதிகளே போதுமானதாக இருந்தன. ஆனால் இன்று காப்பெற் வீதிக்கு ஒருபடி மேலாக அதிவேக சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மனிதர்களின் உயிர்களை அதிவேகமாகப் பறிப்பதற்கு இந்தச் சாலைகள் பெரிதும் உதவுமென்பதில் சந்தேகமே இல்லை.

இன்று ஏற்படும் அதிகமான விபத்துக்களுக்கு அனுபவம் குறைந்த சாரதித்துவம் முக்கிய காரணமாகக் கூறப்படுகின்றது. நேற்றுவரை யாழ்ப்பாணம் முனியப்பர் கோயிலுக்கு முன்பாக உள்ள தரையிலும், வீதியிலும் வாகனங்களை செலுத்தப் பழகியவர்கள் இன்று அதிவேகமாக அவற்றைச் செலுத்திச் செல்வதைக் காணமுடிகின்றது. சிலவேளை பிரேக்கை அழுத்துவதற்குப் பதிலாக அக்ஸிலேட்டரை இவர்கள் அழுத்தி விடலாம். ஏனென்றால் உரிய பரீட்சயம் இல்லாததால் இந்தத் தடுமாற்றம் ஏற்பட்டு விடலாம். ஆகவே சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் உரிய காலத்துக்குப் பின்னரே மக்கள் அதிகமாக நடமாடும் பிரதான வீதிகளில் வாகனத்தைச் செலுத்தலாமென்ற விதியைக் கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். 'போன கிழமைதான் தம்பிக்கு ஒரு புதிய பல்ஸர் மோட்டார் சைக்கிள் வாங்கிக் குடுத்தனாங்கள்'. இது ஒரு தாயின் பெருமை கலந்த வார்த்தைகள். இத்தனைக்கும் தம்பிக்கு வயது பதினேழுதான். சைக்கிளைக்கூட அவனுக்கு ஒழுங்காக செலுத்தத் தெரியாது. இவனது கைகளில் பல்ஸரைக் கொடுத்தால் காப்பெற் வீதிகளில் செல்பவர்களின் கதி என்னாகும்? நினைத்துப் பார்க்கவே குலை நடுங்குகிறது.

இன்றைய சூழ்நிலையில் வீதிகளில் நடந்து செல்பவர்களின் உயிருக்குக்கூட எவ்வித உத்தரவாதமும் இல்லை. வாகனங்களில் செல்பவர்களைப் பற்றிக் கூறவே வேண்டாம். எமது கிரக நிலைகள் ஒழுங்காக இருந்தால் எல்லாமே நல்லாக நடக்கும். இல்லாவிட்டால் மருத்துவமனைகளைத் தஞ்சமடைய வேண்டியதுதான்.

---

வாசகர் திருமுகம்

## மீண்டும் ஏன் இந்த அவலம்?

யாழ்ப்பாணம் - காரைநகர் சேவையில் ஈடுபடும் 786 இலக்க பஸ்ஸுக்காக கடந்த முதலாம் திகதியும் 5 ஆம் திகதியும் 7ஆம் திகதியும் மாலை 5 மணிக்கு சிவன் கோயிலுக்கு முன்னால் காத்து நின்றோம். பஸ் வரும் நேரம் கடந்ததால் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தோம். அங்கு விசாரித்த பொழுது பஸ் போய்விட்டதே என்று சொன்னார்கள். அப்போதுதான் எங்களுக்குப் புரிந்தது, பஸ் சிவன் கோயில் பின் வீதியால் சென்ற விடயம்.

ஏற்கனவே இது போன்ற தவறுகள் சில மாதங்களுக்கு முன்பும் இடம்பெற்றன. இதற்கான தகவலை உதயன் பத்திரிகையில் செய்தியாகவும், சாலை முகாமையாளருக்கு கடிதம் மூலமும் அறிவித்ததால் முகாமையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாமும் பயன் அடைந்தோம். இப்பொழுது மீண்டும் பழைய பல்லவிதான்.

நாங்கள் மாலை 5 மணிக்கு வேலைமுடிந்து இந்த பஸ்ஸைப் பிடித்து வீடு செல்லலாம் என்றால் சிலவேளைகளில் சாரதிகளின் அசண்டையீனத்தால் நாங்கள் பஸ்ஸைத் தவறவிட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, சாலை முகாமையாளர் வழமையான பாதையான சிவன்கோயில் முன் வீதியால் பஸ்ஸை செலுத்திச் செல்லுமாறு சகல சாரதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்து உதவும்படி கேட்டுக் கொள்கின்றோம். 786 பஸ் மணித்தியாலத்துக்கு ஒரு தடவை சேவையில் ஈடுபடுவதால் குறிப்பிட்ட நேரத்துக்குப் புறப்படும் பஸ்ஸைத் தவறவிடுபவர்கள் மீண்டும் ஒரு மணித்தியாலம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதுமட்டுமன்றி பல அசௌகரியங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

*சிரமப்படும் பயணிகள்.*

## முருங்கன் பெரிச்சார்கட்டு கிராம வீதி; புனரமைப்பும் கால இழுத்தடிப்பும்

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட மேற்படி வீதியின் புனரமைப்புக்கென பணம் ஒதுக்கீடு செய்து ஒப்பந்த காலமும் நிர்ணயித்து அறிவித்தல் பலகையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வேலைத் திட்டத்தைக் கண்காணிக்க கிராமத்தில் ஒரு குழுவையும் தெரிவு செய்து வேலையின் தன்மை பற்றிய விளக்கமும் அளிக்கப்பட்டது. இதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நானாட்டான் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து இன்றுவரை அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. கண்காணிப்புக் குழுவின் கருத்துப் பெறப்படாமலே மக்களுக்கு கண்துடைப்பு செய்யும் விதமாக ஏனோதானோவென பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒப்பந்த காரர் தன்னிச்சையாகவே நடந்து கொள்வது வேதனைக்குரியது. இது குறித்து நானாட்டான் பிரதேச சபை, மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகிய தரப்புக்களுக்கு பல தடவைகளாக முறைப்பாடு செய்தும் அதுகுறித்து எவரும் அக்கறை எடுப்பதாகத் தெரியவில்லை.

எமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வருகிறது. ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு மக்களின் பங்களிப்புடன் செய்து முடிக்க வேண்டிய வேலை விடயத்தில் பிரதேச சபையினரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களமும் அசமந்த போக்காகச் செயற்படுவது வேதனை அளிக்கிறது. எமக்கென ஒதுக்கப்பட்ட நிதியை உரிய முறையில் பயன்படுத்தி தரமிக்க ஒரு பாதையை உருவாக்கி வழங்காமல் காலம் கடத்தி வருவது குறித்து பெரிச்சார்கட்டு கிராம மக்கள் சார்பில் எமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நானாட்டான் பிரதேச சபை, மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம் ஆகியவை ஒன்றிணைந்து கூடிய விரைவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கிராம மக்கள் சார்பில் கேட்டுக் கொ[illegible]

*பள்ளக்கமம் கிராம அபிவிருத்திச் சங்கம், முருங்கன்.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: உறவினரிடையே அதிக நெருக்கத்தைத் தவிருங்கள். சிலர் தொழில் நிமித்தமாக குடும்பத்தை விட்டுப் பிரிய நேரிடலாம். தூரத்தில் இருக்கும் உறவினரால் நன்மை ஏற்படும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும்.

**இடபம்**: உடன் பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இடமாற்றத்தைச் சந்திக்கலாம். உழைப்புக்கேற்ற இலாபம் கிடைக்கும். எதிரிகள் குறித்து அசட்டையாக இருத்தல் கூடாது.

**மிதுனம்**: குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்துப்போக வேண்டியிருக்கும். இதுவரை இருந்து வந்த பலவிதமான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். எடுத்த காரியம் அனுகூலத்தைக் கொடுக்கும்.

**கடகம்**: பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். முயற்சிகளின் பேரில் சுபகாரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறும். நண்பர்கள், உறவினர்கள் அன்னியோன்னியமாக இருப்பர். நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும்.

**சிங்கம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். எதிர்பார்த்திருந்த பணி இடமாற்றம் உங்களை வந்து சேரும். எதிரிகளை அறிவுப்பூர்வமாகச் சமாளிப்பீர்கள்.

**கன்னி**: வழக்கு விவகாரங்கள் மேலும் தள்ளிப் போகும். எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நன்மை தரும். தடைப்பட்ட பண வரத்து தடை நீங்கி கைக்கு வந்து சேரும். வீண்கலகமும் அலைச்சலும் இருக்கும். மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும்.

**துலாம்**: உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர். தடைகளை முறியடித்து காரிய வெற்றி காணலாம். ஏதேனும் ஒரு காரணத்தால் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து சென்றவர்கள் இன்று சேருவார்கள்.

**விருச்சிகம்**: உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும். உடன்பணி செய்வோர், மேலதிகாரிகள் ஆகியோரிடம் மிகுந்த நல்ல பெயர் ஏற்படும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

**தனுசு**: எதிரிகளால் இருந்து வந்த தொந்தரவு நீங்கும். நீங்கள் தொழிலில் அதிக அக்கறை காட்ட வேண்டியிருக்கும். வேலை இல்லாமல் இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் புதிய தொழில் தொடங்குவதற்கு ஏற்ற நாளிது.

**மகரம்**: எதிர்பார்த்திருந்த வெற்றி வாய்ப்பு கிடைக்கும். பாராட்டுகளும் கிடைக்கும். கைவிட்டுப் போன சொத்துக்கள் மீண்டும் வந்து சேரும். எடுத்த காரியம் கைகூடும். மதிப்பும் மரியாதையும் சிறப்பாக இருக்கும். உங்கள் மீதான அவப்பெயர் மறைந்து செல்வாக்கு மேம்படும்.

**கும்பம்**: நீண்ட நாள்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கலாம். நண்பர்கள் இடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும். அவர்களால் உதவிகள் பெறலாம். புதிய வீடு கட்டுவதற்கான வேலைகளையும் இப்போது தொடங்கலாம்.

**மீனம்**: உத்தியோகம் பார்ப்பவர்கள் நல்ல வளர்ச்சியைக் காணலாம். உங்கள் முன்னேற்றத்துக்குத் தடையாக இருந்தவர்கள் தவறை உணர்ந்து உங்களிடம் வந்து சரணடைவார்கள். சிலர் அதிகார அந்தஸ்துக்கு உயர்த்தப்படுவீர்கள்.

## நாள்காட்டி

**ஆனி-26 வியாழக்கிழமை | 10.07.2014**

திதி: திரயோதசி மு.இ.09.52 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.இ.09.53 வரை
சுபநேரம்: 07.28-08.58 வரை
இராகுகாலம்: 01.28-02.58 வரை
பிரதோஷ விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## சுதந்திரமான ஆன்மா

இயற்கை, ஆன்மாக்கள் என இருப்பவை இரண்டே என்பதுடன், சாங்கியர்களின் ஆராய்ச்சி முடிந்துவிடுகிறது. கணக்கில் அடங்காத ஆன்மாக்கள் இருக்கின்றன. அவை மிகவும் நுட்பமான, இனிச் சுருங்க இயலாத நிலையில் இருப்பதால், அவற்றுக்கு அழிவு இல்லை. எனவே, அவை இயற்கையிலிருந்து வேறுபட்டவையாகவே இருக்க வேண்டும். இயற்கைதான் பலவிதமாக மாறுதல் அடைந்து இந்தப் பிரபஞ்சத்தையே தோற்றுவிக்கிறது. ஆனால், சாங்கியர்களின் கொள்கைப்படி ஆன்மா இயங்கா நிலையில் உள்ள ஒன்று; அது இனிச் சுருங்க இயலாத நுட்ப நிலையில் உள்ள ஒன்று. ஆன்மா விடுதலை பெறுவதற்காகவே இயற்கை இந்த மாறுதல்களை எல்லாம் நிகழ்த்துகிறது. நான் இயற்கை அல்ல, என்ற அறிவை ஆன்மா பெறுவதே அதன் விடுதலை.

'ஆன்மா ஒவ்வொன்றும் எங்கும் நிறைந்தது, என்பதைச் சாங்கியர்கள் ஒப்புக் கொண்டே தீரவேண்டும் என்பதை நாம் முன்பு கண்டோம். இனி மாற இயலாத நுட்பப் பொருளாக இருப்பதால், ஆன்மாவை எல்லைக்கு உட்படுத்தவே முடியாது. ஏனெனில் காலம், இடம், காரணம் என்பவையே எல்லைக்குக் காரணமானவை. ஆன்மா இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது. எல்லைக்கு உட்பட வேண்டிய பொருள் இடம் என்பதில், அதாவது உடலில் இருக்க வேண்டும், உடல் இயற்கையிலேயே இருந்தாக வேண்டும். ஆன்மாவுக்கு உருவம் உண்டு என்றால், அது இயற்கையாகவே தான் இருக்க வேண்டும்; இயற்கைக்கு மாறுபட்ட ஒன்றாக இருக்க முடியாது. எனவே, ஆன்மா உருவம் இல்லாதது; உருவம் இல்லாத ஒன்றை இங்கோ அங்கோ, எங்கோ ஓர் இடத்தில் இருப்பதாகச் சொல்ல முடியாது. அது எங்கும் நிறைந்ததாகவே இருக்க வேண்டும். இதற்கு அப்பால் சாங்கிய ஆராய்ச்சி செல்லவில்லை.

# நினைவாற்றலை அதிகரிக்கும் மாதுளை



மாதுளம் பழம் மகத்தான நன்மைகளை மனிதனுக்கு வழங்குகிறது. மாதுளம்பழச் சாற்றுடன் இஞ்சிச் சாற்றை சம அளவு எடுத்து, அதில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து குடித்தால், நாள்பட்ட வறட்டு இருமல் மாறிவிடும். கல்கண்டு, பன்னீர், தேன், மாதுளம்பழச்சாறு நான்கையும் தலா ஒரு குவளை எடுத்துக் காய்ச்ச வேண்டும். இதை நெல்லிக்காய் அளவு எடுத்து இரு வேளை சாப்பிட்டு வந்தால் படை, தேமல் போன்ற சரும நோய்கள் மறைந்து சருமத்தை விட்டே விலகும்.

மாதுளம்பழச் சாற்றையும் அறுகம்புல் சாற்றையும் சம அளவு கலந்து குடித்து வந்தால் சூட்டினால் மூக்கிலிருந்து குருதி வடிவது நிற்கும். இது உடலுக்குக் குளிர்ச்சியையும் தரும். மாதுளை பழச் சாற்றை தொடர்ந்து 40 நாள்கள் அருந்தி வந்தால் பெண்களின் மாதவிடாய் பிரச்சினை நீங்கும். நினைவாற்றல் பெருகும். அது மட்டுமன்றி இரத்தத்தில் உள்ள ஹீமோ குளோபின் அளவு அதிகரித்து, உடல் ஆரோக்கியமாக இருக் கும்.

# சுடோக்கு


## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 5 | 4 | | | | | 3 |
| | 7 | 8 | | | 2 | 1 | | 4 |
| | 4 | | 5 | | 8 | | | |
| | 1 | | | | | | 8 | 5 |
| | | 3 | | 4 | | 2 | | |
| 5 | 8 | | | | | | 6 | |
| | | | 3 | | 7 | | 1 | |
| 1 | | 9 | 2 | | | 7 | 3 | |
| 8 | | | | | 1 | 9 | 4 | 2 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 4 | 1 | 9 | 8 | 5 | 7 | 6 |
| 1 | 8 | 6 | 4 | 7 | 5 | 3 | 2 | 9 |
| 5 | 7 | 9 | 2 | 6 | 3 | 4 | 8 | 1 |
| 8 | 6 | 2 | 9 | 1 | 4 | 7 | 5 | 3 |
| 4 | 5 | 1 | 7 | 3 | 6 | 2 | 9 | 8 |
| 9 | 3 | 1 | 8 | 5 | 2 | 6 | 1 | 4 |
| 7 | 4 | 3 | 5 | 8 | 9 | 1 | 6 | 2 |
| 6 | 9 | 5 | 3 | 2 | 1 | 8 | 4 | 7 |
| 2 | 1 | 8 | 6 | 4 | 7 | 9 | 3 | 5 |



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்வேலியில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இடம் பெற்றது. போட்டியின் முடிவிடத்தை நோக்கி சீறிப்பாயும் காளைகளை இங்கு காணலாம். (த-23)

## றேஞ்சர்ஸ், நியூட்டன் அணிகள் அசத்தல்



யாழ்ப்பாணம், ஜூலை 9

தும்பளை, கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

சென்.தோமஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் நியூட்டன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 232 ஓட்டங்களினால் வெற்றி

## அலன்ராஜ் பெற்ற சதம்; கோமேதகன், பார்த்திபன் அரைச் சதம்



அலன்ராஜ்



கோமேதகன்



பார்த்திபன்

வலி.வடக்கு, ஜூலை 9

அலன்ராஜ் பெற்ற சதம், கோமேதகன், பார்த்தீபன் ஆகியோர் பெற்ற அரைச் சதங்கள் ஆகியவற்றினால் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 232 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவுடன் பிரிவு மூன்றுக்காக நடத்தப்படும் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 05 இலக்குகளை இழந்து 301 ஓட்டங்களைப் பெற்றது.

அலன்ராஜ் ஒன்பது நான்குகளுடன் 104 ஓட்டங்களையும், கோமேதகன் 14 நான்குகள் மூன்று ஆறுகளுடன் 93 ஓட்டங்களையும், கார்த்தீபன் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 33 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த பிரியங்கன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 46 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், கரன், பிரசாந் தலா 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 61, 67 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 28.1 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது. கரன் 18 ஓட்டங்களையும், பிரசாந் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த அலன்ராஜ் 9.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 24 ஓட்டங்களுக்கு 04 இலக்குகளையும், கௌதமன் 07 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றத்துடன் 08 ஓட்டங்களுக்கு 03 இலக்குகளையும், தனுஜன் 07 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 06 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (த-86)

## வென்றது றோயல்

யாழ்ப்பாணம் ஜூலை 9

பொற்பதி விளையாட்டுக் கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இளவாலை மத்தி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 9

மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை ,மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)





சிங்கப்பூர் கராத்தே தோ ஒன்றியத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான சுற்றுப்போட்டி அண்மையில் சிங்கப்பூர் யோ சு ஹங் உள்ளக விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட சோட்டோக்கான் கராத்தே அக்கடமி இன்ரநஷனல் ஸ்ரீலங்கா கழக மாணவர்களான ரி.மார்சல் மற்றும் டி சான் பொணி ஆகியோர் 16 , 17 வயதுப் பிரிவில் திறந்த காட்டா போட்டியில் சிறந்த எட்டு போட்டியாளர் வரிசையில் தெரிவாகியுள்ளனர். (ற-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 9

மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான போட்டியில் புத்தூர், கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம் பெறும் 'பி' பிரிவு அணிகளுக்கான காலிறுதியாட்டத்தில் முதலாவது ஆட்டத்தில் புத் தூர், கலைமதி விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் மீசாலை சீமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 9

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென் மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 9

தும்பளை, கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக ஏ அணியை எதிர்த்து நகதீபம் விளையாட்டுக்ககழக அணி மோதவுள்ளது. (த-23)





# பெரும் மகிழ்ச்சியில் மெஸ்ஸி

கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு பிறகு ஆர்ஜென்ரீனா அரையிறுதியில் அடியெடுத்து வைப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்று மெஸ்ஸி கூறியுள்ளார்.

ஆர்ஜென்ரீனா அணி பெல்ஜியத்தை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது. லீக் சுற்றில் ஹட்ரிக் சாதனை படைத்த ஆர்ஜென்ரீனாவின் வெற்றி நடை, ரவுண்ட்16, காலிறுதியிலும் தொடர்ந்தது.

இதனையடுத்து உலகக் கிண்ண வரலாற்றில், முதன்முறையாக ஆர்ஜென்ரீனா அணி தொடர்ச்சியாக 5 போட்டிகளில் வென்றது. இதனால் ஆர்ஜென்ரீனா அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி, மகிழ்ச்சியாக இருக்கிறார்.

இது பற்றி மெஸ்ஸி கூறுகையில், 1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு அர்ஜென்ரீனா அதிகபட்சமாக காலிறுதி கூட தாண்டவில்லை. ஆனால் இந்த முறை அரையிறுதியில் இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

மேலும் இது சாதாரண காரியம் இல்லை. அதே போல் நெதர்லாந்துக்கு எதிரான அரையிறுதி, சவால் நிறைந்ததாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை என்று கூறியுள்ளார்.

மெஸ்ஸியின் மனைவி அண்டனிலாவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.இவர் ஆர்ஜென்ரீனா, பெல்ஜியம் அணிகள் மோதிய போட்டியைக் காணத் தனது தோழிகளுடன் வந்திருந்தார்.

மைதானத்துக்கு வெளியே வெற்றியை, ஆர்ஜென்ரீனா அணியின் 10 இலக்க ஜெர்சி அணிந்து கொண்டு அதை இடுப்பளவு மடக்கிக் கட்டிக் கொண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டார் அண்டனிலா. (த)

# அரையிறுதியில் டி மரியா விளையாடுவது சந்தேகம்

உலகக் கிண்ண தொடரில் நெதர்லாந்துக்கு எதிரான அரையிறுதியில் ஆர்ஜென்ரீனாவின் முன்னணி வீரர் ஏஞ்சல் டி மரியா களமிறங்கமாட்டார்.

பெல்ஜியம் அணியுடனான அரையிறுதிப் போட்டியின்போது அவரது வலது காலில் ஏற்பட்ட உபாதையால் தசை நாரில் சிறுகிழிவு ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே அவர் களமிறக்கப்படமாட்டார் என அந்நாட்டு உதைபந்தாட்டச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

தொடரின் 2 ஆவது அரையிறுதியில் இன்று ஆர்ஜென்ரீனாவும்-நெதர்லாந்தும் மோதவுள்ளன. இந்நிலையிலேயே காயம் காரணமாக மரியா களமிறக்கப்படமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே காயம் காரணமாக 2ஆவது சுற்று மற்றும் காலிறுதியில் விளையாடாத முன்கள வீரர் சர்ஜியோ அகிரோ உடல் தகுதி பெற்றுள்ளதால் அரையிறுதியில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)





# இறுதிப் போட்டியில் நெய்மர்?

பிரேஸில் அணி அரையிறுதியில் வென்று விட்டால் இறுதிப்போட்டியில் நெய்மர் விளையாடுவார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கொலம்பியாவிற்கு எதிரான ஆட்டத்தில் காயம் அடைந்த நெய்மருக்கு முதுகெலும்பு முறிந்தது. இதனால் அவர் எஞ்சியுள்ள போட்டிகளில் விளையாட முடியாது என்று நிர்வாகம் அறிவித்தது.

மேலும் அந்த சமயத்தில் உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் விளையாடவிருந்த தனது கனவு கலைந்து விட்டதாகக் கதறி அழுதார் நெய்மர். ஆனால் மருத்துவர்கள் கண்டிப்பாகக் குறைந்தது நான்கு வார ஓய்வு தேவைப்படும் என்று கூறினர்.

இந்நிலையில் பிரேஸில் அணி அரையிறுதியில் ஜேர்மனியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினால், முதுகெலும்பு முறிவால் விலகிய நெய்மரை விளையாட வைக்க அவருக்கு விசேட சிகிச்சை அளித்தும், வலி ஊசி போடவும் பிரேஸில் உதைபந்தாட்டச் சங்கம் முடிவு செய்து இருப்பதாக செய்திகள் வெளியாயின.

ஆனால் இதனை பிரேஸில் உதைபந்தாட்டச் சங்கமும், நெய்மரும் மறுத்து உள்ளனர். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், இறுதிப் போட்டியில் விளையாடுவதற்காக வீரரின் உடல் நலத்துடனும், ஆட்ட வாழ்க்கையுடனும் ஒருபோதும் விஷப்பரீட்சை நடத்தமாட்டோம்என்று கூறப்பட்டுள்ளது. (த)

# ஷாகிப் அல் ஹசனுக்கு ஆறு மாதங்கள் தடை



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் வீரர் ஷாகிப் அல் ஹசன் விளையாட 6 மாதங்கள் தடை விதித்துள்ளது அந்த நாட்டு கிரிக்கெட் சபை.

இது பற்றி சபைத் தலைவர் நஜ்முல் ஹசன் கூறுகையில், அவரிடம் மிக மோசமான அணுகுமுறைப் பிரச்சினை உள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் வரலாற்றில் இவர் அளவுக்கு மோசமான அணுகுமுறை உள்ள வீரர்களை சந்தித்திருக்க முடியாது. அணியில் தாக்கம் ஏற்படுத்தும் அளவுக்கு இவரது நடத்தை மோசமாக உள்ளது என்றார்.

கரீபியன் பிரீமியர் லீக் 20/20 கிரிக்கெட் தொடருக்கு முன் ஷாகிப் அல் ஹசன் டாக்காவுக்கு வரவேண்டும் என்று கிரிக்கெட் சபை உத்தரவிட்டிருந்தது. ஆனால் அதற்கு செவி சாய்க்காத ஷாகிப், பயிற்சியாளர் ஹத்துருசிங்கவிடம் மோசமாக நடந்து கொண்டார் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை இவர் மீது குற்றம் சாட்டியது.மேலும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் அனுமதியின்றி அவர் கரீபியன் பிரிமியர் லீகில் பங்கு பெற முடிவெடுத்துள்ளார்.

இந்த நிலையில் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தனக்கு அனுமதி கிடைத்தது என்று கருதியதாகத் தெரிவித்துள்ளார். மேலும், பயிற்சியாளரிடம் மோசமாக நடந்து கொண்டதற்காக மன்னிப்பும் கேட்டுள்ளார்.

மேலும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் கூறுகையில், ஷாகிப் அணுகுமுறையில் ஏகப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. எனவே அவருக்கு இதனை வலிமையாக அறிவுறுத்த விரும்பி 6 மாத காலம் எந்த வித கிரிக்கெட்டிலும் அவர் பங்கு பெற தடை விதித்திருக்கிறோம். மீண்டும் அவர் இவ்வாறு நடந்து கொண்டால் ஆயுள் தடை விதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. என்றார்.

இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து தான் விலகுவதாக ஒருபோதும் கூறவில்லை என்று ஷாகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார். (த)

# சம்பியனானார் ஜோகோவிச்

பரபரப்பான இறுதியாட்டத்தில் ரோஜர் பெடரரின் சவாலை முறியடித்த நோவக் ஜோகோவிச், இரண்டாவது முறையாக விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்றார்.


விம்பிள்டன் சம்பியன் கிண்ணத்தை 8 ஆவது முறையாக கைப்பற்றி தொடரில் அதிக தடவைகள் கிண்ணத்தை வென்றவர் என்ற சாதனையை படைப்பார் என எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த் ரோஜர் பெடரர் இறுதியில் வெற்றியை நழுவ விட்டார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வந்தது. இதில் நேற்றுமுன்தினம் ஆடவர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச்-சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் ஆகியோர் மோதினர்.

சமநிலை த்விர்ப்பு வரை சென்ற முதல் செற்றை பெடரர், 7-6 என தன் வசப்படுத்த 2 ஆவது செற்றில் ஜோகோவிச்சிடமிருந்து பதிலடி (6-4) கிடைத்தது. தொடர்ந்து அசத்திய ஜோகோவிச் சமநிலைதவிர்ப்பு வரை நீடித்த 3 ஆவது செற்றையும் 7-6 எனக் கைப்பற்றினார். எனினும் ஆட்டம் காணாத பெடரர் 4 ஆவது செற்றை 7-5 என போராடி வெற்றி கொள்ள ஆட்டம் விறுவிறுப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் வெற்றியாளரை நிர்ணயிக்கும் 5 ஆவது செற் பரபரப்பை ஏற்படுத்த அதில் எழுச்சி கண்ட ஜோகோவிச் அதனை 6-4 என தன்வசப்படுத்தி சுமார் மூன்று மணி நேரம் ஆட்டத்தை 6-7, 6-4, 7-6, 5-7, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டு கிண்ணத்தை கைப்பற்றினார்.

இது ஜோகோவிச்சின் 7 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



### வரணி
## அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
### (சுட்டிபுரம்)
## சம்புரோக்ஷண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ
### மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் 09.07.2014 (புதன்கிழமை)
### காலை 8.37 - 9.57 வரை

நிகழும் மங்களகரமான ஜய வருஷம் ஆனித்திங்கள் 25ஆம் நாள் (09.07.2014) புதன்கிழமை பூர்வ துவாதசித் திதியும், அனுஷ நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய காலை 8.37 மணிமுதல் 9.57 மணிவரையுள்ள சிங்க லக்ன சுப முகூர்த்த வேளையில் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. நாளை நடைபெறும் கிரியைகளிலும் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து வழிபாடுகள் செய்தும் திருத்தொண்டுகள் புரிந்தும் அம்பிகையின் திருவருள் பெற்றுய்வீர்களாக.

**கும்பாபிஷேக நிகழ்வுக்கு வரும் பக்த அடியார்கள் பால், தயிர், பூ, பூமாலை, இளநீர் முதலிய அபிஷேக திரவியங்களை அம்பிகைக்கு வழங்கி அருள் பெறுவீர்களாக.**

**சிட்டிவேரம், வரணி.** (C/14943)(10) **ஆலய பரிபாலன சபை.**

## மரண அறிவித்தல்

### திருமதி பவளக்கொடி தாமோதரம்பிள்ளை



யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், தையிட்டி, கோண்டாவில் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளக்கொடி தாமோதரம்பிள்ளை நேற்று முன்தினம் (07.07.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், ஜெயபவானி (கனடா), ஜெயச்சந்திரன், ஜெயமாலினி, ஜெயசீலன் (ஜேர்மனி), ஜெயவதனி, ஜெயமோகினி (இலங்கை), சுகந்தன் (ஆசிரியர்- வ/விபுலானந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், தனபாலசிங்கம், இரத்தினம், மங்களாதேவி, அன்னலக்சுமி, வரதா தேவி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராஜேந்திரம் (கனடா), சிவலோகநாதன் (இலங்கை), பிறேம்குமார் (ஜேர்மனி), செல்வநாயகம் (இலங்கை), ரஞ்சிதமலர், நீருஜா (ஜேர்மனி), அனுஷா (வரவு-செலவுத்திட்ட உதவியாளர், மாவட்ட செயலகம்- வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும், யசிந்தன், அருன்யா (கனடா), விதுஷன், நிதுஷன், ஜெனனி (ஜேர்மனி), சுலோக்ஷனன் (யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) தபோஷனன் (யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்), சர்மிலன் (யாழ். கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்), மதுஷா (ஏன்ஜல் சர்வதேச பாடசாலை - மானிப்பாய்), சாஜினா, அஜினா (ஜேர்மனி), பிரமிகா, பிரதுஷா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), பிரியங்கா (யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கீர்த்தி, கிரியா (ஜேர்மனி), திவிஷ்ஷா (வ/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), யதுர்சனா (வ/சுத்தானந்தா இந்து இளைஞர் பாலர் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2014) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பழனி ஆண்டவர் ஒழுங்கை,**
**இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**
T.P: **சந்திரன் (மகன்-ஜேர்மனி) - 496221337621**
**சிவலோகநாதன் (மருமகன்- இலங்கை) 021 4993005**
**சுகந்தன் - 075044 7782** (43373)(10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் கந்தசாமி



வெளிச்ச வீட்டு ஒழுங்கை, தும்பளை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் கந்தசாமி நேற்று (08.07.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சி.மு.கந்தசாமியின் துணைவியும், காலஞ்சென்ற முருகையா மற்றும் சோமாவதி (கனடா), பத்மாவதி (கனடா), கருணாவதி, லீலாவதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி பாமதி, சிவப்பிரகாசம் (கனடா), Dr. சண்முகவடிவேல் (கனடா), சபா ரவீந்திரன் (நகரபிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை), Dr. மோகன்தாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2014) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 9.00 மணியளவில் பூதவுடல் தும்பளை கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **சபா ரவீந்திரன் (சட்டத்தரணி)**
**நகரபிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை.**

**T.P: 021 226 4795** (சி/14942) (4.6.3)



## வீட்டுக்கிருத்திய அழைப்பும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

**மலர்வு 18.07.1925** **உதிர்வு 10.06.2014**

### கண்மணி வெற்றிவேலு

கடந்த 10.06.2014 அன்று சிவபதமடைந்த எனது அன்புக்கும் பாசத்துக்குமுரிய குடும்பத்தலைவி கண்மணி வெற்றிவேலு அவர்களின் 31ஆம் நாள் சபிண்டீகரண நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் (10.07.2014) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளவும்.

**குறிப்பு: அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் தயவு செய்து தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்ளவும்.**

**சுச்சாய் வடக்கு, கொடிகாமம்.**

**திருமதி மங்கையர்க்கரசி சுப்பிரமணியம்**
**(மகள்)**

(43683)(10)

## இலவச ஆங்கிலப் பயிற்சி நெறி

இலங்கை ஜனாதிபதியின் 'மஹிந்த சிந்தனை' செயற்றிட்டத்தின் கீழ் இலவச ஆங்கிலப் பயிற்சி நெறி எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட உள்ளது. பாடசாலை விட்டு விலகியோரில் ஆர்வமுடையோர் நாளை 10 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ சேர்ப்பிக்க வேண்டுமென யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## இராஜேந்திரம் இராசம்மா

**(அன்ரி)**

தோற்றம்
07.11.1928

மறைவு
20.06.2013

திதி: வளர்பிறை துவாதசி – (09.07.2014)

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டு ஓராண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்களை
விட்டு என்றும் அகலாது
எங்களைத் தவிக்கவிட்டு ஏன் விடை பெற்றீர்கள்
அம்மா! மறப்பதற்கு முயற்சித்தோம் முடியவில்லை
உங்கள் நினைவுகள் என்றும்
எங்கள் நினைவில்

*பிரிவால் தவிக்கும்*
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**011 254 2488** [43326][45.6.3]

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயத்தின் இவ்வாண்டுக்கான பெருந்திரு விழா கடந்த மாதம் 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது.
அந்த வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக் கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

* * *

வடமராட்சி, ஜூலை 9
தென்புலோலி, கிணற்றடி அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 8.40 மணி தொடக்கம் 10.35 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.
பிரதம குருவாக சிவஸ்ரீ திருஞான ஜெயச்சந்திரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ஓ-173)

* * *

அல்வாய் வடக்கு அருள்மிகு விறுமர் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் மடைப் பண்டம் எடுத்தலுடன் ஆரம்பமாகி மறுநாள் 12 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் பொங்கல் விசேட பூசையுடன் நிறைவுபெறும். (ஓ-173)

* * *

மல்லாகம் ஸ்ரீ பழம் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9.40 மணிக்கும் 10.40 மணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது. (ஓ-86)

* * *

தெல்லிப்பழை தென்மேற்கு, விழிசிட்டி அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தின் மணவாளக் கோலத் திருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன்ஆரம்பமாகும். மறுநாள் திங்கட்கிழமை தொடக்கம் 12 தினங்கள் மாலை 5.30 மணிக்கு அலங்கார உற்சவமும் இடம்பெறவுள்ளது. (க)

* * *

அல்வாய் கிழக்கு மாலிசந்தி ஸ்ரீ வரதராஜப் பிள்ளையார் கோயில் வருடாந்தப் பெருந்திரு விழா நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஓ-173)

* * *

சாவகச்சேரி வடக்கு பன்றிக்கேணி கந்தசாமி தேவஸ்தானத்தில் மூன்று தளங்களைக் கொண்ட கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. சுமார் 25 அடி உயரம் கொண்டதாக இந்தக் கோபுரம் அமையவுள்ளது. ஆலயத்தின் உள்வீதியின் சுற்றுப் புற மண்டபமும் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-131)

## பரிசளிப்பு விழா

சுன்னாகம், ஜூலை 9
உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா வைபவம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம் மணிராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக உடுவில் வைகுறோ நிறுவன இயக்குநர் ஜெயரட்ணம் ரமணதாஸ், ஞானம்ஸ் பவுண்டேசன் யாழ்ப்பாண இணைப்பாளர் கனகசிங்கம் சிவநீதன், துணுக்காய் பிரதேச சபை தொழில்நுட்ப அலுவலர் சபாரத்தினம் அருந்தவராசா ஆகியோரும் கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் சி.பஞ்சாட்சரமும் கலந்து கொள்வர். (ஓ)

## க.பொ.த.(உ.த) அனுமதி அட்டை வழங்கல் 2014

யாழ்ப்பாணம், ஜூலை 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து ஜி.சீ.ஈ. (உ.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். மாணவர்கள் அனைவரும் தத்தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய அடையாள அட்டை மற்றும் சீருடையில் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

### பெற்றோர் தின விழா


முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பெற்றோர்தின விழா நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன்போது பல்வேறு நிகழ்வுகள் வித்தியாலய வளாகத்தில் இடம்பெறவுள்ளன. (க)

### வாழ்வாதார உதவிகள்

யாழ்.வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் வாழ்வாதார உதவிகளை வழங்கும் நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கழகத்தின் பணி மனையில் இடம்பெறவுள்ளது. (க)

# மரண அறிவித்தல்

## கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா *(ஊரெழு)*



ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும், ஊரங்குனை கட்டுவனை வசிப்பிடமாகவும் தற்போது ஊரெழு கிழங்கில் வசித்தவருமாகிய கந்தையா ஸ்ரீஸ்கந்தராசா 07.07.2014 திங்கட் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்மலர் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை -பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், பூவராணி (பவானி)யின் அன்புக் கணவரும், சுதர்சன் (ஜேர்மனி), சபிதா (பிரான்ஸ்), நந்திதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஜெகதாம்பிகை, ஜெகநாதன் மற்றும் சாந்தரூபி, வசந்தகுமார், தயாபரன், நிர்மலாதேவி, ஜெயவதனா, இந்திரவதனா, ஜெயமாலா ஆகியோரின் சகோதரனும், சிவராஜசிங்கத்தின் (கனடா) மைத்துனரும், கௌரி, ஆஷா, அரவிந்தன் ஆகியோரின் மாமனும், பிரதீபாவின் மாமனாரும், ரிசோனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2014) புதன் கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்: பூவராணி
*(மனைவி-பவானி)*
மற்றும் குடும்பத்தினர்

(49689)(7.6.3)

# ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

## சிதம்பரி காமாட்சிசுந்தரம் (காமாட்சி)

(ஓய்வுபெற்ற சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர் - காங்கேசன்துறை)


மலர்வு
20.09.1947

உதிர்வு
20.06.2013

திதி:ஆனிமாத பூர்வபக்க துவாதசி (09.07.2014)

அப்பா உங்களைப் பிரிந்து
ஓராண்டு போனதுவோ
எம் விழிகள் நிரந்தரமாய்
ஈரமாய் ஆனதுவோ
அதிகாலை எழுந்து
நித்திரைக்குப் போகும் வரை
நித்தம் உங்கள் நினைவு - நெஞ்சமெல்லாம்
எம் திகைப்பு இருக்கும் வரை
உங்கள் துன்பமெல்லாம் பொறுத்து - எம்
உயர்வை பிரார்த்தித்தீர்கள்
எப்போதும் எங்கேயும் எம்மோடே
நீங்கள் இருந்திட எவ்வழியிலாவது
இணைந்து விட வேண்டுமப்பா
*உங்கள் ஆத்மசாந்திக்காக*
*நரசிங்க வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள்.**
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.



(46584)(12.3.6)

### சித்திரத்தேர் வெள்ளோட்டம்

விடத்தற்பளை, சம்பாவெளி வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வும், சம்பாவெளிப் பிள்ளையார் மீது பாடப்பட்ட இறுவட்டு வெளியீட்டு நிகழ்வும் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன.
இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு ஆலய முன்றிலில் முற்பகல் 10 மணியளவில் ஆலய பிரதமகுருவங்கியதே ஷௌரி சங்கர் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.
மங்கல விளக்கை ஆலயபரிபாலனசபைத் தலைவர் ச.சீவரத்தினம், மருத்துவர் ஆறுமுகம், கிராம அலுவலர் செல்வி கலையரசி ஆகியோர் ஏற்றி வைப்பார்கள். முதன்மை விருந்தினராக சாவகச்சேரி உதவிப் பிரதேச செயலர் செல்வி நிரஞ்சனா நவரத்தினம் கலந்து கொள்வார்.
முதற்பிரதியை கு.விமலதாஜன்பெற்றுக்கொள்ள பாடல்களின் நயப்புரையை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன் நிகழ்த்துவார். (க-9)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
02.06.1966



இறப்பு
09.07.2010

## அமரர் கந்தையா சிவகுமார்

ஆண்டுகள் நான்கு அகன்று கழியினும்
மீண்டெழும் எண்ணங்கள் உள்ளன
தாண்டெழும் துயரைத் தந்தவாறு
இழகிய உள்ளத்தோடு பெற்று இன்புற்றிருந்த காலங்கள்
எண்ணத் திரையில் என்றும் நிலைக்கின்றன
நீங்காத நினைவு நெஞ்சில் நிலைத்து இருக்கும் வரை
தாங்காத வகையில் சோகத் தீ மூண்டெழுவது
பெற்றதாய் உற்ற பெருமகிழ்வு
பிரிவால் வற்றிவறண்டு பற்றாய்ப் பரிதவிப்பதை
பித்தெனும் பிள்ளை உள்ளம் அறியாதோ
நேச நினைவும் பாசப்பிணைப்பும் சோகமெனும்
மோசச் சூழலில் தள்ளினாலும்
விதியின் விளைவை நினைந்து மீண்டும்
ஆன்ம ஈடேற்றத்துக்கு ஆண்டவனை வேண்டி
அங்கலாய்க்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம், சாவகச்சேரி.

சின்னத்தம்பி கந்தையா (தந்தை),
கந்தையா வாமதேவி (தாய்),
கந்தையா உதயகுமார் (தம்பி).

# மரண அறிவித்தல்

## திருமதி மேரி (றோஸ்) வின்சலோஸ்பிள்ளை பிரான்சிஸ்

(இளைப்பாறிய மருத்துவதாதி - யாழ். போதனா வைத்தியசாலை)



யாழ்ப்பாணம் 49ஏ, வேம்படி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றோஸ் என்றழைக்கப்படும் திருமதி மேரி வின்சலோஸ்பிள்ளை பிரான்சிஸ் (07.07.2014) திங்கட்கிழமை காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோன்பிள்ளை சவரிமுத்து- லூசியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான யோண்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற லில்லி ஜேம்ஸின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற யோண்பிள்ளை பிரான்சிஸின் அன்பு மனைவியும், பெனடிக்ற் இம்மானுவேல், காலஞ் சென்ற மேரி யசிந்தா ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி அன்ரனிதாசம்மாவின் அன்பு மாமியும், நிசாந்தன் (கனடா), நிசாந்தி (கனடா), நிலானி (மன்னார்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வின்ஸ் லஸ், நிக்கொலின், அமிர்தசிங்கம் ஆகியோரின் புகுந்தவழிப் பேர்த்தியும், தியோ, றொஷல், டேமியன், ஷறோன், ஜெறோன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (09.07.2014) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு 49ஏ, வேம்படி வீதி இல்லத்திலிருந்து புனித அடைக்கல அன்னை தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பிற்பகல் 3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து பூதவுடல் கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**திரு.திருமதி. பெனடிக்ற்: 0094214922412**
**கைத்தொலைபேசி: 0094 772870876 (யாழ்ப்பாணம்.)**
**நிசாந்தி - 0014169 291 091, நிசாந்தன் 0017 788 847 9153, (கனடா)**
**நிலானி - 0094 23 2250 136 (மன்னார்)**

(49803)(10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக யாழ். மத்திய கல்லூரி பிராந்திய நிலையக் கல்விமாணி பட்ட கற்கைநெறி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ. இராச நாயகம் அவர்களின் அன்புத் தந்தை

**வேலுப்பிள்ளை மார்க்கண்டு**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப் பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

கல்விமாணி பட்ட கற்கைநெறி,
யாழ். மத்திய கல்லூரி.

(49804)(10)

**இணைப்பாளர்,**
**விரிவுரையாளர்கள்,**
**மாணவர்கள்.**



# பாராட்டி வாழ்த்துகிறோம்

சுகததாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 28ஆவது Sri Lanka Master Athletics (open) Champions-2014 இல் எமது கல்லூரியின் ஆசிரியர்

## செ.திருமாறன்

40-45 வயதுக்கு உட்பட்டோரில் 100m, 400m தடைதாண்டல் போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம்பெற்று சாதனை படைத்துள்ளார்.

Best Wishes!

**ஆசிரியர் கழகம்**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

# பணியாளர் தேவை

அடிப்படைச் சம்பளம்

| | |
|---|---|
| முகாமையாளர் | : 50,000.00 - 75,000.00 |
| அனுபவமுள்ள Accounts Clerk | : 20,000.00-30,000.00 |
| அனுபவமுள்ள Marketing Manager | : 40,000.00 - 50,000.00 |
| ஆர்வமுள்ள Tele-Operators | : 15,000.00 - 30,000.00 |

**உடன் தொடர்பு கொள்க:**
**021 228 3662, 076 534 4592**
**E-mail: gsn2714@gmail.com**

## Global Sourcing net works

**No: 14, Veerasingam Road,**
**Uthayanagar East - Kilinochchi.**

(41313)(10)

# வடமாகாண தொழில்முயற்சியாளர் விருது, 2014

"யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றமும் (Chamber of Commerce and Industries of Yarlpanam), கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படுகின்ற "தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையும் (National Enterprise Development Authority) இணைந்து ஒழுங்குசெய்யும் 2014ம் ஆண்டின் வடமாகாண தொழில் முயற்சியாளர்" விருதுகளுக்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**நோக்கம்**

1. சிறந்த தொழில்முயற்சியாளர்களுக்கான அங்கீகாரமும் கௌரவித்தலும்
2. தொழில்முயற்சியாளரை மேலும் ஊக்குவித்து வடமாகாண மொத்த உற்பத்தி அதிகரிப்பில் உந்துசக்தி வழங்குதல்.
3. தொழில்முயற்சியாளர்களை அவர்களது துறைகளில் உயர்நிலை அடைவதற்கு ஊக்கப்படுத்தல்

**விருதுகளுக்கான மாவட்டங்கள்**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்

**விருதுகளுக்கான தொழில்முயற்சி பிரிவுகள்**

1. உற்பத்தி துறை
2. விவசாயம், கால்நடை வளர்ப்பு, மற்றும் மீன்வளங்கள்
3. விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத்துறை
4. சேவைத்துறை

**தொழில்முயற்சி வகைகள்**

| தன்மை | மொத்த முதலீடு | தொழிலாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| நுண்ணியது | 0.5 மில்லியனுக்கும் குறைவானது | 01-05 |
| சிறியது | 0.5 மில்லியன் - 10 மில்லியன் | 05 -,20 |
| நடுத்தரம் | 10 மில்லியன் - 50 மில்லியன் | 20 - 50 |
| பெரியது | 50 மில்லியனுக்கும் அதிகமானது | 50ற்கும் அதிகமானது |

**வழங்கப்படவுள்ள விருதுகள்**

அதிசிறந்த தொழில்முயற்சியாளர் விருது (வடமாகாண ரீதியாக) -01
சிறந்த தொழில்முயற்சியாளருக்கான விருதுகள் - 12 (அட்டவணையிலுள்ளவாறாக)

| தொழில்முயற்சி வகை | நுண்ணியது | சிறியது | நடுத்தரம் | பெரியது |
|---|---|---|---|---|
| உற்பத்தி துறை | 01 | 01 | 01 | 01 |
| விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்வளங்கள் | 01 | 01 | 01 | 01 |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் சேவைத்துறை | 01 | 01 | 01 | 01 |

**விசேட விருதுகள் – 06**

சிறப்பாக செயலாற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளன

- சுற்றுச்சூழலுடன் ஒத்திசைவாக இயங்குகின்ற தொழில்முயற்சி
- சிறந்த ஏற்றுமதியாளர்
- சிறந்த உற்பத்தித்திறனுடன் இயங்கும் தொழில்முயற்சி
- சிறந்த புத்தாக்க தொழில்முயற்சி
- சிறந்த பெறுமதிசேர் உற்பத்தி தொழில்முயற்சி
- சிறந்த சக்திவளப்பாவனைக்கான தொழில்முயற்சி

**தகைமை**

* வடமாகாணத்தினை சார்ந்த பதிவுசெய்யப்பட்ட தனியார்துறை தொழில்நிறுவனங்கள் (வடமாகாணத்தில் கிளைகளைக் கொண்டுள்ள தேசிய நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்கள் விண்ணப்பிக்க இயலாது)
* சட்ட ரீதியாக பதிவுசெய்யப்பட்டிருத்தல் அவசியம் (பிரதேச செயலகம் அல்லது கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்)

**விண்ணப்ப படிவங்கள் கிடைக்குமிடங்கள்**

1. "யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்", இல.124, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021222 6609
2. "கிளிநொச்சி மாவட்ட வணிக, கைத்தொழில் வேளாண் ஒன்றியம்", இல.57, புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சி. தொலைபேசி - 021228 5601
3. "வவுனியா மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம்", சத்தியா கட்டடம், இல. 57, 01ம் குறுக்கு வீதி, வவுனியா, தொலைபேசி - 024 222 4313
4. "முல்லைத்தீவு மாவட்ட வணிக, கைத்தொழில் வேளாண் ஒன்றியம்", ஏ9 நெடுஞ்சாலை, மாங்குளம். தொலைபேசி - 021 206 0025
5. "மன்னார் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம்", இல. 48, மூர்வீதி, மன்னார், தொலைபேசி - 023 222 3308

**விண்ணப்ப முடிவுத்திகதி 10 ஆவணி 2014**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் மேற்கூறப்பட்ட காரியாலயங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து விருதுகள் தொடர்பாகவும் வெளியக நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும். அவர்களது தீர்மானம் தொடர்பாக எவ்வித கடிதத்தொடர்புகளும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

விருது வழங்கும் நிகழ்விற்கு ஆகக்குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்பு வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவார்கள். விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் புரட்டாதி மாதம் யாழ்ப்பாணத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

தலைவர்
யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம்
இல.124, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்

# துயர் பகிர்கின்றோம்



அப்போஸ்தலிக்க கார்மேல் சபையைச் சேர்ந்தவரும், சுண்டுக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கைச் சார்ந்தவருமான

## அருட்சகோதரி மேரி கலிஸ்ரா பிரான்சிஸ்பிள்ளை

08.07.2014 செவ்வாய்க்கிழமை அச்சுவேலி லங்காமாதா கார்மேல் சபை கன்னியர் இல்லத்தில் இறைபதமடைந்தார்.

அருட்சகோதரியின் பிரிவால் துயருற்றிருக்கும் சபைச் சகோதரிகளுக்கும் உறவினர்களுக்கும் சுண்டுக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்கு மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இவரது ஆன்மா இறைவனில் அமைதியடைவதாக.

சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

**அருட்பணி சி.எஸ். குருஸ் அமதி**
**பங்குத்தந்தை, பங்குமக்கள்,**
சுண்டுக்குழி புனித திருமுழுக்கு யோவான் ஆலயம் யாழ்ப்பாணம்.

(49802)(10)

# மரண அறிவித்தல்



## மேரி கலிஸ்ரா அ.கா

(அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இலங்கா மாதா மடம் அச்சுவேலியில் வசித்தவருமான அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரி மேரி கலிஸ்ரா அ.கா அவர்கள் 08.07.2014 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்பிள்ளை-லூட்ஸ்மரியா தம்பதியரின் அன்பு மகளும், அருட் சகோதரி மேரி பிறசன்ரேசன் (திருக்குடும்ப தியானசபை) அவர்களின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி இன்று (09.07.2014) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு இலங்காமாதா மட ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் யாழ்ப்பாணம் லூர்துமாதா மடத்தில் பி.ப 2.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப் பட்டு, யாழ். மரியன்னை பேராலயத்தில் பி.ப 3.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: அருட்சகோதரி M.தெரசில்டா அ.கா**
**இலங்கா மாதாமடத் தலைவி, அச்சுவேலி.**

(49694)(10)

# தொடர்ச்சிகள்

## இலங்கை

வரை கொழும்பு, தாஜ் சமுத்திரா விடுதியில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பு பயன்மிக்கதாகவும் திருப்திகரமாகவும் அமைந்தது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். "போர் முடிந்து 5 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையிலும், போரால் இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் மீள்குடிய மர்த்தப்படவில்லை. அதற்குக் காரணம் அங்கு காணப்படும் இராணுவப் பிரசன்னமே. இராணுவம் அங்கிருந்து அகற்றப்பட்டாலே மீள்குடியமர்வு சாத்தியமாகும்"- என்பது குறித்து நாம் அவர்களுக்குத் தெளிவாக விளக்கியிருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு "சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசுக்கு அக்கறையில்லை. அவர்களிடையேயான எதிர்ப்பை வலுப்படுத்தும் செயற்பாடுகளையே அரசு செயற்படுத்துகின்றது" என்பது குறித்தும் அவர்களுக்கு நாம் விளக்கினோம் என்றும் அவர் தெரிவித்தார்.

சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன்,

"இலங்கைஅரசுடன் ஓர் ஆண்டு பேச்சு நடைபெற்ற அதில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் தெரிவுக் குழுவில் பங்கேற்பது என்று தெரிவிக்கப்பட்டபோதும், இலங்கை அரசு அந்த இணக்கப்பாட்டை முறித்துக் கொண்டு தெரிவுக் குழுவில் பங்கேற்குமாறு வற்புறுத்துகின்றது என்பதையும் நாம் அவர்களுக்குத் தெளிவாக்கினோம். இருதரப்புப் பேச்சுக்கு தயாரில்லை

என்று அரசு பகிரங்கமாகத் தெரிவித்துள்ளபோது, 31 பேர் கொண்ட தெரிவுக்குழுவில் எமது தரப்பு 3 பேர் எதுவும் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது என்பதையும் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினோம்"- என்று தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பு முடிந்த பின்னர் ரமபோஷ குழுவினர் விசேட ஹெலி மூலம் யாழ்ப்பாணம் பறந்தனர். யாழ்ப்பாணத்தில் அவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ரில்கோ விடுதியில் நடைபெற்ற சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் "இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே தென்னாபிரிக்காவின் விருப்பம். மேற்குலகும் இந்தியாவும் முன்னெடுக்கும் தமிழ் மக்களுக்குச் சார்பான சர்வதேச நடவடிக்கைகளுக்கு எதிரான வகையில் தென்னாபிரிக்கா ஒரு போதும் செயற்படாது."- என்று தம்மிடம் ரமபோஷ குழுவினர் உறுதியளித்தனர் என்று தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சருடனான சந்திப்பின் பின்னர் வடமாகாண ஆளுநரைச் சந்தித்து ரமபோஷ குழு கலந்துரையாடியது. அதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. இந்தச் சந்திப்புகளின் பின்னர் நேற்று மாலையே ரமபோஷ குழுவினர் கொழும்பு நோக்கிப் பயணமாகினர். (ற)

## மன்னிப்பு

இலங்கையில் வாழும் பௌத்தர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று பொதுபல சேனா அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கத்தோலிக்க காலனித்துவம் இலங்கையில் மேற்கொள்ளும் அட்டூழியங்களுக்காகவே பாப்பரசர் பிரான்சிஸ், இலங்கை வாழ் பௌத்தர்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பின் தலைவர் கலபொடஅத்தே ஞானசார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சில நாடுகளில் கத்தோலிக்க காலனித்துவம் மோசமான அழிவுகளுக்கும், படுகொலைக்கும் முன்னாள் பாப்பரசர்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியது போல், இலங்கையிலும் கத்தோலிக்க காலனித்துவம் மோசமான அழிவுகளை மேற்கொண்டதுடன், பௌத்த பிக்குகளையும் படுகொலை செய்துள்ளதால், பாப்பரசர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டியது அவசியமானது என்றும் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலேயர், போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் அனைவரும் தமக்கு ஒன்றென்றும் ஞானசாரதேரர் குறிப்பிட்டுள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸ் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இலங்கைக்கு பயணம் செய்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, சிங்கள பௌத்த கடும்போக்கு அமைப்பாக தங்களை அடையாளப்படுத்திக்கொண்டுள்ள பொதுபல சேனா அமைப்பின் தலைவர் கலபொட அத்தே ஞானசார தேரர் இந்த வலியுறுத்தல்களை முன்வைத்துள்ளார். (ற-சி)

## சர்வதேச

தென்னாபிரிக்க குழு சார்பில் அந்நாட்டு உதவி ஜனாதிபதி சிறில் ரமபோஷ, உதவி வெளிவிவகார அமைச்சர் இப்ராகிம் இஸ்மாயில் இப்ராகிம், ரமபோஷவின் சிரேஷ்ட ஆலோசகர் றூத் மேயர், ஐவர் ஜெனின், இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்குபயணம்மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் யாழ்நகரில் ரில்கோ விடுதியில் வடமாகாண முதலமைச்சா க.வி.விக்னேஸ்வரன், வடமாகாண சபை அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், த. குருகுலராஜா ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கும்போதே முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து தென்னாபிரிக்கக் குழுவினருக்கு நாம் எடுத்துக்கூறினோம். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினரின் காணி அபகரிப்பு, பெண்களுக்கு பாதுகாப்பின்மை, பொது மக்களின் அன்றாட வாழ்க்கையில் இராணுவத் தலையீடு, சட்டவிரோத குடியேற்றங்கள் என்பன பற்றி விளக்கினோம்.

18ஆவது அரசியல் திருத்தத்தை உருவாக்கி இலங்கை ஜனாதிபதி அதிகாரங்களை தன் பக்கம் வைத்துள்ளார். இதனால் மாகாணங்களுக்கு 13ஆவது திருத்தத்தின்மூலம் வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் மறுக்கப்படுகின்றன. இதனால் நாம் வடக்கு மாகாண அபிவிருத்தி, மக்கள் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றோம் என்று நான் வலியுறுத்தினேன்.

அப்போது ரமபோஷ என்னிடம் கேள்வி ஒன்றைத் தொடுத்தார். நீங்கள் நீதியரசராக இருந்திருக்கிறீர்கள். அப்படியானால் இந்த விடயத்தை ஏன் நீதிமன்றுக்கு கொண்டுசெல்லக் கூடாது என்பதே அவரது கேள்வி.

அதற்கு நான் விரிவாக பதிலளித்தேன். அதாவது அப்போதிருந்த நீதிக்கட்டமைப்புக்கும் இப்போதுள்ள கட்டமைப்புக்கும் நிறையவே வித்தியாசம் உண்டு. இப்போது ஜனாதிபதியின் ஆலோசகராக இருந்த ஒருவரே நீதியரசராக இருக்கிறார். அவர் எத்தகைய தீர்மானங்களை எடுப்பார் என்பதை சொல்லித்தான் புரியவைக்க வேண்டுமென்றில்லை. எனவே நீதிமன்றங்களை நாடுவது பொருத்தமற்றது என்று நான் தெளிவுபடுத்தினேன்.

வடக்குக்கும் தெற்குக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. அரசு சிறுபான்மையினருக்கு அதிகாரங்களை வழங்கத் தொடர்ச்சியாகப் பின்னடித்துவருகிறது. இதுபோன்ற நிலைமைகள் தான் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன.

மற்ற மாகாணங்களில் மக்கள் அரசின் மக்கள் - பெரும்பான்மையினர் என்ற முறையில், அவர்களுக்கு எந்த விதமான பிரச்சினையும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிறிதொரு இனம் இருப்பதால், அவர்களுக்கு உரித்துக்கள் வழங்கக்கூடாதென்ற உள்ளார்ந்த எண்ணத்துடன் தான் அரசு செயற்படுகிறது என்று சுட்டிக் காட்டினோம். எங்கள் கருத்துக்களை அவர்கள் உன்னிப்பாக கேட்டு அறிந்துகொண்டனர்.

அத்துடன், பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் போது, இலங்கை அரசு எங்கள் நாட்டின் அனுபவங்களை தம்முடன் பகிர்ந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருந்தது. இதற்கு அமைவாகவே தாம் இலங்கைக்கு வந்துள்ளனர் என்றும்,

தமது அனுபவத்தை எடுத்துச் சொல்லவும் அதன் மூலம் இலங்கை அரசியல் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா என்பது சம்பந்தமாக அறிந்து, அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதே தமது நோக்கம் என்றும் அவர்கள் எங்களிடம் கூறினர் என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

பல்வேறு மொழிகள், பல்லினத்தவர்களைக் கொண்டுள்ள தென்னாபிரிக்க நாட்டில் வெள்ளையர்களும், கறுப்பர்களும் எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்தினர் என்பதை இலங்கைத் தலைவர்களுக்கு எடுத்துக்கூறி அதன் மூலம் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியுமா என்பதை தாம் ஆராய்வர் என்றும் அவர்கள் என்னிடம் தெரிவித்தனர் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார். (ஐ-5-14-21-106)

## மகனைத்

தனது மகனை தமிழீழ விடுதலைப் புலிகள் பலவந்தமாகப் பிடித்துச் சென்றனர் .அதன் பின்னர் அவரைப் பற்றிய தொடர்பு எதுவும் கிடைக்கவில்லை என்று தனது சாட்சியத்தில் அவர் குறிப்பிட்டார்.

இதன் போது ஆணைக்குழுவினர், தற்போது எங்கு இருக்கின்றீர்கள், உங்களுக்கு எவ்வாறான உதவிகள் கிடைத்தன, இப்போது வாழ்வாதாரத்துக்காக என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேள்வியெழுப்பினர்.

இதற்கு, நான் வீட்டுத் தோட்டம் செய்துகொண்டிருக்கிறேன். அதன்மூலம்கிடைக்கும் அன்றாட வருமானத்தை வைத்தே வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றேன் என்று பதிலளித்தார் அந்த தாய்.

இதன் போது ஆணைக்குழுவினர், உங்களுக்கு வீட்டுத் தோட்டத்தை இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு வேண்டிய தொழில் உபகரணங்கள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கின்றோம் என்று தெரிவித்தனர்.

இதேவேளை- நேற்று சாட்சியமளித்த மற்றுமொரு பெண், தனது பிள்ளை 2009 ஆம் ஆண்டுமே 15 ஆம் திகதி முதல் காணாமற் போய்விட்டார் என்று தெரிவித்தார். அவர் எவ்வாறு காணாமற் போனார் என்று ஆணைக்குழுவினர் கேள்வியெழுப்ப, 'எங்கடயாக்கள் வந்து பிடித்துச் சென்றனர்' என்று பதிலளித்தார். இதன் போது ஆணைக்குழுவினர், 'எங்கடயாக்கள் என்று யாரைச் சொல்கின்றீர்கள்' என மீளவும் கேள்வியெழுப்ப, 'தமிழீழ விடுதலைப் புலிகள்தான் எங்கடயாக்கள்' என்று பதிலளித்தார். (ஐ-5)

## வல்லப்பட்டை

தையும் கைப்பற்றியிருந்த னர். கைது செய்யப்பட்ட எட்டுப் பேரும் ஹற்றன் நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார். இவர்கள் பயன்படுத்திய கெப் ரக வாகனத்தை தொடர்ந்தும் பொலிஸ் கட்டுப்பாட்டில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் நோர்வூட் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஐ-10)

## அழைக்கப்பட்டோரில்

மீண்டும் வேண்டுகோள் விடுத்தால், அவர்கள் சாட்சியமளிக்க அழைக்கப்படுவார்கள் - என்றார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் கடந்த 4 நாள்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றன. புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் கடந்த சனி, ஞாயிறு தினங்களும், கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் நேற்றுமுன்தினமும் நேற்றும் இடம்பெற்றன.

முதல் நாள் 61 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். எனினும் 25 பேரே சாட்சியமளித்தனர். இரண்டாம் நாள் 59 பேர் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 29 பேரே சாட்சியமளித்தனர். மூன்றாம் நாள் 60 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 45 பேரும், நேற்றைய நான்காம் நாள் அமர்வுக்கு 50 பேர் அழைக்கப்பட்டிருந்த நிலையில் 30 பேரும் சாட்சியமளித்துள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினரின் அச்சுறுத்தல் நடவடிக்கை காரணமாகவே பலர் சாட்சியமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. முதல் நாள் அமர்வில், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரின் அச்சுறுத்தல் தொடர்பில் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், ஆணைக்குழுவின் நான்கு நாள் அமர்வுகளிலும் முழு நேரமாகப் பங்கெடுத்திருந்தார். அத்துடன் நேற்றைய இறுதி நாளில் மாகாணசபை உறுப்பினரானதிருமதி அனந்தி. சசிதரன் சிறிது நேரம் பங்கெடுத்திருந்ததை அவதானிக்க முடிந்தது. (ஐ-5)

## துப்பாக்கியால்

வழக்கு முடிவுரைக்காக நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டது. நேற்று வழக்கின் முடிவுரையை நீதிவான் அறிவித்தார். அதன் படி சாட்சியங்களின் வாக்குமூலங்கள் மற்றும் சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கை என்பனவற்றின் அடிப்படையில் றெக்ஷயன் துப்பாக்கியால் சுடப்பட்டதனால் மூளையில் பாதிப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என்று முடிவுரை செய்யப்பட்டது.

தவிர மேலதிக நடவடிக்கைகளைத் தொடருமாறும் வழக்குத் தொடுநர்களான குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாருக்கு நீதிமன்று அறிவித்தது. அத்துடன் கொலைச் சந்தேகநபர்கள் மூவருக்கும் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயன் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைச்சுட்டுக்கொலைசெய்த குற்றச்சாட்டில் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடமாகாணசபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் (கமல்) கடந்த டிசம்பர் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அதற்கு முதல்நாள் வேலணையில் வசித்து வந்த லண்டன் யசிந்தன் மற்றும் றெக்ஷயனின் மனைவியான அனித்தா ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொலையின் பின்னர் கமல் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, கட்சியிலிருந்தும் விலக்கப்பட்டு பின்னர் உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக்கப்பட்டார்.

கமல் மற்றும் அனித்தா ஆகியோர் சார்பாக யாழ்.மேல் நீதிமன்றில் பிணைவிண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## அரியாலை

இதன் போது ஆணைக்குழுவினர், உங்கள் கணவர் கடத்தப்பட்ட பகுதியை, அந்தக் காலப் பகுதியில் நிர்வாகம் செய்து கொண்டிருந்தது இராணுவமா?, தமிழீழ விடுதலைப் புலிகளா? என்று கேள்வியெழுப்ப, அந்தப் பகுதியை ஈ.பி.டி.பியினரே கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்று பதிலளித்தார்.

**சகோதரன் சரணடைந்ததாக இதயவீணை ஒலிபரப்பியது**

மற்றொரு பெண் தனது சகோதரர் காணாமற் போனமை தொடர்பில் சாட்சியமளித்தார். தனது சகோதரன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர் என்றும் அவர் 29 ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் 2008 ஆம் ஆண்டு முதல் காணாமற் போய் விட்டார் என்றும் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள், அவர் மன்னார் சண்டைக்குச் சென்றதாகவும் அதன் பின்னர் காணவில்லை என்று எங்களிடம் தெரிவித்தனர்.

ஆனால் 24 ஆம் திகதி நவம்பர் மாதம் 2008 ஆம் ஆண்டு இதயவீணையில் ஒலிபரப்பான செய்தியில், எனது சகோதரர், மன்னார் பகுதியில் இடம்பெற்ற சண்டையில் இராணுவத்தினரிடம் சரணடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் போது ஆணைக்குழுவினர், நீங்கள் குறித்த ஊடக நிறுவனத்துக்குச் சென்று யார் செய்தி வழங்கினார்கள் என்று அறிந்தீர்களா என்று கேட்ட போது, நான் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு விசாரித்தேன். இதன் போது அவர்கள், இராணுவத்தினர் வழங்கிய தகவலையே தாங்கள் ஒலி பரப்பினோம் என்று தெரிவித்தனர். எனவே எனது சகோதரர் இராணுவத்தினரின் பொறுப்பிலேயே இருக்க வேண்டும். அவரை எப்படியாவது மீட்டுத் தாருங்கள் என்று அவர் கோரினார். (ஐ-5)

## ஆணைக்குழு


விசாரணை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம.

முல்லைத்தீவில் கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்ற அமர்வின் முடிவில், கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நாம் தற்போதுதான் விசாரணைகளை மேற்கொண்டு இருக்கின்றோம். இன்னமும் விசாரணைகள் முடிவுறவில்லை. மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் விரைவில் கையளிக்கவுள்ளோம். இந்த அறிக்கையில் என்ன விடயங்களை உள்ளடக்கப் போகின்றோம் என்பதை தெரிவிக்க முடியாது. எமது அறிக்கை பகிரங்கப்படுத்தப்படாது. அந்த அறிக்கை தனித்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்.

எமது ஆணைக்குழுவின் விசாரணைகள் ஆரம்பிப்பதற்கு முன்னரே, காணாமற்போனோர் தொடர்பில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். அவர்கள் தற்போதும் தமது விசாரணைகளை முன்னெடுக்கின்றனர். அவர்கள் தனித்து அவர்களது விசாரணைகளைச் செய்கின்றனர். அதற்கும் எமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.

போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் முல்லைத்தீவு மக்கள். எனவேதான் அவர்களிடம் நாம் சில விசேட கேள்விகளைக் கேட்கின்றோம். குறிப்பாக அவர்கள் இந்தப் பிரதேசத்தில் அமைதியான முறையில் இருக்கின்றார்களா என்பதை அறியவே, இராணுவத்தினரின் இப்போதைய இருப்புத் தொடர்பில் கேள்விகளைக் கேட்கின்றோம்" - என்று அவர் மேலும் அங்கு தெரிவித்துள்ளார். (ற-5)



# நூலிழையில் உயிர் தப்பிய கதிர்காம யாத்திரிகர்கள்

கொழும்பு, ஜூலை 9

கதிர்காமத்தில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று பெரிய விபத்து ஒன்றிலிருந்து தப்பியுள்ளது.

நேற்று முன்தினம் 50 யாத்தி ரிகர்களுடன் பயணித்த தனியார் பஸ் ஒன்று சியம்பலாந் துவ ஹெடஓயா' பாலத்தில் விபத்துக்குள்ளானது.

பாலத்தில் அமைக்கப் பட்டி ருந்த பாதுகாப்பு வேலியில் மோதிய பஸ் மேற்கொண்டு நகராது தரித்து நின்றதால் பெரிய விபத்தும், உயிர்ச் சேதங்களும் தடுக்கப் பட்டுள்ளன. பஸ்ஸில் பயணித்த எவருக் கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# இலங்கை அகதிகள் 153 பேரும் ஆஸி. கடலில் மீட்கப்படவில்லை

## அந்நாட்டு அரசு நீதிமன்றுக்கு விளக்கம்

சிட்னி, ஜூலை 9

இலங்கை புகலிடக்கோரிக் கையாளர்கள் 153 பேரும் ஆஸ்திரேலியக் கடற்பரப்புக் குள் நுழைவதற்கு முன்ப தாகவே மீட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளது ஆஸ்திரேலிய அரசு. புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கு சிட்னி நீதிமன்று இடைக்காலத் தடைவிதித்துள்ள நிலையிலேயே, இவ்வாறு ஆஸ்திரேலிய அரசு நீதிமன்றத்துக்கு விளக்கமளித்துள்ளது.

ஆஸ்திரேலியக் கடற்பரப்புக்குள் நுழைவதற்கு முன்பதாக, ஆஸ்திரேலியக் கடற் பரப்பில் இருந்து 12 மைல் தொலை வில் வைத்தே புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்கப்பட்டனர். அதனால் அவர்களை நாடு கடத்த முடியும் என்றும் ஆஸ் திரேலிய அரசு மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# கண்காட்சி இன்று

யாழ்ப்பாணம்,ஜூலை9

யாழ்ப்பாணம் நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் 'கண் காட்சி-2014' இன்று ஆரம்பமாகவுள்ளது.

காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதன் ஆரம்பநிகழ்வுகள் பாடசாலை அதிபர் ரி.ரவீந்திரநாதன் தலைமை யில் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



வீடமைப்பு, பொறியியல் மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலை வருமான விமல் வீரவன்ஸவுக்கும், கோட்டே ஸ்ரீ நாக விஹாரை மாதுலுவாவே சோபித தேரருக்கும் இடை யிலான சந்திப்பு, நேற்று கோட்டையிலுள்ள தேசிய முன் னணியின் காரியாலயத்தில் நடைபெற்றது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கு வதற்குத் தான் தயார் என்று மாதுலுவாவே சோபித தேரர் அறிவித்திருக்கும் நிலையிலேயே இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. (வ)

## தொடர்ச்சிகள்

### எமது

றுச் சாட்சியமளித்த மூவர்.

காணாமற் போனோர் தொடர் பில் விசாரணை மேற்கொள் ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் முல்லைத்தீவு அமர் வின், இறுதி நாள் அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை கரைதுறை பற்று பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்றது.

விவேகானந்தன் ஜெயலிங் கேஸ்வரி என்ற தயார் அமர் வில் சாட்சியமளிக்கையில்,

"எனது 16 வயதான மகளை 2009 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆம்திகதி முதல் காணவில்லை. நாங்கள் இடம்பெயர்ந்து செல்லும் போது, எனது பிள்ளையை முள்ளிவாய்க்காலில் கண்டேன். அப்போது அவரது தொடையில் ஷெல் தாக்குதலுக்கு உட்பட்டி ருந்தார். அவரை இராணுவத் தினர் கடற்கரைப் பக்கமாக ஏற்றிச் செல்வதை நான் நேரில் கண்டேன்.

நான் அவருக்கு அருகில் செல் வதற்கிடையே அவரை இராணு வத்தினர் கொண்டு சென்றனர். எனது மகள் எனக்கு கை காட் டினார். அதன் பின்னர் அவரை நான் காணவில்லை" என்று தெரிவித்தார்.

ஜெயராசா விஜயலட்சுமி என்ப வர் சாட்சியமளிக்கையில்,

"எனது மகன் சந்திரரூபன் தமி ழீழ விடுதலைப் புலிகளால் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி கட்டாய ஆள்சேர்ப்பில் கொண்டு செல்லப் பட்டார். அவர் 21 ஆம் திகதியே தப்பி எங்களிடம் வந்து விட் டார்.

நாங்கள் குடும்பத்துடன் ஓமந் தைக்கு அன்றைய தினம் வந் தோம். அப்போது ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி யில் வைத்து இராணுவத்தினர் எங்களைப் பிரித்தெடுத்தனர். ஒரு நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தா லும் அவர்களும் தங்களுடன் வர வேண்டும் என்று சொல்லி எனது பிள்ளையை இராணு வத்தினர் கொண்டு சென்றனர். அதன் பின்னர் நான் எனது பிள்ளையைக் காணவில்லை" என்று தெரிவித்தார்.

முள்ளியவளையைச் சேர்ந்த திருமதி சர்மிலா முகுந்தன் என் பவர் சாட்சியமளிக்கையில்,

"39 வயதான எனது கணவர் முள்ளிவாய்க்காலில் இடம் பெற்ற ஷெல் தாக்குதலில்' காயப் பட்டிருந்தார். காயத்துடன் இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வட்டுவாகல் பாலத்தினூடாக வந்தோம். 17 ஆம் திகதி மே மாதம் 2009 ஆம் ஆண்டு வட்டுவாகல் பாலத் தில் அமைந்துள்ள இராணுவச் சோத னைச் சாவடியில் வைத்து எனது கண வரை இராணுவத்தினர் பொறுப் பேற்றனர்.

அவரை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லவுள்ளதாகவும், பின்னர் முகாமுக்கு கொண்டு வருவதாக வும் தெரிவித்தனர். அதனை நம்பி நான் இராணுவத்தினரிடம் ஒப்படைத்தேன். அவரை இராணுவத் தினரின் பஸ்ஸில் ஏற் றிச் செல்வதை நேரில் கண் டேன்"

என்று சாட்சியமளித்தார். (ற-5)

### மருத்துவர்

அந்த விவரங்கள் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

வடக்கு, கிழக்கு மாகாணங் களில் நிலவும் மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய, அந்தத் துறைகளில் நிபுணத் துவம் கொண்டவர்களை இந் தியா தனது செலவில் இரு ஆண்டுகளுக்கு வடக்கு, கிழக் கில் சேவை செய்ய அனுப்பி வைக்க வேண்டும் என்றும், அதற்குப் பொருத்தமான அனு மதியை இலங்கை மற்றும் இந் திய அரசுகள் வழங்கவேண் டும் என்றும் வடக்கு மாகாண சபையின் மே மாத அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட் டிருந்தது. அதன்பிரதி இங் குள்ள இந்தியத் துணைத் தூத ரகத்துக்கும் அனுப்பி வைக்கப் பட்டிருந்தது.

அதையடுத்தே அதுகுறித்த விவரங்களைத் தற்போது இந் தியத் துணைத் தூதரகம் கோரி யுள்ளது. அதுகுறித்துக் கருத் துத் தெரிவித்த வடமாகாண சுகாதார அமைச்சர்,

"தேவையான ஆவணங்கள் அனைத்தும் விரைவில் வழங் கப்படும். அது தொடர்பில் சில ருடன் கலந்துரையாடவுள்ள ளோம்.

இலங்கையில் தனியார் மருத் துவமனைகளில் இந்திய மருத் துவர்கள் பலர் இன்னும் பணி புரிந்து வருகின்றனர். உரிய முறைப்படி அதை முன்னெடுப் போம்"- என்று தெரிவித்துள் ளார். (ற-4)

### 13 இற்கு

கொத்தாவில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகவிய லாளர்மாநாட்டில்கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

சந்திப்பின்போது, அளுத்கம கலவரத்தில் கடும்போக்குடைய பௌத்த அமைப்பான பொதுபலசேனா செயற் பட்ட விதம் குறித்து ஊடக வியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு,

"அவ்வமைப்பினர் குறித்து எந்த கருத்துத் தெரிவித்தாலும் எம்மை தேசத்துரோகிகள் என முத்திரை குத்தி விடுகின்றனர். ஆனால், எதிர்க்கட்சியான நாம் அச்சம்பவத்தில் என்ன நிலைப் பாட்டில் இருக்கின்றோமோ, அதையே சர்வதேசமும் வலி யுறுத்துகின்றது" எனப் பதில ளித்தார்.

அதேவேளை தெரிவுக்குழு குறித்து கேள்வி எழுப்பப்பட்ட போது,

"அதிகாரப்பகிர்வு' விடயத்தில் அரசிடம் ஒரு தெளிவான முடிவு இன்னும் எட்டப்படவில்லை. அத்துடன், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பா லான தீர்வுத்திட்டத்திற்கு அரசு தயாராகுமானால் எதிர்க்கட்சி யான நாம் நிச்சயமாக தெரி வுக்குழுவில் பங்கேற்போம். அதைவிடுத்து தற்போது இதில் பங்கேற்பதில் எந்தவித பயனு மில்லை. அதுமட்டுமல்லாது, இதுவரையிலும் தெரிவுக்கு ழுவில் பங்கேற்க அழைத்து அரச தரப்பிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு 'மிஸ்ட் கோலே'னும் வரவில்லை"- என்று தெரிவித்தார். (ற-சி)

### அல் -

அளுத்கம வன் முறை யில் கொல்லப் பட்டவர் களின் எண் ணிக்கை தொடர்பாக அல் - ஜசீரா செய்தியாளர் வெளியிட்ட செய்திக்கு விளக்கம் கோரும் வகையிலும், தனிப்பட்ட முறையில் அவர் சமூக வலைத் தளத்தில் பதிவு செய்த விடயங்கள் குறித் தும் விசாரணை நடத்தப்பட் டது என்று இலங்கை பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

செய்தி பெறப்பட்ட முறை குறித் தும் அவரிடம் விசாரிக்கப்பட்டது என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ற)

### மகாநாயக்க

றும் சிங்கள பௌத்த மக்கள் எதிர் நோக்கும் சவால்கள், அச்சுறுத் தல்கள் தொடர்பாகவும் இதன் போது எடுத்துக்கூறவுள்ளோம். மாநாயக்க தேரர்களை சந்தித்த பின்னர் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து பேச்சு நடத்த எதிர்பார்த்துள்ளோம்' எனத் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

### நவாலி

தலைமையில் மாலை 5.30 மணிக்கும், நவாலி ஸ்ரீ கதிர் காமமுருகன்ஆலயத்தில்மாலை 5 மணிக்கும் நினைவு தின விசேட பூசைகள் நடைபெற வுள்ளன. (ஐ-10)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கந்தசாமி- சுட்டி செல்லத்துரை

(மாவைக் கந்தன் ஓதுவார்)



சாயுடை மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் கந்தன் நீர்வேலி மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி கந்தசாமி (சுட்டி செல்லத்துரை) நேற்று (08.07.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுழிபுரம் மீனாட்சியின் அன்புக் கணவரும், கருனேசனின் (ஆசிரியர் கரந்தன், இராமுப்பிள்ளை மகா வித்தியாலயம்) அன்புத் தந்தையும் கமலாம்பிகையின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.07.2014) புதன்கிழமை காலை. 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"சிவநாகபூசணி அம்மன் கோவில்"
கரந்தன் நீர்வேலி மேற்கு.

**தகவல்:**
மகன் - கருனேசன்

## மரண அறிவித்தல்



### இராசையா நவரத்தினராஜா

அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட இராசையா நவரத்தினராஜா கடந்த (05.07.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் பாலசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் பரமேஸ் வரியின் அன்புக் கணவரும், சோபனா, பிரதீபா (நியூஸி லண்ட்),மதுரா ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகலிங்கம் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,அச்சுவேலி), ஜெயசீலன் (நியூஸிலண்ட்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.07.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தனகக்கிரியைக்காக சிறுப்பிட்டி கிந்துசிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி வீதி, சிறுப்பிட்டி.
தொ.பே. 0213002553

**தகவல்**: கோ. யோகலிங்கம் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்- அச்சுவேலி)

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

One - AB - Super

2016 A/L

தொழில் நுட்பப் பிரிவு

(Technical Stream)

- July 10 ஆம் திகதி ஆரம்பமாகின்றது
- புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது
- மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**அதிபர்**

## வான் விற்பனைக்கு

Toyata - ஹயஸ் 50-XXXX தொடர் இலக்கமுடைய வான் விற்ப னைக்கு உண்டு.

தொடர்புக்கு:- 077 3175098

## வேலைவாய்ப்பு

பிரபல முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு வடமராட்சியில் கடமையாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:** க.பொ.த.சாதாரணதரத்தில் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி.

**வயதெல்லை:** 23 தொடக்கம் 55 வரை (ஆண், பெண் இருபாலாரும்).

**நேர்முகத்தேர்வு:** 12.07.2014 சனிக்கிழமை 09.30 தொடக்கம் 12.30 வரை

(44494)
(12.3.6)

மேலதிக விவரங்களுக்கு: 076 729 9919

உதயன் 09.07.2014

# உலக விவசாய நிதியம் அமைக்க நடவடிக்கை

## ஜனாதிபதி மஹிந்தவின் வேண்டுகோளை ஏற்றது உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம்

கொழும்பு, ஜூலை 9

உலக விவசாய நிதியம் உருவாக்கப்படவேண்டும் என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம் அதனை அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.



கடந்த 2011ஆம் ஆண்டு இலங் கையில் நடத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு-போஷணை மற்றும் பொருளாதார அபிவி ருத்தி என்ற தலைப்பிலான மாநாட்டின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன் வைத்த கோரிக்கையையே தற்போது நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 7 - 11 ஆம் திகதிகளில் ரஷ்யாவின் பீட்டர்ஸ்பர்க் நகரில் நடைபெற்ற உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் 7ஆவது அமர்வில் மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத் னவால் இக்கோரிக்கை மீண்டும் முன் வைக்கப்பட்டது. இதனை உலக நீர்வாழ் உயிரின அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு திட்டம் ஏற்றுக் கொண்டது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன முன்வைத்த இக் கோரிக்கையின் அடுத்த கட்டமாக இவ்வருடம் 2014 ஜூன் மாதம் 9-13 ஆம் திகதிகளில் ரோமில் நடைபெற்ற ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்பின் மீன்பிடி தொடர்பான அமைப்பின் 31 ஆவது மாநாட்டில் இது உள் வாங்கப்பட்டதுடன் இதன் போது அந்த நிதியத்துக்கு மஹிந்த ராஜபக்ஷ உலக நீர்வாழ் உயிரின உற்பத்தி நிதியம் என்று பெயரிட அனுமதி கிடைத்துள்ளது.

இதுதொடர்பாக உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் அங்கத்துவ நாடுகள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளன. மேலும் நீர்வாழ் உயிரின உற்பத்திக்கு இந் நிதியத்தினூடாக ஒத்துழைப்புத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் அங் கத்துவ நாடுகள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன.

உலக நீர்வாழ் உயிரின உற்பத்தியை மேம்படுத்துவதற்கான ஆரம்பமாக இது பிர தான இடம் வகிப்பதுடன் இது தொடர்பான நிதியைப் பெற்றுக் கொடுப்ப தற்கான உப குழு ஒன்றை அமைப்பதற்கு ஆரம்பகட்டமாக இலங்கை 100, 000 அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

இதேவேளை மீன்பிடி விவகாரம் தொடர்பாக குழு. 2015 மார்ச் மாதம் நடத்தப்படவுள்ள விளைச்சலினூடாக மேற் கொள் ளப்படும் மீன்பிடி நடவடிக்கை என்ற விடயம் தொடர்பாக உரை நிகழ்த்தவுள்ளதாக 31 ஆவது அமர்வில் உறுதியளித்துள்ளது. மேலும் அடுத்த ஆண்டு நடுப் பகுதியில்குறித்தஅமைப்பின் பணிப்பாளர் நாயகம் இலங்கை வரவுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (வ)



தெல்லிப்பழை ஸ்ரீ துரக்கா தேவி ஆலயத்தின் முன்னால் தலைவர் கலாநிதி தங்கம்மா அப்பா குட்டியின் ஆறாவது குருபூசை தினம் நேற்று அன்ன பூரணி மண்டபத்தில் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தங்கம்மா அப்பாக்குட்டியின் உருவச் சிலைக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் ரி.வேல்நம்பி மலர்மாலை அணிவிப்பதை காணலாம். (ஐ-21)


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

எந்தவொரு குழந்தையும் இலக்கணம் படித்துவிட்டு மொழியைப்பேசுவதில்லை!
மற்றவர்கள் பேசுவதை அவதானித்தே தானும் பேசக்கற்றுக்கொள்கிறது!

உரையாடற்பயிற்சியின் மூலம் ஆங்கிலத்தைப் பழக்கப்படுத்தும் SAAMSON இன் புதிய பயிற்சிநெறியில் அரச தனியார் ஊழியர்கள், இளைஞர் யுவதிகள் தொழில் புரிவோர் மற்றும் வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 12.07.2014 சனிக்கிழமை
1.காலை 08.00-10.00 3.மு.ப 01.00-03.00
2.காலை 10.00-12.00 4.மாலை 03.00-05.00

அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் இப்பயிற்சியில் இணைவதன் மூலம் மூன்றே மாதங்களில் தமிழ்போல சரளமாக ஆங்கிலம் பேச முடியும்!
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

SAAMSON Language School
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313



ANANDA HOMES AND CONSTRUCTION சாவகச்சேரி

உங்கள் இல்லத்தைத் தரமாக அமைத்துத் தர
1. சாதாரண வீடு 16 லட்சத்திலிருந்து
(3 அறை,கோல், குசினி உட்பட)
2. மாடி வீடு - 35 லட்சத்திலிருந்து
(4 அறை, கோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை 180, 000/=
4. பழைய வீடு புனரமைப்பு செய்தல்



குறிப்பு: 1. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்
2.வங்கிக் கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.
அழையுங்கள்: ஆனந்தன் T.P. 078 6155929, 0213205939



பிறந்த நாள் வாழ்த்து



அன்பின் சிகரம் எங்கள் அங்கஜன் அண்ணாவுக்கு
எங்கள் பிறந்த நாள் நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.
இன்று பிறந்த நாளைக் கொண்டாடும் அங்கஜன் அண்ணா
பல்லாண்டு காலம் வாழவும்,தங்கள் பணி சிறக்கவும்
இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.
தொடரட்டும் உங்கள் பணி பின் தொடரும் எங்கள் அணி
வாழ்த்துவோர்:
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்
வடமராட்சி இளைஞர் அணி


# டிறிபேர்க்கில் நாளை ஆங்கில தின நிகழ்வு

தென்மராட்சி, ஜூலை 9

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மாணவர்களின் ஆங்கில தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் கே. ஸ்ரீகணேசனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரும் கலந்து கொள்வர். (ஒ-9)





BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Quick Learning Course 1 1/2 Months
(Spoken English with Grammar)

Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935

கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

BatchI : 09-07-2014 @09.00 & 11.00 am
BatchII : 11-07-2014 @09.00 & 11.00 am
BatchIII : 12-08-2014 @09.00am & 03.00 pm



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



ALLIANCE FRANÇAISE DE JAFFNA
THE ONLY OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTRE
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கீர்ப்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது. யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம். விரைவான பேச்சு ஆற்றல், STANDARD PRONUNCIATION.

வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) AF இல் படித்தே பிரான்ஸ் செல்கிறார்கள். குறிப்பு பிரான்ஸில் பிரெஞ் கற்பதற்கு AF இன் CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2 = ILTES : AF இன் கிளைகளில் மட்டுமே எழுத முடியும்) மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.

இன்றே பதிவுசெய்யுங்கள்... புதிய வகுப்புகள் மிக விரைவில்...
வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்...
61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
கச்சேரி → ஆலயம் ✝ → AF / ஆரியகுளம் → ஸ்ரான்லிறோட், நல்லூர் றோட் → AF


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09 .07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மணிகளுக்குச் சிறகுகள் உண்டு. அவை காலத்தை ஏற்படுத்தியவரிடம் சென்று, நாம் அவற்றை எப்படி உபயோகித்தோம் என்பதைத் தெரிவிக்கும். - மில்

புதன் பொய்கை

உதயன் ஜூலை 09 2014 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

# ஏன் இந்த குரூர உணர்வு?



ராஜராஜன்

சமீப காலமாக உலகளாவிய ரீதியில் பார்க்கும்போது மனிதர்களின் மனங்களில் குரூர உணர்வுகள் அதிகரித்துச் செல்வதைக் காண முடிகின்றது. இதனை அவர்கள் பல்வேறு வகையிலும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

தனக்கு நூடில்ஸ் வாங்கித் தரவில்லை என்பதற்காக ஒருவரைக் குரூரமாகக் கொலை செய்து அவரது மார்பைப் பிளந்து இதயத்தை வெளியே எடுத்து அதனைக் கடித்துத் தின்றான் ஒரு சீன இளைஞன் என்ற செய்தியை அறிந்தபோது இப்படியும் ஒரு குரூர வெறியா என்ற கேள்வியே எமது மனங்களைக் குடைந்து நிற்கின்றது. தொலைக்காட்சி பார்ப்பதற்கு இடையூறு விளைவித்த தான்பெற்ற மகனையே தந்தையொருவன் அடித்துக் கொன்றான் என்பதை ஏற்பதற்கு எமது மனம் மறுக்கின்றது. எமது நாட்டில் கூட நள்ளிரவு வேளையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரைத் துடிக்கத் துடிக்க வெட்டிச் சாய்த்த பாதகன் ஒருவனின் கொடிய செயல் இன்னமும் எம்மைப் பாதித்து வருகின்றது. இவையெல்லாம் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போன்ற உதாரணங்கள். தினமும் இது போன்ற பல சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. மனிதர்களின் மனங்களில் ஏற்பட்ட விரும்பத்தகாத மாற்றங்களே இவற்றுக்கான காரணமென உளநல மருத்துவர்கள் கூறுகின்றனர்.

வாழ்க்கையில் ஏற்படுகின்ற ஏமாற்றம், வெறுப்பு, கோபம் ஆகியவை மனத்தைப் பொறுத்த வரையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன. இவற்றுடன் பொருளாதாரக் கஷ்டங்களும் சேர்ந்து விட மோசமானதொரு நிலை ஏற்பட்டு விடுகின்றது. இதன் விளைவுகள் குரூரமான செயல்களுக்கு வழிவகுக்கின்றன.

கடந்த நூற்றாண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதியை எடுத்துக் கொண்டால் அன்று வாழ்ந்த மனிதர்கள் மன அமைதி நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

மனதில் ஏதாவது குழப்பங்கள் ஏற்பட்டாலும் அவற்றை ஆற்றுகைப்படுத்துவதற்குப் போதிய அவகாசமும் அன்று காணப்பட்டது. உணவு மட்டுமே முக்கிய தேவையாக இருந்ததால் மனதைத் தேவையில்லாமல் குழப்ப வேண்டிய அவசியமும் அன்றிருக்கவில்லை. மேலும் கடவுள் மீதான அதீத நம்பிக்கையும், பயமும் குற்றங்கள் புரிவதிலிருந்து அவர்களை விலக்கி வைத்தன. நாகரிக முன்னேற்றமற்ற வாழ்க்கையை அன்றைய மனிதர்கள் வாழ்ந்தாலும் வஞ்சகமும், சூதும் அவர்களிடம் காணப்படவில்லை.

அவற்றை விதைப்பதற்கும் ஆள்கள் இருக்கவில்லை. தமது மனதுக்கு நியாயமாகத் தென்பட்டதை அவர்கள் நிறைவேற்றி வைத்தார்கள். கள்ளங்கபடமற்ற வெருளித்தனம் அவர்களின் செயல்களில் நிறைந்திருந்தது.

ஆனால் நாகரிகம் வளர்ந்து மாற்றங்கள் ஏற்பட்டபோது மனிதனும் மாறத் தொடங்கிவிட்டான்.

தற்போது இந்து ஆலயங்களில் மிருக பலி இடம்பெறுவது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் சூடுபிடித்துக் கொண்டிருக்கின்றன. இதனை நியாயப்படுத்தும் வகையில் ஒரு சாராரும், மறுக்கும் வகையில் ஒரு சாராரும் வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளனர். அமைச்சரொருவர் நேரடியாகக் களத்தில் இறங்கி மிருக பலியைத் தடை செய்யும் அளவுக்கு நிலைமை தீவிரம் பெற்றுள்ளது. ஆலயங்களில் மிருகபலி இடம்பெறுவது இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. அது எப்போதோ ஆரம்பித்துவிட்டது. ஆனால் அன்று இருந்த மனிதர்கள் கண்மூடித்தனமான வகையில் அர்த்தம் புரியாத நிலையில் கடவுளை வணங்கினார். காணிக்கையும் செலுத்தினர். இதற்கு அப்பாவி மிருகங்கள் பலிக்கடாவாக மாற்றப்பட்டன்று. மாட்டின் தலையை ஒரே வெட்டில் வெட்டிச் சாய்ப்பது கடினம் என்பதை உணர்ந்ததாலோ என்னவோ ஆடுகள் பலி கொடுக்கப்பட்டன. இன்று நாம் நாகரிகமானதொரு சமுதாயத்தில் வாழ்வதாகக் கூறிக் கொள்கின்றோம். அதற்குஏற்றாற்போன்று எமது செயல்களும் அமைந்திருக்க வேண்டும். ஆலயத்தின் முன்பாக ஆடுகளின் தலைகள் கொய்யப்பட்ட உடம்புகள் இரத்த வெள்ளத்தில் கிடந்து துடிப்பதை ரசிக்கும் நாம், மனித இரத்தத்தைக் கண்டு அஞ்சவா போகின்றோம்? இப்போதே வாள்களால் விளையாடிக் கொண்டிருக்கும் எமது ஆள்கள் ஆலயங்களில் இடம்பெறும் சம்பவங்களைப் பார்த்த பின்னர் என்ன கோலத்தில் வரப் போகின்றார்களோ என்பது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். எமது மனதின் எங்கோ ஒரு மூலையில் ஒளிந்து கொண்டிருக்கும் குரூரமான வக்கிரம் நிறைந்த சிந்தனைகள் களையப்பட வேண்டும். ஒரு சிறு எறும்பு கூட எம்மால் கொல்லப்படுவது தவறு என்ற எண்ணம் எமது மனதில் எழும் போதுதான் இவை முற்றாகக் களையப்பட்டுவிட்டதாகக் கொள்ள முடியும்.

ஆலயங்களுக்குச் சென்று ஆண்டவனை வணங்குவதைக் கூட ஒரு சம்பிரதாயமாகக் கொள்ளும் நாம் இதைவிடுத்து எமது சாபங்களுக்கு விமோசனம் தேடும் இடங்களாக அவற்றை மாற்றிக் கொள்ள வேண்டும். அதைத்தா, இதைத்தா என ஆண்டவனிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காது, எமது பாவங்களைக் களைந்து எம்மைத் தூய்மைப்படுத்துமாறு இரந்து கேட்டுக்கொள்ள வேண்டும். எமது நாயன்மார்கள் கூட பாவங்களைச் செய்துவிட்டு பாவ விமோசனம் பெற்றவர்கள் தாம். அவர்கள் இன்றும்கூட எம்மால் வணங்கப்பட்டு வருகின்றனர்.

இன்றைய இளைஞர்களில் சிலர் தமது மனம்போன போக்கில் வாழத் துடிக்கின்றனர். பெற்றோர், குடும்பம், சமுதாயம் என்பன இவர்களின் கண்களுக்குத் தெரிவதில்லை. இவற்றுக்கு அஞ்சும் நிலையும் இவர்களிடம் இல்லை. கெட்ட சகவாசம் இவர்களைக் கெட்டவர்களாகவே மாற்றி விடுகின்றது. மனநிலை பாதிக்கப்பட்டவர்களைப் போன்று நடந்து கொள்ளும் இவர்கள் கொலை செய்வதற்குக் கூடத் தயங்குவதில்லை. அண்மையில் கோண்டாவில் பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் யாவும் முற்றுமுழுதாக இளைஞர்களாலேயே நடத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாகப் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழக்கவும் வேறு சிலர் காயமடையவும் , சொத்துக்களுக்குப் பெரும் சேதங்கள் ஏற்படவும் வழியேற்பட்டன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இளைஞர்கள் பின்னால் ஏற்படப் போகும் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் செயற்பட்டதன் விளைவுகளை வேறு சிலர் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

எமது உடலை இயக்கி வைப்பது எமது மனம்என்பதால் எப்போதுமே அதனை அடக்கி வைத்துக்கொள்ளும் ஆற்றல் எம்மிடம் வேண்டும். மற்றவர்கள் பயந்தவன், வெகுளி என்ற பட்டங்களை எமக்குச் சூட்டினாலும் அதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. இனிமேல் இயலாது என்ற கட்டம் உருவாகும்போது மற்றவர்களுடன் மோதலில் ஈடுபடத்தீர்மானிக்கும் போது எமது வலிமை, எதிரியின் வலிமை, எமக்குத் துணைக்கு வருபவர்களின் வலிமை ஆகியவற்றைச் சரியாக எடை போட்டுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் பாதிக்கப்படப் போவது நாம்தான்.

என்னதான் இருந்தாலும் எமது மனதிலிருந்து குரூரமான எண்ணங்களை விலக்கி வைத்து அங்கு அமைதியை ஏற்படுத்திக் கொண்டால் வாழ்க்கை எப்போதுமே இனிமையைத் தரும்.



# இடது கைப்பழக்கத்துக்கு காரணம் என்ன தெரியுமா?

சில நாடுகளில் ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 13 ஆம் திகதி, இடது கைப் பழக்கமுள்ளவர்கள் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த நாளில் இடது கைப்பழக்கமுள்ளவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். எம்மில் அதிகமானோர் வலதுகைப் பழக்கமுள்ளவர்களாக இருக்கிறோம். இடது கைப் பழக்கமுடையோர் செயல்களைக் கண்டு வியக்கிறோம். உலக மக்களில் நூற்றுக்கு நான்கு பேர் இடது கைப் பழக்கமுள்ளோர்களாக இருக்கின்றார்கள் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

வலதுகைப் பழக்கம், இடதுகைப் பழக்கம் இவையெல்லாம் எதைப் பொறுத்து அமைகின்றன? மூளையைக் கட்டுப்படுத்தும் பகுதியைப் பொறுத்தே அமைகின்றன. இடதுகைப் பழக்கம் பல பிரபலங்களுக்கு இருந்திருக்கிறது.

மாவீரன் அலெக்ஸாண்டர், ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோ, லியனார்டோ டாவின்ஸி, விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்க்ளின், புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின், டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா, நடிகை மர்லின் மன்றோ, அமெரிக்க ஜனாதிபதி இருந்த ஜோர்ஜ் புஷ் - இப்படி ஒவ்வொரு துறையிலும் இடது கைப்பழக்கமுடையோர் இருந்திருக்கின்றனர்.

இந்தப் பட்டியலில் லியனாடோ டாவின்சி மேலும் ஒரு சிறப்புப் பெறுகிறார். அது என்ன சிறப்பு?

பொதுவாக வலக்கையால் கூட கண்ணாடிப் பிம்பம் போல எழுதுவது கடினம். ஆனால் டாவின்சியோ கண்ணாடிப் பிம்பம் போல இடது கையால் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தாராம்.

பொதுவாக எமது மூளையின் வலது பக்கம், உடலின் இடது பக்கத்துக்கும் மூளையின் இடதுபக்கம், உடலின் வலது பக்கத்துக்கும் சமிக்ஞைகளை அனுப்பிக் கட்டுப்படுத்துகின்றன. மூளைக்கும் உடலின் பக்கத்துக்கும் என்ன தொடர்பு?

மூளையின் ஒரு பகுதியில் உள்ள சில நரம்புகள் கழுத்துப் பகுதி வழியே கடந்து உடலின் எதிர் பாகத்தில் முடிவடையும். மூளையில் உள்ள இந்த நரம்புகள்தான் எமது கைப்பழக்கத்தை உண்டாக்குகின்றன என்பது ஒரு ஆச்சரியமான விடயமாக உள்ளது.


1648ஆம் ஆண்டு சர் தாமஸ் பிரவுன் என்பவர் எழுதிய வல்கர் எர்ரர்ஸ் (Vulgar Errors) என்ற நூலில் முதன்முதலாக இடக்கைப் பழக்கத்துக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பைப் பொது மக்களுக்குத் தெரிவித்தார்.

இடதுகைப் பழக்கம் பற்றிப் பலர் ஆய்வு செய்துள்ளனர். அன்னீட் (Anneet) என்பவர் செய்த ஆய்வின்படி இடது கைப் பழக்கமுள்ளோர்களை இரு வகையாகப் பிரித்தார். இடது கைப் பழக்கம் பரம்பரையாகத் தோன்றுகிறது என்றும் பரம்பரைக் காரணமில்லாமல் தனித்தும் தோன்றுகிறது என்றும் வகைப்படுத்தினார்.

மெக்கால் (Mchal) என்பவர் நடத்திய ஆய்வின்படி வலதுகைப் பழக்கமுடையோரின் மூளையின் சிறுகிளைகள், (Occipital Horns), பக்கவாட்டு இரத்தக் குழாய்கள் ஆகியவை, மூளையின் இடப்பக்கத்தில் இருந்தவற்றைக் காட்டிலும் ஐந்து மடங்கு நீளமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இடதுகைப் பழக்கமுடையோர்களுக்கு இந்த அமைப்பு நேர் மாறாக இருக்கிறதாம்.. நரம்புக் கோளாறுடைய குழந்தைகள் பெரும்பாலோர் இடதுகைப் பழக்கம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.


இடதுகைப் பழக்கமுள்ள குழந்தைகள் பெரும்பாலோர் பிறப்பு காலத்தில் டிரோமா (Birth Trauma) என்ற தாக்குதலுக்கு உட்படுவதாக பாகான் (Bakan) என்ற மருத்துவர் கூறுகிறார். இடது கைப்பழக்கமுடையோரை வலது கைப் பழக்கத்துக்கு மாற்றினால் சிலருக்குத் திடீர் என திக்கு வாய் ஏற்பட வாய்ப்பு உள்ளதாம். உதாரணம்: பிரிட்டனை ஆண்ட 6 ஆம் ஜோர்ஜ் மன்னர். பெரும்பாலான பொருள் கள் வலக்கைப் பழக்கமுடையோர் பயன்படுத்தக் கூடியனவாகவே தயாரிக்கப்படுகின்றன. ஆனால் சில வெளிநாடுகளில் கத்திரிக் கோல், கோல்ஃப் விளையாட்டு விளையாடப் பயன்படும் மட்டை போன்ற பொருள்கள் இடது கைப் பழக்கமுடையோர் பயன்படுத்த ஏதுவாகவும் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகின்றன.



**இடக் கைப்பழக்கமுடையோரை வலக் கைப் பழக்கத்துக்கு மாற்றினால் சிலருக்குத் திடீர் என திக்கு வாய் ஏற்பட வாய்ப்பு உள்ளதாம்.**

---

## மனித முகத்தில் ஒரு மீன்



மீன்கள் என்றால் உங்களுக்கு மிகவும் பிடிக்குமா? வர்ணங்களாக அழகழகான மீன்களை வாங்கி மீன் தொட்டியில் வளர்ப்பீர்கள் அல்லவா? அழகான மீன்கள் எப்படி உலகில் இருக்கின்றனவோ அதேபோல் சில விநோத மீன்களும் ஆழ்கடலில் உள்ளன. அதில் ஒன்றுதான் பிளாப் ஃபிஷ். மனித முகத்தில் ஒரு மீன் இருந்தால் எப்படியிருக்கும்? இந்த மீனினது முகமும் அப்படித்தான். அந்த மீனின் முகத்தில் உள்ள கண், நீண்ட மூக்கு, பொக்கை வாய் எல்லாம் மனித முகத்தையே ஞாபகப் படுத்துகின்றன. பார்ப்பதற்குக் கொஞ்சம் அருவருப்பாகவும் இது இருக்கும். அதனாலேயே இதை அசிங்கமான மீன் என்று அழைப்பவர்களும் உண்டு. ஆனால், இது விநோதமான மீன் என்கிறார்கள் ஆய்வாளர்கள். இந்த மீனை எங்கள் நாட்டு கடல் பகுதியில் காணவே முடியாது. ஆஸ்திரேலியா, டாஸ்மானியா, நியூசிலாந்து நாட்டுக் கடல் பகுதிகளில்தான் காண முடியும். இது ஒரு அடிஸ்கேல் அளவே இருக்கும். கடலில் மிக ஆழத்தில் அதாவது கிட்டத்தட்ட 600-1200 மீற்றர் அடிப்பரப்பிலேயே வாழ்கிறது இந்த மீன். உணவுக்காக இந்த மீன் இடத்தை விட்டு எங்கேயும் நகர்வதில்லை. இருக்கும் இடத்தைத் தேடி வரும் இரைகளைப் பிடித்து சாப்பிடும் அந்தப்பிராணி மீன். உலகில் உள்ள அரிய மீன் இனங்களின் பட்டியலில் இது சேர்க்கப்பட்டுள்ளது.



## பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் இப்படியானவர்களா?

சமகாலத்தில் இளம் வயதினர் மது அருந்துவதற்கு அடிமையாதல் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதற்கு வயதும் ஒரு காரணமாக அமைகின்றது. அதாவது 14 வயது உடைய ஒருவர் சாதராணமாக ஒரு கிளாஸ் வைனையேனும் சுவைப்பாராயின் அவர் தொடர்ச்சியாக மது வுக்கு அடிமையாகிவிடுவார் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கனடாவிலுள்ள வேமொன்ற் (Vermont) பல்கலைக் கழக பேரா சிரியரான மருத்துவர் கியூச் ஹரவன் (Dr Hugh Garavan) என்பர் நடத்திய ஆய்வின் அடிப்படையிலேயே இக்கருத்து வெளி யிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக பிரிட்டன், அயர்லாந்து, பிரான்ஸ், மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 14 வயதை எட்டிய சிறுவர்கள் 2,000 பேர் பயன்படுத்தப்பட்டுள்ளனர். இதன்போது 14 வயதுடைய ஒருவர் ஒரு கிளாஸ் வைனையேனும் ஒரு முறை சுவைப்பாராயின் அவர் தொடர்ச்சியாக குடிப்பழக்கத்திற்கு அடிமையாகும் சாத்தியம் 70 சதவீதம் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

CMYK

புதன்பொய்கை

# வாத்துக்களும் வெள்ளைக் குஞ்சும்



ஓர் ஊரில் இரண்டு வாத்துக்கள் வசித்து வந்தன. இரண்டும் ஒன்றுக்கொன்று மிகவும் அன்பு பாராட்டி அன்யோன்யமாக வாழ்ந்து வந்தன.

சிறிது காலம் கழித்து பெண் வாத்து முட்டையிட்டு அடைகாக்க ஆரம்பித்தது. இரு வாத்துக்களும் பொரிக்க இருக்கும் வாத்துக் குஞ்சுகளை எண்ணி மிகவும் மகிழ்ச்சி யுடன் இருந்தன.

உரிய வேளையில் ஆறு குஞ்சுகள் பொரித்தன. ஆனால் ஒரே ஒரு முட்டையிலிருந்து மட்டும் பொரிக்கவில்லை. கூட்டில் இருந்த ஏனைய முட்டைகளை விட பெரிய முட்டை அதுதான். இரு வாத்துக்களும் கவலையுடன் அந்த முட்டையைப் பார்த்து கொண்டிருந் தன. சிறிது நேரம் கழித்து முட்டையின் சிறு பகுதி உடைந்து உள்ளே இருந்து குஞ்சின் கால் மட்டும் வெளியே வந்தது.

இரு வாத்துக்களும் குழப்பத்துடன் பார்த்து கொண்டிருக்கும்போது அந்தக் குஞ்சு தட்டுத் தடுமாறி முட்டை ஓட்டுடன் நடக்க ஆரம்பித்தது. பின்னர் அருகில் இருந்த ஒரு கல்லில் மோதி முழு ஓடும் உடைய குஞ்சு சுதந்திரமாக வெளியே வந்தது.

அந்தக் குஞ்சைப் பார்த்த இரு வாத்துகளும் அதிர்ந்து போயின. ஏனென்றால் அது ஏனைய குஞ்சுகளை போல் அல்லமல் வெள்ளை நிறமாக காட்சியளித்தது. ஏனைய குஞ்சுகள் மஞ்சள் நிறத்தில் காட்சியளித்தன.

பொரித்த குஞ்சுகளில் ஒரு குஞ்சு மட்டும் வித்தியாசமாக இருப்பதைப் பார்த்த தந்தை வாத்துக்கு சந்தேகம் வந்து தாய் வாத்து டன் சண்டை போட ஆரம்பித்தது.

இதனால் கோபமுற்ற தாய் வாத்து கோபத்துடன் தந்தை வாத்தை கொத்தி விட்டு தன் குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு தனியே நடக்கத் தொடங்கியது.



நடப்பது புரியாமல் விழித்த வெள்ளைக் குஞ்சு குழப்பத்துடன் தந்தை அருகில் சென்றது. அது கோபத்துடன் நீ எனக்கு பிறந்த குஞ்சே இல்லை என்று விரட்டியடிக்க, பயந்து கொண்டே ஏனைய குஞ்சுகளுடன் தாய்க்குப் பின்னால் அது சென்றது.

தாய் வாத்து குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு தண்ணீரில் நீந்த இறங்கியது.

அதைத் தொடர்ந்து வெள்ளைக் குஞ்சும் இறங்கியது. சிறிது தூரம் சென்ற பின் ஏனைய குஞ்சுகள் தாயின் முதுகில் ஏறி பயணிக்க ஆரம்பித்தன, வெள்ளை குஞ்சும் தாய் வயற்றின் முதுகில் ஏற முயன்றது. அதைக் கண்ட தாய் வாத்து தன் வாலைச் சுழற்றி அதைக் கீழே தள்ளி விட்டது. மீண்டும் வெள்ளைக் குஞ்சு தாய் வாத்தின் முதுகில் ஏறிப் பயணித்தது.

கரையை வந்தடைந்ததும் வெள்ளைக் குஞ்சு இன்னமும் தன்னைத் தொடர்ந்து வருவதை அறிந்த தாய் வாத்து கோபத்துடன் நீ எனக்கு பிறந்த குஞ்சே இல்லை. இங்கே இருந்து சென்று விடு என்று விரட்டியடித்தது.

எங்கே போவது என்று தெரியாமல் குழப்பத்துடன் தவித்த வெள்ளைக் குஞ்சு மீண்டும் தாய் வாத்தின் பின்னால் போக முயற்சிக்க உடனே ஏனைய குஞ்சுகள் நீ எங்களுடன் பிறந்தவன் அல்ல. உன் முகத்தை நீரில் தெரியும் பிம்பத்தில் பார். நீ எங்கள் இனத்தை சேர்ந்தவன் அல்ல என்று கூறி விரட்டி அடித்தன.

தண்ணீரில் தனது முகத்தைப் பார்த்த வெள்ளைக் குஞ்சு மிகவும் கவலையுற்றது. தான் எந்த இனத்தைச் சேர்ந்தவன் என்பது புரியாமல் குழம்பியது. இந்த உலகத்திலேயே தான்தான் மிகவும் அசிங்கமான பிறவி என்று நினைத்து அழ ஆரம்பித்தது.

இரவு நெருங்க எங்கே போவதென்று தெரியாமல் ஆற்றின் கரையில் இருந்த புதரில் தூங்கிப் பொழுதைக் கழித்தது.

மறுநாள் தனக்கு ஒரு புது வீடு தேடி காட்டினுள் நடக்க ஆரம்பித்தது. அப்போது ஒரு புதரின் நடுவே இருந்த பறவையின் கூட்டுக்குள் இருந்த இரண்டு குஞ்சுகள் வெள்ளை குஞ்சை அழைத்தன. வெள்ளை குஞ்சும் மகிழ்ச்சியுடன் தனக்கு ஒரு வீடு கிடைத்து விட்டதை எண்ணி மிகவும் மகிழ்ந்தது. பகல் நேரம் முழுதும் அந்தக் குஞ்சுகளுடன் விளையாடி மகிழ்ந்தது. மாலை நேரம் கூட்டுக்கு உணவுடன் வந்த அந்தக் குஞ்சுகளின் தாய் குஞ்சுகளுக்கு உணவு ஊட்ட முயன்றபோது மிகவும் பசியுடன் இருந்த வெள்ளைக் குஞ்சும் அதைவாங்க முயன்றது. அப்போதுதான் தன் கூட்டில் இருந்த வெள்ளைக் குஞ்சைக் கவனித்த தாய்ப் பறவை உடனே கோபத்துடன் அதைத் தனது கூட்டில்இருந்து விரட்டிஅடித்தது. பயந்து ஓடிய வெள்ளைக்குஞ்சு ஒரு புதரில் மறைந்து கொண்டு அழ ஆரம்பித்தது.

இப்படியே சில நாள்கள் அலைந்து திரிந்து எதிர்பட்ட பறவைகள் எல்லாம் வெள்ளைக் குஞ்சைத் தங்கள் இடத்தில் சேர்த்துக்கொள்ளாமல் விரட்டி அடிக்க, இறுதியாக ஒரு ஆற்றை வந்தடைந்து மிகவும் சோகத்துடன் உட் கார்ந்திருந்தது.

அது தன் நிலையை எண்ணி அழுது கொண்டிருந்தபோது தன்னை போலவே தோற்றம் உடைய மற்றொரு குஞ்சைப் பார்த்தது. முதலில் குழம்பிப் போய் பின்னர் மிகவும் மகிழ்ச்சியடைந்தது. சிறிது நேரத்தில் அந்தக் குஞ்சைத் தேடி மேலும் சில வெள்ளைக் குஞ்சுகள் வர நம் கதாநாயகன் வெள்ளைக் குஞ்சுக்கு சந்தோசம் தாழவில்லை. தண்ணீரில் குதித்து விளையாடி மகிழ்ந்தது. அந்தக் குஞ்சுகளும் வெள்ளைக் குஞ்சுடன் சந்தோஷமாக விளையாடின.



அப்போது அங்கே வந்த அந்தக் குஞ்சுகளின் தாய் குழந்தைகளே நேரம் ஆகிறது போகலாம் வாருங்கள் என்றழைத்தது. உடனே சகல குஞ்சுகளும் தாய் பின்னால் போக அந்தக் குஞ்சுகள் அன்னப்பறவை இனம் என்பதைக் கண்ட வெள்ளைக் குஞ்சு அவைகளுடன் போகாமல் மீண்டும் கரையில் சோகத்துடன் வந்த மர்ந்தது.

அப்போது அதனைக் கவனித்த தாய் அன்னப் பறவை தனது குஞ்சுகளை அனுப்பி அந்த வெள்ளைக் குஞ்சை வரவழைத்தது. தாய் அன்னம் வெள்ளைக் குஞ்சிடம், ஏன் நீ மிகவும் சோகமாக இருக்கிறாய்? உன் பெற்றோர் எங்கே? என்று கேட்டது.

வெள்ளைக் குஞ்சு தன் கதையை அதனிடம் சொல்லி அழுதது. உடனே தாய் அன்னம் கவலை படாதே செல்லமே. இனிமேல் நீ எங்களுடனே இருக்கலாம். என்னை உன் அம்மாவாக நினைத்துக்கொள் என்று கூறி அரவணைத்தது.

அதற்கு வெள்ளைக் குஞ்சு, "நான் எப்படி உங்களுடன் வர இயலும்? நான் உங்கள் இனத்தை சேர்ந்தவன் இல்லையே" என்று மிகவும் சோகத்துடன் கூறியது.

இதைக்கேட்ட தாய் அன்னமும் அதன் குஞ்சுகளும் விழுந்து விழுந்து சிரித்தன.

பின்னர் தாய் அன்னம் வெள்ளைக் குஞ்சை பார்த்து "இல்லை இல்லை என் செல்லமே நீ ஒரு அன்னப் பறவைதான். என் குஞ்சுகளைப் பார். வளர்ந்த பிறகு என்னை போல மிகவும் அழகான அன்னமாக நீ மாறுவாய். இந்த உலகத்திலேயே மிகவும் அழகான பறவை நீ" என்று கூறியது.

இதைக்கேட்ட வெள்ளைக் குஞ்சு சந்தோஷத்தில் குட்டிக் கரணம் போட்டது. "நான் அசிங்கமான பிறவி இல்லை. நான் ஒரு அன்னம். நான் ஒரு அன்னம்" என்று கூறி சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது


தாய் அன்னத்தைச் சுற்றி வட்டமிட்டது. பின்னர் தாய் அன்னத்தை முத்தமிட்டுக் கொஞ்சி மகிழ்ந்தது. தாய் அன்னமும் அதை அன்புடன் முத்தமிட்டு அரவணைத்தது. உடனே மற்றக் குஞ்சுகளும் வெள்ளைக் குஞ்சை முத்தமிட்டு இன்று முதல் நீ எங்கள் சகோதரன் என்று மகிழ்ச்சியுடன் கூறின. இரவு நெருங்க அனைவரும் சேர்ந்து ஒன்றாகக் கிளம்பினர். வெள்ளைக் குஞ்சு பாடியபடியே தாய் அன்னத்தைப் பின் தொடர்ந்து சென்றது. எல்லாரும் மிகவும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

க.சஹானா

## அட்டை பற்றிய தகவல்கள்

1. அட்டைக்கு இருதயம் கிடையாது.
2. தோல் செல்களுக்கிடையே ஓடும் நுண் குழாய்கள் வழியாகவே சுவாசிக்கின்றது.
3. இதன் உணவு இரத்தம். இரத்தத்தை உறையச் செய்யாது தடுக்கும் ஹருடின் சத்து இதற்கு உறிஞ்சும் பாகத்தில் சுரக்கிறது.
4. சத்திர சிகிச்சையின் போது ஹருடின் பொருள் பெரிதும் பயன்படும்.
5. புகையிலையில் உள்ள நிகோடின் இதற்கு அலர்ஜி.
6. அட்டை இருபால் உயிரினம். ஆணாகவும் பெண்ணாகவும் இருக்கும்.
7. அட்டை ஒருமுறை இரத்தத்தை உறிஞ்சினால் 10.12 மாதங்கள் கூட உணவின்றி இருக்கும்.

சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி.



## அறிவுத் துளிகள்

- 2003 ஆம் ஆண்டு ஐ.நா.அமைப்பின் மூலம் சர்வதேச நன்னீர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- எலி, அணில் முயலுக்கு பற்கள் மிக வேகமாக வளரும்.
- 1972ஆம் ஆண்டு இலங்கை குடியரசு நாடாக மாறியது.
- கிராஸ்டலாக் விம்பிள்டன் டென்னிஸ் விளையாட்டுக்குரியது.
- ஆசிரியாவின் பெரீஸ் என்றழைக்கப்படுவது தாய்லாந்து.

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

## என் அம்மா

*சோகங்கள் எனைச் சூழ்ந்த போதும்*
*சந்தோசம் இல்லாத போதும்*
*தளராமல் என் வாழ்வில்*
*வசந்த காலத்தைத் தந்தவள் நீயே*
*கரையில்லாக் கடலாகவும்*
*முடிவில்லா வானமாகவும் -உன்*
*அன்பை நான் உணர்ந்தேனே*
*என் அம்மா*
*உன்னை நான் கடவுளுக்கும் மேலாகப்*
*போற்றுகின்றேன்*
*ஏனெனில் தெய்வம் கருவறையில்தான் இருக்கும்*
*நானே உன் கருவறையில் இருந்து வந்ததால்*
*ஒரு துளியில் உருவாகி*
*உன் இரத்தம் உணவாகி*
*உயிர்பெற்று வந்தேனே என் அம்மா*



ச.லக்சிகா,
சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

# கரீபியன் பகுதியில் அழிந்து வரும் பவளப் பாறைகள்

கரீபியக் கடல் பகுதியில் இருக்கும் பவளப் பாறைகள் 20 ஆண்டுகளுக்குள் முற்றாக அழிந்துவிடக் கூடும் என்று இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச யூனியன் (ஐயுசிஎன்) கூறியுள்ளது. 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆய்வுகளில் கிடைத்த தகவல்களின்படி, 1970களில் இருந்ததை விட 50 சதவீதம் இந்தக் பவளப் பாறைகள் குறைந்துள்ளதாகத் தெரிகிறது. அதிக அளவிலான மீன் பிடித்த லும் நோய் களுமே இதற்குக் காரணம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையெனில், இந்த அழிவு தொடரும் என்றும்- ஆனால், பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டால், பவளப் பாறைகள் மீண்டும் வளரும் என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

பவளப்பாறைகள் பல நாடுகளையும் மக்களையும் பாதுகாக்கின்றன. அங்கு வசிக்கும் மக்களின் நலனுக்கு இந்த பவளப் பாறை களின் நலன் மிக முக்கியமானது. தவிர, அவை மிக அழகானவை என்கிறார் ஐயுசி என்னைச் சேர்ந்த கார்ல் குஸ்டாஃப் லண்டின். இந்த ஆய்வுக்காக 1970-2012 வரை பவளப் பாறைகள் இருக்கும் 90 இடங்களில் திரட்டப்பட்ட தகவல்கள் ஆராயப் பட்டன.

கரீபியக் கடல் பகுதியில் இருக்கும் பெரும்பாலான பவளப் பாறைகள் பெரும் மாற்றத்துக்கு உள்ளாகிவருகின்றன. அதாவது, உயிரோட்டமான, வண்ணமயமான தோற்றத்திலிருந்து ஆல்கேக்கள் படர்ந்த வெற்றுப் பவளப் பாறைகளாக அவை மாறி வருகின்றன என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

இந்த பவளப் பாறைகளில் வசித்துவந்த பல உயிரினங்கள் இல்லாமற் போனது தான் இந்த பாதிப்புக்குக் காரணம் என்கிறார்கள் நிபு ணர்கள்.

1980களில் பனாமா கால்வாயில் இருந்து பரவியதாகக் கருதப்படும் ஒரு நோயால், அந்தக் கடல் பகுதியில் இருந்த கடல் முள்ளெலிகள் பெரும் எண்ணிக்கையில் அழிந்தன. அதே போல, பவளப்பாறை இருக்கும் பகுதியில் நடந்த அதிக அளவிலான மீன் பிடித்தலால், கிளி மூக்குக் கொண்ட ஒரு வகை மீனினமும் வெகுவாகக் குறைந்து போனது. இந்த இரண்டு உயிரினங்களுமே பவளப் பாறைகளில் மேயக் கூடியவை. இந்த இரண்டு உயிரினங்களும் அழிந்துபோனதால் அவற்றை ஆல்கேக்கள் மூடி மறைத்தன. இருந்தபோதும், இந்த பவளப் பாறைகள் பாதுகாக்கப்பட்டால், பாதிப்படைந்த பவளப் பாறைகள் மீண்டும் உயிர்க்கும் என்கிறது இந்த ஆய்வு. கரீபியக் கடல் பகுதி மட்டுமல்ல, உலகம் முழுவதுமே இம்மாதிரி பவளப் பாறைகள் பாதிப்பிற்குள்ளாகியிருக் கின்றன. கடலின் வெப்ப நிலை உயர்வும் இந்த சேதத்துக்கு ஒரு காரணம் என்கிறார்கள் சூழலியல் ஆர்வலர்கள்.

கடலின்வெப்பம்உயர்ந்தால், பவளப் பாறைகளின் திசுக்களில் வசிக்கும் ஒரு வகை மெல்லிய ஆல் கேக்களை அவை இழந்துவிடும். இதன் காரணமாக, அவை வெண்ணிறமாக மாறிவிடும்.






# குறைந்து வரும் குருபக்தி



போக்கத்தவனுக்கு பொலிஸ் வேலை, வக்கத்தவனுக்கு வாத்தியார் வேலை என்ற பழமொழி கூறப்படுவதுண்டு. இதன் அர்த்தத்தை அறியாமல் சிலர், ஏளனமாகக் கூறுவதுண்டு. ஆனால், போக்குகத்தவனுக்கு பொலிஸ் வேலை, வாக்கத்தவனுக்கு வாத்தியார் வேலை என்பதன் சுருக்கம் தான் அது என்பது பலருக்கும் தெரிந்த விடயம் தான்.

சமுதாயத்தில் மாதா, பிதாவுக்கு அடுத்த நிலையில் குரு தெய்வமாக போற்றப் படுகின்றனர். மன்னர் காலம் தொட்டு, எத்தகைய உயர் நிலையில் இருப்பவரும் ஆசிரியருக்கு தலைவணங்குவர்.

வருவாய் குறைந்த நிலையிலும், தன்னிடம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, சிறந்த கல்வி போதிப்பதை கடமையாகச் செய்தனர். வீட்டில் வறுமை வாட்டி வதைத்தாலும், நேர்த்தியான உடையணிந்து மிடுக்காக கல்விச் சாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கு கல்வியைப் போதித்தனர். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், பாடங்களைச் சரியாகப் படிக்காவிட்டாலும் கண்டிப்பதில் பாகுபாடு காட்டுவதில்லை. பெற்றோர்களும் தங்களுக்குக் கிடைக்காத கல்வி அறிவை குழந்தைகள் பெறவேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினர்.

பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்களைச் சந்தித்து, தனது மகனை கடுமையாக தண்டித்தாவது படிக்க வையுங்கள் என்று மன்றாடிக்கேட்ட பெற்றோர்கள் ஏராளம். அந்தளவுக்கு கல்வியின் மீது பெற்றோர்களுக்கு மரியாதையும், ஆசிரியர்கள் மீது நம்பிக்கையும் இருந்தது. ஆசிரியர்களும் மாணவர்களை படிக்க வைப்பதற்கு முடிந்தளவு முயற்சி எடுப்பர்.

சரியாகப் படிக்காத மாணவர்களை கடுமையாக தண்டிக்கவும் செய்தனர். இதைப் பெற்றோர்களும் ஏற்றுக் கொண்டனர். வீட்டில் வறுமை காரணமாக கல்வியைத் தொடர முடியாமல் தவித்த ஏராளமான ஏழை மாணவர்களை, தங்களது சொந்தச் செலவில் படிக்க வைத்த ஆசிரியர்களும் உண்டு.

எத்தகைய உயர் பதவிகளை அடைந்த போதிலும், ஆசிரியரை நேருக்கு நேர் சந்திப்பதற்குக்கூட மாணவர்கள் தயக்கம் காட்டினர்.

மாணவர்களின் பெற்றோர்களும், ஆசிரியர்களுக்கு தனிமரியாதை கொடுப்பதும் வழக்கம். அந்தளவுக்கு சமுதாயத்தில் ஆசிரியர்கள் மரியாதையுடன் போற்றப்பட்ட பொற்காலம் அது.

காலப்போக்கில் கல்வி வியாபாரமாக்கப்பட்ட நிலையில், தற்போது ஆசிரியப் பணியின் மீதிருந்த மரியாதை மெச்சும் நிலையில் இல்லை. கல்வி போதிப்பதை சேவையாக செய்யும் ஆசிரியர்கள் பல ஆயிரம் பேர் இருந்தாலும், சில ஆசிரியர்களின் தவறான செயல்களால் அந்த இனத்துக்கு இருந்த கௌரவத்துக்கே ஆபத்து வந்துள்ளது.



பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்களைச் சந்தித்து, தனது மகனை கடுமையாக தண்டித்தாவது படிக்க வையுங்கள் என்று மன்றாடிக்கேட்ட பெற்றோர்கள் ஏராளம். அந்தளவுக்கு கல்வியின் மீது பெற்றோர்களுக்கு மரியாதையும், ஆசிரியர்கள் மீது நம்பிக்கையும் இருந்தது. ஆசிரியர்களும் மாணவர்களை படிக்க வைப்பதற்கு முடிந்தளவு முயற்சி எடுப்பர்.

இன்றைக்கு அரசுகளும் ஆசிரியர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து வருகின்றன. எந்தக் குழந்தையாக இருந்தாலும், தேவைப்படும்போது கண்டித்தால் தான், சொல்வதைக் கேட்கும். அந்தக் குழந்தை நல்வழியில் செல்லும். பெரும்பாலான ஆசிரியர்களும் சேவை மனப்பான்மையிலிருந்து விலகிச் செல்வதால், மாணவர்களின் மீது முழு ஈடுபாட்டைக் காட்டமுடியவில்லை என்பதை ஒப்புக்கொள்கின்றனர்.

கூட்டுக் குடும்பச் சிதைவு, வியாபார மாக்கப்பட்டுவரும் கல்வி போன்ற பல்வேறு காரணிகளால், ஆசிரியர்கள், மாணவர்கள் இடையேயான சுமுக உறவிலும் இணக்கம் இல்லாமல் போய்விட்டது. இதனால், கட்டுப்பாடு இழந்த காளையர்களாக மாணவர்களில் பலரும் தவறான வழிக்குச் செல்லும் நிலை உருவாகி யுள்ளது. தரமான கல்வி கேள்விக்குறியாகி வருகிறது.

ஆசிரியர்கள் சமுதாயத்தில் தங்களுக்குரிய உயர் நிலையிலிருந்து தடம் புரளாமல், தரமான கல்வியைப் போதிக்க வைராக்கியம் கொள்ள வேண்டும். மாணவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

ஆசிரியர் - மாணவர் உறவு மேம்பட வேண்டும். எந்தக் கல்வியாக இருந்தாலும், அதனைத் தரமாகக் கற்க மாணவர்களை ஆசிரியர்கள் ஊக்கப்படுத்த வேண்டும்.



# பிரச்சினை அறிவியலில் தீர்வு அரசியலில்

இராமியா



இன்று உலகை அச்சுறுத்திக் கொண்டு இருக்கும் பிரச்சினைகள் அனைத்தையும் விட, புவி வெப்ப உயர்வுப் பிரச்சினை தான் அதிகமாக அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறது என்று அறிவியல் அறிஞர்கள் மட்டும் அல்லாது ஐக்கிய நாட்டு அவைத் தலைவர்களும் தெளிவாகக் கூறிக் கொண்டு இருக்கிறார்கள்.

அண்டார்டிகா பகுதியில் சில ஆண்டுகளுக்கு முன்னர் உருகிக்கொண்டு இருந்த பனியின் அளவை விட, இவ்வாண்டில் உருகுதல் வேகம் இரு மடங்கு ஆகி இருக்கிறது என்று 2010 ஆம் ஆண்டு ஏவப்பட்ட செயற்கைக் கோள் அனுப்பிய தகவல்களை ஆராய்ந்து அறிவியல் அறிஞர்கள் கூறி உள்ளனர். இதுகுறித்து 20.5.2014 அன்று லண்டனில் கருத்து கூறிய டேவிட் [illegible] (David Vaughan) என்ற அறிவியல் அறிஞர், இப்பனி உருகுதல் கடல் மட்டத்தை உயர்த்தும் என்றும்; இதைத் தடுப்பதற்கு மனித குலம் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என்றும் கூறி உள்ளார்.

நேபாளத்தில் உள்ள பனிப்பாளங்கள் கடந்த 30 ஆண்டுகளில் 24 வீதம் உருகி மறைந்து போய் உள்ளதாக, அந்நாட்டின் பனிமலைப் பாளங்கள் பகுதியைப் பற்றி ஆராயும் அறிவியலாளர் சம்ஜ்வால் ரத்ன பஜ்ராச்சார்யா (Samjwal Ratna Bajracharya) 23.5.2014 அன்று காட்மாண்டுவில் வைத்துக் கூறினார்.

புவி வெப்ப உயர்வால் பனிமலைகளும், பனிப்பாளங்களும் உருகி, கடல் மட்டம் உயர்ந்து இருப்பதால், அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (National Aeronautics and Space Administration dNASA), விண்வெளி ஆராய்ச்சிக்காகக் கட்டிய கட்டடங்கள் நீரில் அமிழ்ந்து கொண்டு இருப்பதாக 24.5.2014 அன்று அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. இதனால் கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்கள் செலவில் கட்டப்பட்ட கட்டடங்கள் பயன்படுத்த முடியாமல் போகும் நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.

இமயமலைப் பகுதி, புவி வெப்ப உயர்வால் பாதிக்கப்படுவது குறித்து ஆராயும் ஆர்த்தூர் லட்ஸ் (Arthur Lutz) என்ற அறிவியல் அறிஞரின் ஆய்வு முடிவுகள் 1.6.2014 அன்று திருவனந்தபுரத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இமயமலை உருகுவதால் சிந்து, கங்கை, பிரம்மபுத்ரா, சல்வீன், மெகாஸ் நதிகளில் வெள்ளப் பெருக்கு அதிகமாகி உள்ளதாக அவ்வாராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளது.

அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள, அறிவியல் ஆய்வுகளால் மட்டுமே அறிந்து கொள்ள முடியக்கூடிய, இப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன? இதைப்பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அரசியல் தலைவர்களும் தன்னார்வத் தொண்டர்களும் கூறி வருகிறார்கள். அப்படியே ஏற்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள். இது நல்ல பயனையும் அளித்திருக்கிறது. மக்களிடையே புவி வெப்ப உயர்வு பற்றிய விழிப்புணர்வு குறித்து ஆராய்ந்த ஆற்றல் மற்றும் சாதன நிறுவனம் (The Energy and Resource Institute d TERI) 95 வீதத்துக்கும் அதிகமான மக்கள் இதைப் பற்றிய விழிப்புணர்வைப் பெற்று இருக்கிறார்கள் என்று 4.6.2014 அன்று புதுதில்லியில் தெரிவித்து உள்ளது. அவ்வாறு விழிப்புணர்வு பெற்ற மக்கள் புவி வெப்பத்தினால் உலகம் அழியாமல் பாதுகாப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன தெரியுமா?

உலகச் சுற்றுச் சூழல் தினத்தை 5.6.2014 அன்று கொண்டாடி இருக்கிறார்கள். அன்று சென்னையில் முதலாளியக் குழுமங்களும், அரச ஊழியர்களும், தன்னார் வத் தொண்டர்களும் இணைந்து ஊர்வலம் நடத்தி இருக்கிறார்கள்; மரக்கன்றுகளை நட்டு இருக்கிறார்கள். (அந்த மரக்கன்றுகள் வளர்வதற்கும், நிலைப்பதற்குமான ஏற்பாடுகள் எதுவும் செய்து இருப்பதாக எந்தவிதமான தகவலும் இல்லை.) அண்ணா பல்கலைக் கழக ஊழியர்கள் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு நாடகங்களை நடத்தி இருக்கிறார்கள். திருவனந்தபுரத்தில் 12,000 மாணவர்கள் ஒன்றிணைந்து ஒருமித்த குரலில் பாட்டுப் பாடி இருக்கிறார்கள். மும்பையில் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் புவி வெப்பத்தால் சுற்றுச் சூழல் எவ்வளவு பாதிப்படைகிறது என்று கணினி மயப்படுத்திக் கணக்கிடும் முறையை வடிவமைத்திருக்கின்றனர்.

யாரும் புவி வெப்பம் அதிகரிப்பதைத் தடுப்பது எப்படி என்றோ, ஏற்கனவே உயர்ந்து உள்ள வெப்பத்தை எப்படிக் குறைப்பது என்றோ விவாதித்ததாக (நினைத்ததாகக் கூட)த் தெரியவில்லை.

இன்று புவி வெப்ப உயர்வுப் பிரச்சினை ஏன் ஏற்பட்டு உள்ளது? கரி வளியை (Carbon di oxide) உமிழ்ந்து, புவி வெப்பத்தை உயர்த்தும் புகையை வெளியிடும் வாகனங்கள், ஆயுதங்கள் போன்ற பண்டங்களை அதிகமாக உற்பத்தி செய்வதாலும், கரி வளியை உள் இழுத்து உயிர் வளியை (Oxigen) வெளி யிட்டு, புவி வெப்பத்தைக் குறைக்கும் மரம் வளர்த்தல், வேளாண்மை போன்ற தொழில்கள் நலிவடைந்து வருவதாலும்தான் அவ்விதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை மாற்றி, புவி வெப்ப உயர்வுப் பொருள்களின் உற்பத்தியை வெகுவாகக் குறைக்கவும், புவி வெப்பத்தைக் குறைக்கும் பொருள்களின் உற்பத்தியை வெகுவாக அதிகரிக்கவும் என்ன செய்ய வேண்டும் என்று யாரும் ஏன் பேசவோ சிந்திக்கவோ மறுக்கின்றனர்? ஏனெனில் இது அறிவியல் பிரச்சினை அல்ல; அரசியல் பிரச்சினை. அதுவும் ஒரு நாட்டு அரசியல் பிரச்சினை அல்ல, உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான அரசியல் பிரச்சினை.

புவி வெப்ப உயர்வுப் பொருள்களின் உற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்றால் முதலாளித்துவப் பொருளாதார முறையில் அது முடியவே முடியாது. ஏனெனில் அவைதான் மிகுந்த இலாபத்தை அளிக்கும் பண்டங்களாக உள்ளன. ஏற்கனவே உள்ள பொருளாதார நெருக்கடியால் முதலாளிகள் தங்கள் மூலதனத்தை இலாபகரமாக ஈடுபடுத்தும் தொழில்கள் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்தநிலையில் வாகனங்கள், ஆயுதங்கள் போன்றவற்றை உறபத்தி செய்யக் கூடாது என்றால் மூலதனத்தை வைத்துக் கொண்டு முதலாளிகள் என்ன செய்வார்கள்?

அடுத்ததாக மரம் வளர்த்தலிலும் விவசாயத்திலும் மூலதனத்தை ஈடுபடுத்த முடியுமா? அவற்றில் இலாபம் குறைவு என்பது மட்டும் அல்ல; பல சமயங்களில் அவை இழப்பை அல்லவா ஏற்டுத்தி விடுகின்றன? அப்படிப்பட்ட தொழில்களில் மூலதனத்தை ஈடுபடுத்த முடியுமா? அப்படி என்றால் தீர்வு இல்லவே இல்லையா? நிச்சயமாகத் தீர்வு இருக்கிறது. அது உலக அரசியல் மாற்றத்தில் இருக்கிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையைக் காவு கொடுப்பது தீர்வின் முதல் கட்டம். நிகரமை (சோஷலிச) உற்பத்தி முறையை ஏற்பது இரண்டாவது கட்டம். முதலாளித்துவ உற்பத்தி முறையைக் காவு கொடுப்பதன் மூலம் புவி வெப்ப உயர்வுப் பொருள்களின் (அதாவது மனித குலத்தின் பெரும்பான்மையோருக்குப் பயன்படாத, மிக மிகச் சில மனிதர்களின் அயோக்கியத்தனமான திமிர் ஆசைகளுக்குத் தீனி போடும் பொருள்களின்) உற்பத்தியைத் தடுத்து நிறுத்த முடியும். நிகரமை உற்பத்தி முறையை ஏற்பதன் மூலம் புவி வெப்பத்தைக் குறைக்கும் (மனித குலத்தின் பெரும்பான்மையோர் பசி பட்டினி இல்லாமல் வாழ்வதற்குத் தேவையான) பொருள்களை மிகப் பெரியளவில் உற்பத்தி செய்ய முடியும்.

இதை அறிவியல் அறிஞர்களால் செய்து முடிக்க முடியாது. மக்களால் தான் செய்து முடிக்க முடியும். இன்றைய முதலாளித்துவ அரசியலை ஒழித்து விட்டு சோஷலிச அமைப்பை உருவாக்குவனால் மட்டுமே அது முடியும். உலக மக்கள் அனைவரும் இத்திசையில் ஒன்றிணைய நாம் அனைவரும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் ஈடுபடுவதற்கு இதைப் பற்றிய புரிதல் ஒன்றே போதுமானது. புவி வெப்பம் உலகை அழிவுப் பாதையில் கொண்டு செல்கிறது என்ற விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டு விட்டது; முதலாளித்துவ அமைப்பைக் காவு கொடுப்பதும் சோஷலிச அமைப்பை ஏற்பதும் தான் இப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவது அடுத்த பணி ஆகும்.



# நாம் இணையத்தள அடிமைகளா?



## ஆய்வு செய்ய உதவும் இணைய சேவைகள்

இணையப் பயன்பாடு பற்றிய புள்ளிவிவரங்கள் எப்போதுமே சுவாரஸ்யமானவை. இத்தகைய புள்ளிவிவரங்களை தரும் ஆய்வு அறிக்கைகளும் அவ்வப்போது வெளியாகின்றன. இணைய உலகில் ஏற்படும் மாற்றங்களையும் புதிய போக்குகளையும் அறிந்து கொள்ள இவை உதவுகின்றன. இணைய பயன்பாட்டை புரிந்து கொள்ளவும் இவை கைகொடுக்கின்றன.

அமெரிக்காவில் உள்ள பியூ ஆய்வு மையம் இணைய பயன்பாடு தொடர்பான ஆய்வில் முன்னிலை வகிக்கிறது. எல்லாம் சரி, இந்த ஆய்வுகளும் புள்ளிவிவரங்களும் பொதுவானவை. இவற்றுக்கு மாறாக தனிநபராக நீங்கள் இணையத்தைப் பயன்படுத்தும் விதத்தையும், உங்கள் இணையப் பயன்பாடு தொடர்பான புள்ளிவிவரங்களையும் தெரிந்து கொள்ள ஆர்வமாக இருக்கிறதா? இந்த ஆர்வத்தை நிறைவேற்றக்கூடிய இணைய சேவைகளும் இருக்கின்றன என்பதுதான் உற்சாகம் தரக்கூடிய தகவல். அத்துடன் நாம் இணையத் தளங்களுக்கு அடிமையாகிவிட்டோமா? என்று சோதித்துப் பார்த்துக் கொள்ள வும் உதவும் தளங்களிது.

### இணையதளங்கள் ஆய்வு

முதலில் உங்கள் இணையப் பயன்பாட்டை ஆய்வு செய்ய உதவும் சேவையான சர்ஃப்கோல்லென் பற்றிப் பார்க்கலாம். சுவீடன் நாட்டைச்சேர்ந்த இணைய நிறுவனம் வழங்கும் இந்த இணைய சேவை பிரவுசர் நீட்டிப்பாகச் செயற்படுகிறது. இந்தச் சேவை , நீங்கள் இணையத்தில் உலாவும் விதத்தை ஆய்வு செய்து அவற்றைப் புள்ளிவிவரங்களாக அளிக்கிறது.

இந்த சேவையைப் பயன்படுத்த, சர்ஃப் கோல்லென் இணையத் தளத்துக்கு (http://surfkoll.se/) சென்று அதன் பிரவுசர் நீட்டிப்பை கணினியில் செய்து கொள்ள வேண்டும். இப்போதைக்கு கூகிள் குரோம் மற்றும் மொசில்லாவின் பயர்பொக்ஸ் ஆகிய பிரவுசர்களில் மட்டுமே இது செயற்படுகிறது.

இதை இன்ஸ்டோல் செய்தவுடன், ஒரு வார காலத்துக்கு நீங்கள் இணையத்தில் சென்று பார்க்கும் இணையத் தளங்களை எல்லாம் கவனித்து, நீங்கள் இணையத்தைப் பயன்படுத்தும் விதம் தொடர்பான விவரங்களை முன் வைக்கிறது. அழகிய வரை படமாக அளிக்கப்படும் இந்த விவரங்களில், முதல் தகவல் கடந்த ஒருவார காலத்தில் நீங்கள் மொத்தம் எத்தனை இணையப் பக்கங்களை பார்த்திருக்கிறீர்கள் என்பது தொடர்பாக அமைகிறது. நீங்கள் பார்த்த மொத்த இணையப் பக்கங்களின் எண்ணிக்கை தரப்படுவதோடு, இந்த எண்ணிக்கை குறைவானதா, மிதமானதா அல்லது மிகவும் அதிகமானதா என்ற விவரமும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதன் மூலம் நீங்கள் இணையத்தில் எந்த அளவு நேரத்தை செலவிடுகிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாம்.

இரண்டாவதாக, ஒரு வார காலத்தில் நீங்கள் அதிகம் பயன்படுத்திய முதல் மூன்று இணையத்தளங்கள் பட்டியலிடப்படுகின்றன. இதன்மூலம் எந்தத் தளத்தில் நீங்கள் அதிக நேரத்தைச் செலவிடுகிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாம். இதைப்பார்த்தே உங்கள் நடவடிக்கையில் மாற்றம் தேவையா என்றும் தீர்மானித்துக்கொள்ளலாம். உதாரணத்திற்கு பேஸ்புக், யூடியூப் போன்ற தளங்களை நீங்கள் அதிகம பயன்படுத்தி யிருந்தீர்கள் என்றால் உங்கள் இணைய நேரம் பயனுள்ளதாக அமைந்ததா என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளலாம். அதே போல ஜிமெயிலும் அதில் இடம்பெற்றிருந்தால், நீங்கள் மெயில் பார்ப்பதில் அதிக நேரம் செலவிட்டதாகத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் மெயில் பயன்பாடு அலுவலகம் அல்லது வேலை சார்ந்ததாக இல்லை என்றால் இதையும் நீங்கள் குறைந்து கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக , ஒவ்வொரு நாளும் உங்கள் இணைய பயன்பாடு ஒப்பிடப்பட்டு, எந்த நாளில் அதிக நேரம் இணையத்தில் செலவிட்டு இருக்கிறீர்கள் என்று காண்பிக்கப்படும். ஒருவார கால இணைய பயன்பாடு மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், நீங்கள் இணையத்தை எப்படிப் பயன்படுத்துகிறீர்கள் என்பதை இந்த புள்ளிவிவரங்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். இந்தப் புள்ளிவிவரங்கள் தனித்தனியாக மற்றும் அனைத்தும் ஒரே வரைபடமாகவும் காண்பிக்கப்படுகின்றன. உங்கள் இணையப் பழக்கத்தை இப்படி வரைபடமாகப் பார்க்க முடிவதே உற்சாகத்தை தரலாம்.

இந்த அடிப்படையில் உங்கள் இணையப் பழக்கத்தில் மாற்றத்தையும் செய்து கொள்ளலாம். ஒவ்வொரு வாரமாக இணையப் பயன்பாடு பற்றிய விவரங்களைக் கொண்டு குறிப்பிட்ட கால அளவில் உங்கள் இணைய செயற்பாட்டையும் அலசி ஆராயலாம். நீங்கள் எந்த இணையதளங்களை அதிகம் பார்வையிடுகிறீர்கள் என்ற விவரம் உங்களுக்கே கூட தெரியாமல் இருக்கலாம். ஆனால் இந்தச் சேவை அதை அழகாக கவனித்து சொல்கிறது.

மேலும் இணைய பயன்பாடு தொடர்பான புள்ளிவிவரங்களையும் நீங்கள் ஈ-மெயில் மூலம் அல்லது பேஸ்புக்கிலும் பகிர்ந்து கொள்ளலாம். உங்கள் இணைய பயன்பாட்டை ஆய்வு செய்யும் இந்தச் சேவை, நீங்கள் உலாவும் போது தனிப்பட்ட தளங்களை பற்றிய விவரங்களையோ அல்லது நீங்கள் பகிர்ந்து கொள்ளும் தகவல்களையோ சேமித்து வைக்கவில்லை என்று உறுதி அளிக்கிறது. இணைய கண்காணிப்பு யுகத்தில் இது மிகவும் முக்கியமானது.

### ஈ-மெயில் ஆய்வு

உங்கள் இணையப் பயன்பாட்டை ஆய்வு செய்வது போலவே, நீங்கள் ஈமெயிலைப் பயன்படுத்தும் விதத்தையும் ஆய்வு செய்து அறிந்து கொள்ளலாம் தெரியுமா? அதற்காக என்றே ஜிமெயில் மீற்றர் இருக்கிறது. ஜிமெயில் மீற்றர், உங்களுக்கு எத்தனை பேரிடம் இருந்து ஈ-மெயில்கள் வந்துள்ளன, அவற்றில் முக்கியமானவை மற்றும் நட்சத்திர குறியுடன் சேமிகப்பட்டவை எத்தனை போன்ற விவரங்களைச் சொல்கிறது. அதே போல் நீங்கள் எத்தனை மெயில்களை அனுப்பியிருக்கிறீர்கள் என்ற விவரத்தையும் தருகிறது. அது மட்டுமா? உங்கள் தினசரி மெயில் பயன்பாடு பற்றிய விவரங்களையும் வரைபடமாகப் பார்க்கலாம்.

ஜிமெயிலில் வரும் மெயில்களை வகைப்படுத்திக்கொள்ளும் வசதி இருக்கிறது தெரியுமா? மெயில்களை நீங்கள் நீக்கலாம், இன்பொக்சிலேயே விட்டு வைக்கலாம், குறிப்பிட்ட தலைப்புகளில் சேமிக்கலாம். இவற்றை எல்லாம் கணக்கிட்டு வரைபடமாகவும் அளிக்கிறது இந்தச் சேவை. அதேபோல ஒரு மெயிலுக்கு பதில் அளிக்க நீங்கள் எடுத்துக்கொள்ளும் நேரம், உங்களுக்கு பதில் வர ஆகும் நேரம் , உங்கள் மெயில்கள் எந்த அளவுக்கு நீளமாக இருக்கின்றன என்பது போன்ற விவரங் களையும் இந்த மீற்றர் கண்டறிந்து சொல்கிறது.

ஈ-மெயிலில் நீங்கள் உரையாடல் நிகழ்த்துகிறீர்களா என்பதையும் இது கவனிக்கிறது. அதிக மெயில் அனுப்புகிறவர், அதிக மெயில் பெறுபவரையும் இது அடையாளம் காட்டுகிறது. நிச்சயமாக இணைய சேவைகளில் நீங்கள் அதிகம் பயன்படுத்துவது ஈமெயிலாகத் தான் இருக்கும். ஈ-மெயில் பயன்பாடு உங்கள் நேரத்தையும் செயல் திறனையும் பாதிக்கலாம். உங்களை அறியாமலே நீங்கள் ஈ-மெயிலில் அதிக நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கலாம். அல்லது ஈ-மெயில் பயன்பாட்டில் தவறான முன்னுரிமை கொண் டிருக்கலாம். அவற்றை எல்லாம் சரி செய்ய, உங்கள் ஈ-மெயில் பயன்பாட்டை அறிக்கையாக அளித்து உதவுகிறது ஜிமெயில் மீற்றர். கூகுளின் அனுமதி பெற்ற சேவை இது என்பது குறிப்பிடத்தக்கது. கூகுள் டொக்குமெண்ட்டுக்குள் சென்று அதில் ஸ்பிரெட்ஷீட்டை ஓபன் செய்து ஜிமெயில் மீற்றரை தெரிவு செய்ய வேண்டும்.




### பேஸ்புக் பயன்பாடு

ஜிமெயில் போலவே பெரும்பாலான இணையவாசிகள் அதிகம் பயன்படுத்துவது சமூக வலைப்பின்னல் சேவையான பேஸ்புக் தான். இணையவாசிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதும் பேஸ்புக் பயன்பாடு குறித்துத் தான். நீங்களும் பேஸ்புக் பயன்பாடு பற்றி அறிந்து கொள்ள விரும்பினால் , மிகச்சிறந்த மாற்று தேடியந்திரமான வோல்பிராம் ஆல்பா , அந்த வசதியை வழங்குகிறது. கணக்கீட்டு இயந்திரம் என பிரபலமாக குறிப்பிடப்படும் வோல்பிராம் ஆல்பாவில் பேஸ்புக் பயன்பாட்டிற்கான தனிப்பட்ட ஆய்வு அறிக்கையை வழங்குகிறது. (http://www.wolframalpha.com/facebook). பேஸ்புக் கணக்கை இந்த தேடியந்திரம் அணுக அனுமதி கொடுத்தீர்கள் என்றால் பேஸ்புக்கை நீங்கள் எப்படிப் பயன்படுத்துக்கிறீர்கள் என்று அழகாகப் புரிய வைத்து விடுகிறது.

online facebokk report 2

உங்கள் வலைப்பின்னலில் இருக்கும் நண்பர்கள் யார்?. அவர்கள் உலகில் எங்கு இருக்கின்றனர்? அதிக தொலைவில் உள்ளவர்கள் யார்? உங்கள் நண்பர்களுக்கு எத்தனை நண்பர்கள் உள்ளனர் ஆகிய விவரங்கள எல்லாம் அறிக்கையாக பெற்றுக்கொள்ளலாம். பேஸ்புக்கில் நீங்கள் என்ன விதமான கருத்தைப் பயன்படுத்துகிறீர்கள், எப்போது பேஸ்புக்கை அதிகம் பயன்படுத்துகிறீர்கள் உள்ளிட்ட விவரங்களும் அறிகையில் இருக்கும். இன்னும் என்ன வேண்டும் ? பேஸ்புக்கில் நீங்கள் தெரிவித்த கருத்துக் களில் அதிகம் விவாதிக்க்கப்பட்டவை, பகிர்ந்து கொண்ட புகைப்படங்களில் அதிகம் விரும்பபட்டவை போன்ற விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம். இவ்வளவு ஏன், உங்கள் பேஸ்புக் நண்பர்கள் தொடர்பான புதிய புரிதலையும் பெறலாம்.

# இளவரசி டயானாவின் வாழ்வும் சாவும்



உலகின் அத்தனை இதயங்களையும் கவர்ந்தவர் டயானா. பார்த்தவுடனே பளிச் சென்று அனைவரையும் கவரும் அவரது சிரிப்பு... இளவரசியே ஆனாலும் அயல் வீட்டுப் பெண் போன்று பழகும் எளிமை... என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

வேல்ஸ் இளவரசியான டயானா (இயற் பெயர்: பிரான்செஸ் ஸ்பென்சர்) 1961 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி நடுத்தர குடும்பத்தில் பிறந்தார்.

அவரது அக்காவின் பெயர் ஜேன். எலிசபெத் மகாராணியின் செயலாளரைத் திருமணம் செய்து கொண்டார், எனவே அவ்வப்போது நடைபெறும் அரண்மனை விழாக்களிலும் டயானா கலந்து கொள்வதுண்டு. அப்படி யொரு விழாவில் கலந்து கொண்டபோது தான், சார்ள்ஸ்- டயானா இருவரும் நெருங் கிப் பழக ஆரம்பித்தனர்.

டயானாவின் அழகு, நடத்தை மற்றும் சார்ள்ஸின் பிடிவாதம் என்று பல காரணங் களுக்காக மகாராணி எலிசபெத் அவர்களது திருமணத்துக்கு சம்மதம் தெரிவித்தார். இளவரசர் சார்ள்ஸுடன் டயானா திருமண ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து டயானா பொது வாழ்வில் ஒரு முக்கிய புள்ளியாகக் கருதப்பட்டார்.

அதுவரை பிரிட்டன் மக்கள் பார்த்து வந்த அரச குடும்பத்து மனிதர்கள் வேறு. இறுக்கமான முகம், நாங்கள் ராஜவம்சத்தினர் என்கிற தோரணை, தங்க வட்டத்துக்குள் ராஜ வாழ்க்கை. அந்தக் குடும்பத்துக்கு உள்ளே நுழையும் போதே நான் வேறு என்று நிரூபித்துவிட்டவர் டயானா.

பத்தொன்பது வயதில் சார்ள்ஸைக் கரம் பிடித்து பக்கிங்ஹாம் அரண்மனைக்குள் நுழைந்தார்.

மிக விரைவாக மக்களின் இதயத்தில் இடம் பிடித்துவிட முடிந்தது அவரால். உலகத் தொழு நோயாளிகள், புற்று நோயால் பாதிக்கப்பட்ட வர்கள், எய்ட்ஸ் நோயாளிகள் அத்தனை பேரும் டயானாவுக்கு சிநேகிதமானார்கள்.

எய்ட்ஸ் நோயாளிகளைத் தொட்டுப் பேசுவ தால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது என்பதை உலகுக்கு முதன் முதலில் எடுத் துரைத்தவர் டயானாதான்.

கணவரின் மேல் டயானா, அளவுக்கு அதிக மான காதல் கொண்டிருந்ததார். கமீலா என்ற திருமணமான பெண்ணுடன் சார்ள்ஸுக்கு முன்பிருந்தே ஒரு உறவு இருந்து வருகிறது. அது தங்களது திருமணத்தின் பின்னரும் தொடர்கிறது என்று தெரிந்தபோது, டயானாவால் அதைத்தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. திருமணமான முதல் வருடத் திலேயே இதனால் இருவருக்கிடையேயும் பிரியம் குறைந்தது. மனம் வெறுத்து டயானா சில முறை தற்கொலை முயற்சியில்கூட ஈடுபட் டிருக்கிறார்.

தனது சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சி னைகளை மறக்க, பல சமூக நலத் திட்டங் களில் மேன்மேலும் அதிகமாக ஈடுபட ஆரம் பித்திருந்தார் டயானா.



அவரது தனி வாழ்க்கையில் கிடைத்த ஏமாற்றங்களால் ராணி யையும் இளவரசரையும் வெறுப்பேற்று வதற்காகவே பல ஆண்களைத் துரத்த ஆரம்பித்தார்.

சார்ள்ஸ் - டயானா விரிசல் இந்தளவுக்கு பகிரங்கமான பின்னர் விவகாரத்துத்தான் ஒரே வழி என்று மகாராணியே வற்புறுத்த, விவா கரத்து இடம்பெற்றது.

அரபு நாட்டைச் சேர்ந்த கோடீஸ்வரரான முகமது ஹல் என்பவரின் மகன் டோடியுடன் டயானாவுக்கு ஏற்பட்ட நெருக்கம் புதிய சர்ச்சை களுக்கு இடம் கொடுத்தது.

பரிஸில் 1997 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 31 இல் ரிட்ஸ் உணவகத்தில் மாலை உணவுக்குப் பின் காரில் டயானா, டோடி, ஒரு பாதுகாப்பாளர் மற்றும் ஓட்டுநர் பயணித்துக் கொண்டிருந்தார் கள். வேறு ஒரு வாகனம் அவர்களின் காரைத் துரத்தியது. அந்த வாகனத்தில் இருந்தோர் பத்திரிகை புகைப்படக்காரர்கள். அவர்களிட மிருந்து தப்பிச்செல்ல வேண்டும் என்ற வேகத்தில் மணிக்கு 150 கிலோமீற்றர் வேகத் தில், பறந்தது டயானாவின் கார்.

விளைவு? கோரவிபத்து! டோடியும், கார் சாரதியும் அந்த இடத்திலேயே உயிரிழக்க, உயிருடன் இருந்த டயானாவை மட்டும் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். எவ்வளவு முயன்றும் இள வரசியைக்காப்பாற்ற முடியவில்லை. அவர் இறந்த செய்தி கேள்விப்பட்ட மக் கள் கண்ணீரில் மூழ் கினர்.

பல்லாயிரக்கணக்கான மலர்கள் அந்த இனி மையான இளவரசி யின் கல்லறைக்கு இன் னமும் வந்து குவிந்து கொண்டுதான் இருக் கின்றன.



# முதலாம் உலகப்போரின் நூற்றாண்டு நிறைவில்!

இரசாயன ஆயுதங்களாலும், போர் நியதிகளை மீறிய கடற் படைத் தாக்குதல்களாலும் கணக் கில் அடங்காத ஆயுதங்களாலும், அதன் பின்விளைவுகளால் உரு வான நோய்களாலும் பல லட்சம் சாமான்ய மக்களைக் கொன்று குவித்த, முதலாவது உலகப் போரின் அவலம் இன்றும் ஆறாத வடுக்களாகவே இருக்கின்றன. அப்படிப்பட்ட முதலாவது உலகப் போர் ஆரம்பித்து இந்த ஆண்டு டன் நூறு ஆண்டுகள் நிறை வடையவுள்ளன.

ஐரோப்பாக் கண்டத்தைச் சுற்றி யுள்ள பல முனைகளில் நேச நாடு கள் மைய நாடுகளுக்கு இடையே தான் முதலாவது உலகப் போர் நடைபெற்றது. எல்லைப் பிரச் சினை, நாடு பிடித்தல், ஆக்கிர மிப்பு, பொருளாதாரப் போட்டிகள் மற்றும் இராணுவ வாதம் போன் றவை இந்தப் போரின் பின்புலக் காரணிகளாக இருந்தன.

நேச நாடுகள் அணியில் பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா, ஜப்பான், இத் தாலி, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளும், மைய நாடுகளின் கூட்டணியில் ஜேர்மனி, ஆஸ் திரியா, ஒட்டோமான் பேரரசு மற்றும் பல்கேரியா ஆகியவையும் இடம் பெற்று இருந்தன.

இந்த நாடுகளுக்கிடையே புகைந்து கொண்டிருந்த பகை, பற்றிக் கொள் வதற்கு காரணம் ஒரு கொலை. அதாவது, 1914 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் திகதி ஆஸ்திரிய இள வரசரான பிரான்சிஸ் பெர்டினாண் டும், அவருடைய மனைவி சோஃபி யாவும் போஸ்னியா தலைநகர் செரஜிவோவில், காவ்ரீலோ பிரின் சிப் என்ற செர்பிய நாட்டு இளை ஞனால் சுட்டுக் கொல்லப்பட்டமை தான், முதலாவது உலகப் போர் தொடங்குவதற்கான தொடக்கப் புள்ளி என்கிறது வரலாறு.



இதன் காரணமாக செர்பியா மீது படையெடுத்து முதல் உலகப்போரைத் தொடங்கி வைத்தது ஆஸ்திரியா. நேச நாடுகளுக்கும், மைய நாடு களுக்கும் இடையே தரையிலும், கடலிலும், வானிலும் பயங்கரச் சண் டைகள் நடந்தன. நீர் மூழ்கிக் கப்பல் களையும், போர் விமானங் களை யும் ஜேர்மனி அதிகளவில் பயன் படுத்தி நேச நாடுகளுக்கு கடும் சேதத்தை உண்டாக்கியது.

போரில் விஷப் புகையைப் பயன் படுத்தக்கூடாது என்று எல்லா நாடு களும் ஒப்புக் கொண்டிருந்தாலும், அதை மீறி ஜேர்மனி விஷ வாயு வைப் பயன்படுத்தி எதிரிகளைக் கொன்று குவித்தது. தொடக்கத்தில் ஜேர்மனிக்கு வெற்றிகள் கிடைத் தாலும், முடிவில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று நாடு களின் படைகளும் ஜேர்மனியை நோக்கி விரைந்தன.

இதனால் ஜேர்மனி மக்கள் அச்ச மடைந்து மன்னர் கெய்சருக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டனர். மக்களை அடக்க உலகப் போரில் ஈடுபட்டிருந்த ஜேர்மனிப் படைகள், சொந்த மக்களையே சுட்டுக் கொல்ல நேர்ந்தது. நேச நாடுகளின் படைகள் 1918 .11. 11 அன்று ஜேர்மனியின் தலைநகர் பெர்லினுக்குள் நுழைந்தன. இந்தப் பெரும் படைகளின் தாக்கு தலைத் தாக்குப்பிடிக்க முடியாமல், சிறிது நேரத்தில் ஜேர்மனி சரண் அடைந்தது. பதவியைத் துறந்த ஜேர்மனி மன்னர் கெய்சர் நாட்டை விட்டு வெளியேறினார். 1,561 நாள் கள் நடைபெற்ற போரிலும், அதைத் தொடர்ந்து, உலகம் முழுவதும் பரவிய விஷக்காய்ச்சலாலும் 2 கோடி பேர்வரை மாண்டனர்.

சுமார் 60 ஆயிரம் கோடி ரூபா செல வான முதலாவது உலகப் போரில் பல நகரங்களும், ஊர்களும், தொழிற் சாலைகளும், பாலங்களும், அணை களும், அழிந்தன. முதல் உலகப் போர் உருவாக்கிய தவறான முன் மாதிரிகள், ஏற்படுத்திய அரசியல் குழப்பங்கள், தந்திரங்கள் ஆகி யவை, ஆழமான பாதிப்பை இன் றும் ஏற்படுத்தி வருகின்றன.

நேச நாடுகளுக்கும், மைய நாடுகளுக்கும் இடையே தரையிலும், கடலிலும், வானிலும் பயங்கர சண்டைகள் நடந்தன. நீர் மூழ்கிக் கப்பல்களையும், போர் விமானங்களையும் ஜேர்மனி அதிகளவில் பயன் படுத்தி நேச நாடு களுக்கு கடும் சேதத்தை உண்டாக்கியது.